21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 21 | பாலம் 10 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2011

# தமிழ் நாட்டில் அதிமுக அமோக வெற்றி

234 உறுப்பினர்களை கொண்ட தமிழக சட்டசபைக்கு கடந்த ஏப்ரல் 13, 2011 இல் ஒரே நாளில் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் 79 வீதமான மக்கள் வாக்களித்திருந்தார்கள். தமிழ்நாடு முழுவதும் 91 இடங்களில் வைத்து மே 13, 2011 இல் வாக்குகள் எண்ணப்பட்டன.



தமிழக சட்டமன்ற தேர்தல் முடிவுகளின்படி செல்வி ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக்கழக (அதிமுக) கூட்டணி 203 இடங்களில் வெற்றி பெற்றும், கலைஞர் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழக (திமுக) கூட்டணி 31 இடங்களில் வெற்றி பெற்றும் உள்ளன.

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தனித்தே 150 இடங்களில் வெற்றி பெற்று இருப்பதால் செல்வி ஜெயலலிதா தனித்தே அறுதிப் பெரும்பான்மையை பெற்றுள்ளார். செல்வி ஜெயலலிதா தமிழகத்தில் கடந்த ஐந்து வருடங்களாக இருந்த திமுக வின் சிறுபான்மை ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து மீண்டும் திராவிடக் கட்சியின் தனிப் பெரும்பான்மை ஆட்சியை கொண்டு வந்து சாதனை படைத்துள்ளார். இவர் எதிர்வரும் மே 16, 2011 இல் தமிழக முதலமைச்சராக பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரைகாலமும் ஆட்சியில் இருந்த திமுக வை மூன்றாம் இடத்திற்கு பின்தள்ளிய கப்டன் விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் (தேமுதிக) சட்டமன்றத்தில் உத்தியோகபூர்வமான எதிர்கட்சியாகிறது. கடந்த தேர்தலில் ஒரே ஒரு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட விஜயகாந்த் இம்முறை 27 உறுப்பினர்களுடன் சட்டமன்றம் சென்று எதிர்க்கட்சி தலைவர் ஆகிறார். கடந்த முறை ஆட்சியில் 163 கூட்டணி உறுப்பினர்களுடன் இருந்த திமுக இம்முறை எதிர்கட்சி என்ற அந்தஸ்தைக் கூட பெறமுடியாமல் மிக மோசமான தோல்வியை அடைந்துள்ளது. திமுக தோல்வியடைந்தாலும் கலைஞர் கருணாநிதி 13 வதுமுறை சட்டசபை தேர்தலில் தொடர்ந்து வென்று சாதனை படைத்துள்ளார். இதுவரை தமிழகத்தில் எந்த அரசியல் தலைவரும் இதுபோல் அதிக முறை வெற்றி பெற்றதும் இல்லை, தொடர்ச்சியாக வென்றதும் இல்லை. இதைவிட கலைஞர் ஐந்துமுறை முதல்வராக இருந்தும் சாதனை படைத்துள்ளார்.

இம்முறை தேர்தலில் திமுக தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து அது குறித்து பேசிய கலைஞர் ‘மக்கள் எனக்கு ஓய்வளித்துவிட்டனர்.’ என்று அவரது பாணியில் கூறினார். அதைத் தொடர்ந்து அவர் தனது முதலமைச்சர் பதவியை அவரது அமைச்சரவையுடன் சேர்ந்து ராஜினாமா செய்தார். தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றுள்ள செல்வி ஜெயலலிதா 3வது முறையாக முதல்வராக பதவியேற்க உள்ளார். இவர் தற்போது 6வது முறையாக சட்டசபை உறுப்பினர் ஆகிறார்.

1948ஆம் ஆண்டு தமிழ் ஐயங்கங்கார் குடும்பத்தில் பிறந்த ஜெயலலிதாவிற்கு பெற்றோர் இட்ட பெயர் கோமளவள்ளி. பெங்களூரிலுள்ள பிஷப் காட்டன் மகளிர் உயர் நிலைப்பள்ளியில் ஆரம்பபடிப்பை முடித்தவர். அதன் பின்னர் தாயார் சந்தியாவுடன் சென்னைக்கு இடம்பெயர்ந்து அங்கு சர்ச் பார்க் கொன்வென்ரில் படிப்பைத் தொடர்ந்தார். படிப்பை இடையில் நிறுத்திவிட்டு தாயார் வழியில் ‘ஜெயலலிதா’ என்ற பெயருடன் நடிக்க ஆரம்பித்தார். சில கன்னடப்படங்களிலும், ஆங்கிலப்படம் ஒன்றிலும் நடித்த பின்னர் ‘வெண்ணிற ஆடை’ படம் மூலம் தமிழில் அறிமுகமானார். தொடர்ந்து தெலுங்கு, இந்திப்படங்களிலும் நடித்துப் பெயர் பெற்றார். எம்.ஜி. ஆருடன் அதிக படங்கள் நடித்ததன் மூலம் தமிழில் பிரபலமானார். எம்.ஜி.ஆர் அதிமுக தொடங்கிய போது அதில் அவரும் இணைந்தார். அதிமுகவினர் மத்தியில் எம்.ஜி. ஆரின் வாரிசாக பார்க்கப்பட்டார். எம்.ஜி. ஆர் இன் மறைவுக்குப் பின்னர் கட்சி உடைந்த போதும் மக்கள் ஜெயலலிதா தலைமையிலான அணிக்கே ஆதரவு தந்தார்கள். அதை தொடர்ந்து மீண்டும் அதிமுக

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
RBC Royal Bank®
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# 41வது கனேடிய தேர்தல் களம்

தேர்தல் திருவிழா முடிந்து விட்டது. ஆனால் எதிர்பாராத பல நிகழ்வுகள் நடந்தேறின. இரு தலைவர்கள் தமது பதவியை இழந்து விட்டார்கள். மற்றைய மூவரும் தமது பதவியைத் தக்கவைத்துக்கொண்டார்கள். நாலு கட்சிகள் அலங்கரித்துக்கொண்டிருந்த கனடிய நாடாளுமன்றத்தை இம்முறை ஐந்து கட்சிகள் அலங்கரிக்கின்றன. புதிதாக இணைந்து கொள்பவர் பசுமைக்கட்சியின் (Green Party) தலைவர் எலிசபெத் மே. இவர் இம்முறை முதல் தடவையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை ரொறொன்ரோ பகுதியில் பழமைவாதக் கட்சியின் நிறமான நீலத்தை காண்பதே அரிதாக இருந்தது. ஆனால் இந்நிலைமை மறைந்தது. உதாரணமாக ஸ்காபரோவில் இருக்கும் 6 தொகுதிகள் வழமையாக சிவப்பு நிறமாகவே காணப்படுவது இயல்பு. இம்முறை இத்தொகுதிகள் மூன்று முக்கிய கட்சிகளுக்கும் இவ்விரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டன.




37 நாட்கள் நடைபெற்ற அரசியல் பிரசாரத்தில் பல மாற்றங்கள் நடைபெற்று முடிந்துள்ளன. புதிய ஜனநாயகக்கட்சி (New Democratic Party - NDP) இன் தலைவர் ஜக் லேட்டனின், பிரெஞ்ச் மொழியிலான விவாதத்திற்குப் பின்பாக நிலைமை மாறத்தொடங்கியது. பிரெஞ்சு மொழியிலான விவாத மேடையில் ஜக லேட்டனின் திறமையான செயற்பாடு கியூபெக் மக்களை மிகவும் கவர்ந்தது. இதனால் இவர் மீதான பார்வை திரும்பியது. அங்கு தொடங்கிய மாற்றம் சிறிது சிறிதாக நாடு முழுவதும் பரவத்தொடங்கியது. இந்த அலை அரசியல் சதுரங்கத்தையே மாற்றி அமைத்தது. அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு. கியூபெக்கில் 19 வயதான பல்கலைக்கழக மாணவன் தெரிவு செய்யப்பட்டது நல்ல உதாரணம்.

அத்துடன் பழமைவாதக்கட்சிக்கு ரொறொன்ரோவில் கடந்த 20 ஆண்டுகளாக கனவாக இருந்த பலவிடயங்கள் நனவாக மாறிவிட்டன. இதுமட்டுமல்லாமல், லிபரல் கட்சியின் தலைவரான மைக்கல் இக் நாற்றிவ் இன் பதவி பறிபோனதுடன் அவர்களிடமிருந்த தொகுதிகளையும் இழந்தது லிபரல் கட்சிக்கு மிகப்பெரிய பாடம்.

இம்முறை ஸ்காபரோவில் இரு தமிழர்கள் போட்டியிட்டார்கள். ஸ்காபரோ றூஜ் இல் போட்டியிட்ட ராதிகா சிற்சபைஈசன் வெற்றியீட்டி இலங்கைத்தமிழர்களின் முதலாவது தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியாக கனடிய நாடாளுமன்றம் செல்வது குறிப்பிடத்தக்கது. இவர் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர். கடந்த 20 ஆண்டுகளாக லிபரல் கட்சியே இத்தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி வந்தது. இம்முறை இத்தொகுதியில் போட்டியிட்ட லிபரல் கட்சி மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. லிபரல் கட்சியின் மீதான தமிழ்மக்களின் அவநம்பிக்கை இதற்கு ஒரு காரணம் என, இன்னொரு தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த லிபரல் கட்சி வேட்பாளர் John Cannis 'ஸ்காபரோ மிரர் க்கு (Scarborough Mirror) தெரிவித்துள்ளார். இந்த அவநம்பிக்கையில் தன்னுடைய தொகுதியிலும் தமிழ்மக்கள் தனக்கு எதிராக திரும்பியதாகவும் தெரிவித்துள்ளார்.

ஸ்காபரோ றூஜ்சில் போட்டியிட்ட ராதிகா சிற்சபைஈசன் அடுத்த நிலையில் இருந்த

| கட்சி | தொகுதி | தலைவர் |
|---|---|---|
| பழமைவாதக்கட்சி | 167 | ஸ்ரீபன் காப்பர் |
| புதிய ஜனநாயக்கட்சி | 102 | ஜக் லேட்டன் |
| லிபரல் கட்சி | 34 | மைக்கல் இக்நாற்றிவ் |
| புளொக் கியூபெக்குவா | 4 | கில் ரூசெப் |
| பசுமைக்கட்சி | 1 | எலிசபெத் மே |
| **மொத்த தொகை** | 308 | |

பழமைவாதக்கட்சியை விட கிட்டத்தட்ட 5000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அத்துடன் ஸ்காபரோ சவுத்வெஸ்ற் இல் போட்டியிட்ட கவன் பரம்சோதி அவருடன் போட்டியிட்ட NDP வேட்பாளரிடம் அண்ணளவாக 1300 வாக்குகளால் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டார். ஸ்காபரோவில் கடும் போட்டியின் மத்தியிலேயே வெற்றி பெற்றதாக தெரிவுசெய்யப்பட்ட இரு லிபரல் கட்சியினரில் ஒருவர் கூறியுள்ளார்.

2003, 2006, 2008 ஆம் ஆண்டுகளில் சிறுபான்மை ஆட்சியிலிருந்த கனடிய அரசு, இந்த தேர்தலின் பிற்பாடு பிரதமர் ஸ்ரீபன் காப்பரின் தலைமையில் பெரும்பான்மை ஆட்சியை அமைக்கின்றது. எதிர்வரும் நாலு வருடங்களிற்கு திரு. ஜக் லேட்டன் எதிர்கட்சித் தலைவராக இருப்பார்.

கனடிய அரசியலில் NDP முதல் தடவையாக எதிர்கட்சியாக இருக்கப் போகின்றது. கனடிய நாடாளுமன்றத்திற்குரிய தேர்தல் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறும்.

***Scarborugh Rough River***இன் நிலை

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் |
|---|---|---|
| ராதிகா சிற்சபைஈசன் | (NDP) | 18,856 |
| மார்லின் ஹலியோ | (Consavative) | 13,893 |
| ரனா சார்கர் | (Liberal) | 12,723 |
| ஜோர்ஜ் | (Green) | 689 |

பதிவு செய்த மொத்த வாக்குகள் 46,519
வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 55.9%

கனடிய மூன்று அரசுகளில் மத்திய அரசும், ரொறொன்ரோ மாநகர அரசும் பழமைவாதக் கட்சியின் கையில் உள்ளது. ஒக்ரோபர் 06, 2011 இல் நடைபெற இருக்கும் ஒன்ராறியோ மாகாண அரசின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் இப்போதைய எதிர்பார்ப்பு?

# 105 புதிய முகங்கள்

மே 02, 2011 இல் நடைபெற்ற கனேடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தல் பல சாதனைகளை செய்துள்ளது. 308 உறுப்பினர்களைக் கொண்ட கனேடிய நாடாளுமன்றத்தில் பழமைவாத கட்சியில் 167, புதிய ஜனநாயக கட்சியில் 102, லிபரல் கட்சியில் 34, பசுமைக்கட்சியில் ஒருவருமாக 41வது நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

இம்முறை தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் 25 வீதமானோர் பெண்களாவர். கடந்த நாடாளுமன்றத்தில் 69 பெண் உறுப்பினர்கள் அங்கம் வகித்தார்கள். இம்முறை இது 76 ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறு அதிக எண்ணிக்கை உள்ள பெண்கள் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டாலும் கனடா இவ்விடயத்தில் இன்னமும் உலகில் 40வது இடத்தில் தான் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. புதிய ஜனநாயக கட்சியில் 40 பேரும், பழமைவாத கட்சியில் 28 பேரும், லிபரல் கட்சியில் 6 பேரும், மற்றும் புளக் குவிபெக்குவா கட்சியும் பசுமைகட்சியும் ஒவ்வொரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இதைவிட கனடாவில் உள்ள ஐந்து கட்சிகளிலும் பசுமைக்கட்சி மட்டுமே பெண் ஒருவரை தலைவராக கொண்டுள்ளது.

இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் 105 புதுமுகங்களைக் கொண்ட நாடாளுமன்றமாக கனேடிய 41வது நாடாளுமன்றம் அமையவிருக்கின்றது.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் கருத்து

சென்ற வார விளம்பரம் பத்திரிகையில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி நடாத்திய சிவத்தமிழ் விழா பற்றிய கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது அதற்கு எங்கள் நன்றி. இத்துடன் அந்தக்கட்டுரையை மிகவும் சிறப்பாக எழுதுயிருந்த கட்டுரை ஆசிரியருக்கும் எமது நன்றிகளைத் தெருவித்துக் கெள்கின்றோம்.

\- ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# 105 புதிய...

### 02ஆம் பக்கத்தொடர்ச்சி

இதில் 34 புதுமுகங்கள் பழமைவாத கட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களாவர். புதிய ஜனநாயக கட்சிக்கு கடந்த முறை குவிபெக் மாகாணத்திலிருந்து ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தார். இம்முறை குவிபெக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 58 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 57 பேரும் புதுமுகங்கள்.



Pierre-Luc Dusseault என்னும் 19 வயது பல்கலைக்கழக (University de sherbrooke) மாணவன் இம்முறை புதிய ஜனநாயக கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டார். இவரே கனேடிய நாடாளுமன்ற வரலாற்றில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த வயது நாடாளுமன்ற உறுப்பினர் ஆவர். பல்கலைக்கழகத்தில் பிரயோக அரசியல் துறையில் கல்வி பயின்றுவரும் Piere-Luc Dusseault நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அடிப்படை சம்பளமான $157,731 ஐயும் மற்றைய சலுகைகளையும் பெறுகிறார்.



Liu

நான்கு McGill University மாணவர்கள் இம்முறை புதிய ஜனநாயக கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் Laurin Liu, Matthew Dube, Charmaine Bory, மற்றும் Mylene Freeman ஆவர். இவர்கள் எல்லோரும் புதிய ஜனநாயக கட்சியில் பல வருடங்களாக ஈடுபாடு உடையவர்கள். இவர்களில் இருவர் புதிய ஜனநாயக கட்சியின் பல்கலைக்கழக அமைப்பில் இணைத்தலைவர்களாக இருக்கிறார்கள். Liu, பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருட மாணவி. சரித்திரம் மற்றும் கலாசாரம் பாடங்களை பயில்கின்றார். பல்கலைக்கழகத்தில் சேர்ந்த காலத்தில் இருந்தே புதிய ஜனநாயக கட்சியின் பல்கலைக்கழக அமைப்பில் உறுப்பினராக இருக்கிறார். Dube அரசியல் விஞ்ஞான துறையில் தற்போது பட்டப்படிப்பை முடித்துள்ளார். இவர் புதிய ஜனநாயக கட்சியின் பல்கலைக்கழக அமைப்பின் தற்போதைய இணைத்தலைவர்களில் ஒருவர் ஆவர். Bory தற்போது அரசியல் விஞ்ஞான துறையில் மாணவராக இருக்கிறார். இவரும் புதிய ஜனநாயக கட்சியின் பல்கலைக்கழக அமைப்பில் தற்போதைய இணைத்தலைவர்களில் ஒருவராவர். Freeman உம் தற்போது பட்டப்படிப்பை முடித்துள்ளார். இவர் நகரசபை தேர்தலிலும் வேட்பாளராக உள்ளார்.

இவர்களைவிட புதிய ஜனநாயகக்கட்சியில் குவிபெக் மாகாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் 27 வயது இரண்டு பிள்ளைகளின் தாயான Ruth Ellen Brosseau தான் மிகவும் ஊடகங்களில் விமர்சிக்கப்படுபவர். இவர் 98 வீதமான பிரஞ்சுமொழி பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதியின் பிரஞ்சுமொழி பேசத் தெரியாத நாடாளுமன்ற உறுப்பினர் ஆவர். இத்தொகுதியில் வாழும் 77 வீதமானவர்களுக்கு பிரெஞ்சு மொழியை தவிர வேறுமொழி பேசத்தெரியாது. இவர் இத்தொகுதியில் வசிப்பதும் இல்லை.



Brosseau

அதைவிட இத்தொகுதிக்கு தேர்தல் பிரசாரத்திற்கு ஒருநாள்கூட செல்லவும் இல்லை. இவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டது மொன்றியலில் உள்ளூர் பகுதியான Berthier - Maskinonge இல் இருந்து ஆகும். இங்கு கடந்த மூன்று தேர்தல்களிலும் தெரிவு செய்யப்பட்ட புளக்குவிபெக்குவா பிரதிநிதியை 5735 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து தெரிவானார். Brosseau தேர்தல் காலத்தில் தனது விடுமுறையை கழிக்க லாஸ் வேகஸ் சென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் கால்ரன் பல்கலைக்கழக ஒலிவர் மதுச்சாலையில் உதவி முகாமையாளராக பணியாற்றுகிறார்.

இவர்களைவிட ஸ்காபுறோ ரூச் றிவர் தொகுதியில் இருந்து புதிய ஜனநாயக கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட



ராதிகா சிற்சபைசனும் கனேடிய நாடாளுமன்றத்திற்கு ஒரு புதியமுகம் ஆவார். இவர் கனேடிய நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழ் உறுப்பினர். இலங்கைத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கனடாவில் தான் முதன்முதலாக ஒரு இலங்கைத்தமிழர் நாடாளுமன்றத்திற்கு பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியை பிறப்பிடமாக கொண்ட ராதிகா ஐந்து வயதில் கனடாவில் குடியேறினார். 1987 இல் பிறந்த ராதிகா University of Toronto மற்றும் Carlton University இல் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டு வர்த்தக துறையில் பட்டதாரியானார். அவர் Queen University இல் தனது முதுமாணி பட்டத்தை தொழிலியல் துறையில் பெற்றுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு இரண்டு நாட்களிற்கு இடையில் நாடாளுமன்றத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு விபரக்கொத்து சபாநாயகர் அலுவலகத்தால் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்படும். அதில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அவையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர்களது கடமைகள் என்ன என்பதும், மற்றும் பல விபரங்களும் அடங்கியிருக்கும்.

# கனேடிய நாடாளு மன்றத் தேர்தல் ஒரு அலசல்

முதலில் சாதனை படைத்த ராதிகா சிற்சபைசனுக்குப் பாராட்டு. அவருக்கு இது இரட்டை வெற்றி. நாடாளுமன்றத்தில் கால் வைக்கும் முதல் தமிழர். முதல் தமிழ்ப் பெண். இது அவரின் சாதனை மட்டுமல்ல, ஒரு அலை வீசியது. அது அவரது வெற்றிக்குக் காரணமானது எனலாம். ஆனால் NDPயினுக்குச் சாதகமான அலை வீசத் தொடங்கியதே தேர்தலுக்கு இரண்டு வாரங்கள் முன்னரேதான். அதுவரை NDP பொது சன அபிப்பிராயத்தின்படி மூன்றாவதாகவே நின்றுள்ளது. ராதிகா தேர்தலுக்கு நிற்கப் போவதாக அறிவித்த போது NDPயின் நிலமை அத்தனை சாதகமாக இருந்ததில்லை. ஆனால் ராதிகா மனத் திண்மையுடன் போராட்டத்தில் குதித்தார். 'Fortune favours the brave' என்பார்கள். வெற்றியும் பெற்றார். ராதிகா திறமைசாலி என்பதை மறுப்பதற்கில்லை.

இளம் வயது. துடிப்புள்ள இளம் பெண். ஆகவே அவரால் அரசியலில் மிக உயர்ந்த நிலைக்குப் போக முடியும். அதற்கு அவர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியது மிக அவசியம். நாடாளுமன்ற நடைமுறைகள் யாவற்றையும் அத்துபடியாக்கி மக்கள் பிரச்சினைகள் பற்றித் தேவையான சந்தர்ப்பங்களிலே ஆணித்தரமான வாதங்களை நிலைநிறுத்தி, அரசின் நடவடிக்கைகளில் காண்கின்ற குறைபாடுகளைக் கேள்வி நேரத்தில் சார்ந்த அமைச்சர்களைக் குடைந்தெடுத்து சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் என அங்குள்ளோர் விதந்துரைக்கும் வண்ணம் அவர் வளர வேண்டும். அவருக்கு அதற்கான ஆற்றல் உள்ளது. வளருவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. விரைவிலே ஜாக் லேய்ரன் தனது நிழல் மந்திரிசபையினை தேர்வு செய்யலாம். பல்கலாசாரம் சம்பந்தமான விஷயங்களுக்குப் பொறுப்பாக ராதிகாவை நியமிக்கலாம் அல்லது ஒலிவியா சௌ உடன் கூட்டாக இணைந்து தொழிலாளர் நலத்துறையின் பொறுப்பை செயற்பட ஏவலாம். எது வந்தாலும் அதனை சிறப்பாக செய்ய வேண்டும் என வாழ்த்துவோம்.

இப்போ பொதுத் தேர்தல் பற்றி:

1. சில வருடங்களுக்கு முன்னர் அதாவது ஜீன் கிறெட்சியன் கனடாப் பிரதமராக இருந்த காலத்தில் அரசியல் அவதானர்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6




# ஞானியுடன் ஒரு மாலை பொழுது

## விவேகம், தியானம் மற்றும் ஆனந்தம்

தற்போதைய நவீன உலகில் எப்படி உண்மையான ஆனந்தத்தையும் விடுதலையையும் நீங்கள் பெற முடியும் என்பதற்கான தனது அனுபவங்களை, சத்குரு, உங்களுடன் பகிர்ந்து கொள்ள இருக்கிறார்.

## Metro Toronto Convention Center

222 Bremner Blvd., Toronto, ON M5V 3L9
www.ishafoundation.org/toronto
E-Mail: toronto@ishafoundation.org
தொடர்புக்கு: 647-764-3030 / 416-300-3010



"என்னிடம் போதனைகள் ஏதும் கிடையாது, நீங்கள் விருப்பத்துடன் இருந்தால், மனித வாழ்கையில் இது சாத்தியம் என்று இதுவரை நீங்கள் கற்பனை கூட செய்திராத பரிமாணத்திற்கும் சூழ்நிலைக்கும் உங்களை அழைத்துச் செல்வேன்" - சத்குரு

# மே 28, 2011, சனிக்கிழமை

மாலை ஐந்து மணியிலிருந்து எட்டு மணி வரை
(மாலை நான்கு மணிக்கு 'சவுண்ட்ஸ் ஆப் ஈஷா' குழுவின் இசை முழக்கம்)

சத்குரு அவர்கள் ஏறத்தாழ பத்தாண்டுகளுக்குப் பின்னர் றொறோன்றோவிற்கு வருகை புரிகிறார். சத்குருவின் முன்னிலையில் வாழ்வின் ஆழமான பரிமாணங்களை உணர உங்களுக்கு இது ஓர் அளப்பரிய வாய்ப்பு.

சத்குரு அவர்கள் தன்னை உணர்ந்த ஞானியாக, யோகியாக, குருவாகத் திகழ்பவர். அனைத்து மக்களும் தன் இயல்பான ஆனந்தததத்தை உணரவும், வாழ்வை தன் உள்நிலை அனுபவத்தின் வாயிலாக நிகழ்த்தவும், தெய்வீகம் உணரவும் கருணையோடு வழிகாட்டுபவர். யோகாவை தற்காலத்திற்கு ஏற்றவாறு வழங்குபவர். அவருடைய சொற்பொழிவுகளும் அவர் நடத்தும் நிகழ்ச்சிகளும் அவரை உலகத்தரம் வாய்ந்த பேச்சாளராகவும், உலகளவில் ஒரு கருத்தை உருவாக்குபவராகவும் உயர்த்தியுள்ளது.

ஈஷா அறக்கட்டளையின் நிறுவனரும் 'இன்னர் என்ஜினியரிங்' யோக நிகழ்ச்சியை உருவாக்கியவருமான சத்குரு அவர்கள் மிக வலிமை வாய்ந்த 50 இந்தியர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளார். உலகளவில் மிகவும் பிரசித்திப் பெற்ற மாநாடுகளான உலகப் பொருளாதார மாநாடு, ஐ. நா சபையின் புத்தாயிரமாண்டு அமைதி மாநாடு, உலக தலைவர்கள் மாநாடு, இங்கிலாந்தின் பிரபுக்கள் சபை மற்றும் டெட்(TED) மாநாட்டிலும் பங்கேற்றுள்ளார். இம்மாநாடுகளில் தலைமை, சமூக-பொருளாதார முன்னேற்றம் மற்றும் தனியொருவருடைய வளர்ச்சி போன்ற பல தலைப்புகளில் பேசியுள்ளார்.

சத்குரு அவர்கள் நிறுவிய ஈஷா அறக்கட்டளையைச் சார்ந்த உலகம் முழுவதிலுமுள்ள பல லட்சம் தன்னார்வத் தொண்டர்கள், கிராம மக்களுக்கான கல்வி, ஆரோக்கியம் போன்ற பல மேம்பாட்டுத் திட்டங்களையும் மரக்கன்றுகள் நடுதலில் உலகளவில் கின்னஸ் சாதனை நிகழ்த்திய பசுமைக் கரங்கள் திட்டத்தையும் முன்னின்று நடத்தி வருகின்றனர். சத்குரு அவர்களால் விஞ்ஞான முறைப்படி வடிவமைக்கப்பட்ட ஈஷாவின் யோகப் பயிற்சிகள் மூலம் இனம், மதம், வயது கடந்து இலட்சக்கணக்கான மக்கள் தங்களுக்குள் இயல்பான அமைதியையும் ஆனந்தத்தையும் உணர்ந்துள்ளனர்.

சத்குருவினுடைய பேட்டிகள் ஃபோர்ப்ஸ், தி நியூயார்க் டைம்ஸ், பிபிசி, ப்ளூம்பெர்க், சிஎன்என்ஐ மற்றும் சிஎன்பிசி ஆகிய பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சத்குரு அவர்கள், தலாய் லாமா, ஆர்ச் பிஷப் தேஸ்மண்ட் டுடு மற்றும் பிற ஆன்மீக தலைவர்களுடன் இணைந்து, பில் மோயர் அவர்களால் 2008ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட "பியாண்டு அவர் டிபரன்ஸஸ்" (Beyond Our Differences ) என்னும் குறும்படத்தில் பங்குபெற்றுள்ளார். இது தவிர சத்குரு அவர்கள் 50 புத்தகங்களை எழுதியுள்ளார், மேலும் இவரைப்பற்றி நான்கு புத்தகங்கள் வெளிவந்துள்ளன. மேலும் அவர் அமேஸான் புத்தக நிறுவனத்தின் சிறந்த விற்பனைகளில் ஒன்றான "மிட் நைட் வித் தி மிஸ்டிக்" (Midnights with the Mystic) புத்தகத்தின் இணை எழுத்தாளரும் ஆவார்.

## தியான அன்பர்களின் பகிர்தல்கள்

"சத்குருவை சந்தித்தது என் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது."
- ரவி வெங்கடேசன், முன்னாள் தலைவர் - மைக்ரோசாப்ட் இந்தியா

"சத்குருவை ஆன்மீக உலகத்தின் மைக் ஜாகர் எனலாம்."
- ஜோ உட், சிஇஓ, ஜோ உட் ஆர்கானிக்ஸ்

எப்போது நம் குடும்பத்தில், அலுவலகத்தில் ஒரு பொறுப்பு எடுக்கிறோமோ அப்போதே மன அழுத்தம் வந்துவிடுகிறது. ஆனால் ஆச்சரியம். ஈஷா யோகப் பயிற்சிகள் செய்யச் செய்ய, குறிப்பாக, தியானம் செய்யச் செய்ய மன அழுத்தமின்றி எல்லாவற்றையும் என்னால் தெளிவாக, தீர்க்கமாகக் கையாள முடிகிறது. என் பயிற்சிகள் ஆழமாக ஆழமாக என்னுள் ஒருவித நிச்சலனம் ஊடுருவுவதைக் கவனிக்க முடிகிறது. இதைத்தான் விலை மதிப்பில்லாததாக அறிகிறேன்.
- ரவி வெங்கடேசன், தலைமை நிர்வாக அதிகாரி, மைக்ரோசா.ஃப்ட், இந்தியா

ஈஷாவில் இருந்தபோது பலமுறை சுற்றிப் பார்த்தேன் என்னை! - ரா. பார்த்திபன் (நடிகர்)

மதம், இனம், மொழிக்கு அப்பாற்பட்ட 'ஆன்மீகம்'. "உன்னை உனக்கு உணர்த்தும் உன்னதம்" அது தான் ஈஷா யோகா மையம். நம்ம பசங்களுக்கு இஷா கோபிகர், இஷா டியோல் மாதிரி சினிமா நட்சத்திரங்களை விட ஈஷா யோக மையம் நல்லாவே தெரிஞ்சிருக்கு. அதுக்கு காரணம் அவங்க அப்ரோச்!

"ஞான ஒளி வீசும் சத்குரு முகத்தை பார்த்தால் கவலைகள், கால் பிடறியில் பட, பி.டி.உஷாவை விட வேகமாக ஓடுகின்றன." "பிரேக் பிடிக்காத தண்ணீர் லாரி போல் ஓடுகிற மனம்... நிதானமாகி, நம் வசமாகிறது." ஈஷா யோக மையத்தில் உள்ள "பாதரச லிங்கம் உள்ள தீர்த்தக் குளத்தில் நீராடினால்... நாள் முழுவதும், "I am secret of my energy!." என்று சொல்லிக் கொண்டே இருப்பீர்கள்" - விவேக் (நடிகர்)

உண்மையில் இப்போது என்னை நான் ஒரு முழுமையான பெண்ணாக, சக்தி வாய்ந்த பெண்ணாக உணர்கிறேன். மனதுக்குள் நிரந்தரமான அமைதியும் வந்துவிட்டது. எனக்குக் கிடைத்த புத்துணர்வுக்குக் காரணம் ஈஷாவில் சொல்லிக் கொடுத்த சாம்பவி மகா முத்ராவைத் தொடர்ந்து பயிற்சி செய்து வருவதுதான். - நடிகை ஸ்ரேயா

**றொரோன்றோ நிகழ்ச்சிக்கு இரண்டாயிரம் பேருககு மேல் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.**
**இன்றே உங்கள் டிக்கெட்டுகளை பெறுங்கள்!**

Ticket prices & seating:
$100: Premier Seating: seats are closest to the stage, parking included
$50: Preferred Seating: Right behind premier seating
$25: General seating - $15 for students

அளவான இருக்கை வசதியே உள்ளது, இந்த நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகள் விரைவில் தீரும் நிலையில் உள்ளது. அதனால் தங்கள் இருக்கைகளை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

- மாணவர்களுக்கான டிக்கெட் பெற விரும்புபவர்கள் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையுடன் வர வேண்டும்.
- இருக்கையில் அமர்வதற்கு கதவுகள் மாலை நான்கு மணிக்கு திறக்கப்படும்.
- நான்கு மணிக்கு - வரவேற்பு மற்றும் 'சவுண்ட்ஸ் ஆ.ஃ. ஈஷா'வின் இசை முழுக்கம்.
- தயவு செய்து பத்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை மட்டுமே அழைத்து வரவும்.

Serandib Travels
202 - 2075 Lawrence Ave E,
(Lawrence & Warden)
416 750 0009

Paisano's Italian Garden Cafe
116 Willowdale ave,
(Bayview & Sheppard East)
647 764 3030

Vlambaram News
201 - 5215 Finch Ave., E.
(Finch & Middle Field)
416 282 8059

Elanthulir Video
4 - 3430 Finch Ave E.
(Warden & Finch)
416 495 8403

# தமிழ் நாட்டில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வினர் ஜெயலலிதா தலைமையில் ஒன்றாக இணைந்து செயற்பட்டனர். 1989 இல் முதல்முறை சட்டசபை உறுப்பினர் ஆக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1991 இல் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி வைத்து வென்று முதல்முறையாக முதல்வரானார். பின்னர் 2001 இல் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் வென்று இரண்டாவது முறை முதல்வரானார். தற்போது 2011 இல் நடை-பெற்ற தேர்தலில் தனிக்கட்சியாக அறுதிப்பெரும்பான்மை பெற்று மூன்றாவது முறை முதல்வராக பதவி ஏற்கிறார்.

**திமுக வின் தோல்விக்கு கூறப்படும் முக்கிய 10 காரணங்கள்:-**

1. மின்வெட்டு - வரலாறு காணாத மின்வெட்டை ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் (தலைநகர் சென்னையை தவிர) கடந்த 3 ஆண்டுகளாக அமல்படுத்தியது. இதனால் சிறுதொழில் செய்பவர்கள் கடும் பாதிப்பிற்கு உள்ளானார்கள். பல ஆயிரம் சிறிய தொழிற்சாலைகள் இதனால் இயங்க முடியாமல் நின்றன. திருப்பூர் போன்ற ஊர்களில் பல லட்சம் அன்றாடக் கூலித் தொழிலாளிகள் வேலையிழந்தனர். குறிப்பாக, விவசாயிகள் கடும் இன்னலுக்கு ஆளாயினர். கிணற்றடியில் எப்பொழுது கரெண்ட் வரும் என பல்புகளையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். கரெண்ட் வந்ததும் மோட்டாரை இயக்கி நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தால், திடீரென கரெண்ட் போய்விடும். மீண்டும் காத்திருத்தல். பலரும் நள்ளிரவுகளில் தோட்டக்காடுகளில் காத்திருக்கும் சூழ்நிலை இதனால் ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக தேர்தல் சரியாக கோடை காலத்தில் வந்தது. இரவும் நிம்மதியாக தூங்க முடியாமல் புழுக்கமும் வியர்வையும் சேர, கோபத்தை தேர்தலில் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள், மக்கள். இவ்வளவு பிரச்சினை இருக்கிறது எனத் தெரிந்தும், அதைச் சரிசெய்வதுக்குப் பதிலாக, மின்வெட்டுக்கு முந்தைய ஜெயலலிதா அரசைக் குறைகூறிக் கொண்டிருந்தார் கருணாநிதி. அது மக்களை மேலும் கோபப்படுத்தியது.

2. விலைவாசி உயர்வு - குறிப்பாக காய்கறி, வெங்காயம் போன்றவற்றின் அபரீத விலை உயர்வும் அதை நியாயப்படுத்த கலைஞர் மற்றைய மாநிலத்தில் விலை உயர்வு இல்லையா எனப் பேசி மக்களின் அதிதிருப்தியை பெற்றார். தமிழக அரசு நியாய விலைக் கடைகளில் அரிசியை ஒரு ரூபாய்க்கு விற்றாலும், வெளி மார்க்கெட்டில் அரிசி, காய்கறி போன்ற அன்றாட அடிப்படை



தேவைகள் தொடங்கி சிமெண்ட் வரை அத்தனை பொருட்களின் விலைகளும் விண்ணைத் தொட்டன. இதையும் சரி செய்யாமல், மற்ற மாநிலங்களும் மற்ற நாடுகளிலும் உள்ள விலைவாசிகளோடு தமிழ்நாட்டு நிலவரத்தை ஒப்பிட்டு வார்த்தை ஜாலம் செய்து கொண்டிருந்தார் கருணாநிதி. நிர்வாகத்தைக் கவனித்து இவற்றைச் சீர் செய்வதுக்குப் பதிலாக, மானாட மயிலாட நிகழ்ச்சியில் நடிகைகளில் அங்க அசைவுகளை முதல்வர் ரசித்துக் கொண்டிருந்ததும், பாராட்டு விழாக்களில் மயங்கியதையும் மக்கள் ரசிக்கவில்லை.

3. குடும்ப ஆதிக்கம் - வரலாறு காணாதவகையில் இம்முறை ஆட்சியின் போது முதல்வர் கருணாநிதியின் குடும்பத்தினர் மிகப்பெரிய அளவில் ஆட்சியிலும், அதிகாரத்திலும் ஆதிக்கம் செலுத்தியதும் அதனால் மக்கள் பட்ட அவதியும் அளப்பரியது. சென்னை, மெரினா கடற்கரையில் நடைபயிற்சி செய்யும்போது சுண்டல் விற்கும் பையனைப் பார்த்தாராம் சரத்குமார். "ஒரு நாளைக்கு உனக்கு எவ்வளவுப்பா வியாபாரம் ஆகும்" என்று கேட்டாராம். அவன், "300 ரூபாய்க்கு ஆகும் சார்" என்றிருக்கிறான். சுற்றிமுற்றிப் பார்த்த சரத்குமார், "என்னிடம் சொன்ன மாதிரி வேற யாரிடமும் இதைச் சொல்லிறாதப்பா. கலைஞர் குடும்பத்தினர் கேட்டாங்கன்னா, 300 பசங்கள வேலைக்கு எடுத்து இந்தத் தொழிலையே கபளீகரம் பண்ணிடுவாங்க" என்றாராம். சரத்குமார், இதை வேடிக்கை யாகச் சொன்னாலும், கிட்டத்தட்ட கலைஞர் குடும்பத்தினர் அப்படித்தான் நடந்து கொண்டார்கள். சென்னையில் ஓடும் 'கால் டாக்ஸி'களில், இப்பொழுது முக்கால் வாசிக்கும் மேல் அவர்களுக்குச் சொந்த மானது. மற்ற தொழில்களில் கலைஞர் குடும்பத்தினர் ஆதிக்கம் செலுத்தியது வெளியே தெரியாமல் இருந்தாலும், சினி-மாவை அவர்கள் கைப்பற்ற முயன்ற போது, சினிமா ஹீரோக்களின் முணுமுணுப்பு காரணமாக, பட்டிதொட்டிக்கும் இந்த வியாபார நுட்பம் தெரிந்துவிட்டது. கலைஞர் குடும்பம் மட்டுமல்லாது, அமைச்சர்கள் தொடங்கி கவுன்சிலர்கள் வரை திமுக காரர்கள் ஆதிக்கமும் இந்த முறை அதிக-ளவில் இருந்தது.

4. ஈழத்தமிழர் பிரச்சினை - ஈழத்தில் கொத்துக் கொத்தாக தமிழ் உயிர்களை சிங்கள அரசு குத்தி குதறும்போதெல்லாம் அவர்களுக்காக திமுக குரல் கொடுக்க வில்லை. மாறாக கண்மூடித்தனமாக கனிமொழிக்கும் தனது குடும்பத்திற்கும் ஆபத்துவரக்கூடாது என்ற நோக்கில் மட்டுமே காங்கிரசை ஆதரித்தது தமிழக மக்களுக்கு பிடிக்கவில்லை. தமிழகத்தில் முத்துக்குமார் போன்ற இளைஞர்கள் தீக்குளிக்க, எதையும் பொருட்படுத்தாமல், உண்ணாவிரதம், கடிதம் என கபட நாடகம் ஆடிக்கொண்டிருந்தார் கருணாநிதி. இணைய-தளங்களில் தமிழக இளைஞர்களிடையே இது பெரும் கொந்தளிப்பாக வெளிப்பட்டது. உண்மையில் ஈழப் பிரச்சினை கடைசியாக நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே வெளிப்பட்டி ருக்க வேண்டும். ஆனால், பார-திய ஜனதா கட்சி ஆட்சிக்கு வருவதை மக்கள் விரும்பவில்லை என்பதும், பணப் பட்டுவாடா, வாக்கு எண்ணிக்கையில் மோசடி போன்ற தேர்தல் குளறுபடிகளும் சேர்ந்து கொள்ள பெரிய அளவில் மக்கள் கோபம் வெளிப்படாமல் போய்விட்டது. காத்திருந்த மக்கள், இப்போது வைத்திருக்கிறார்கள் ஆப்பு. காங்கிரஸ் 63 தொகுதிகளில் வெறும் ஐந்தே தொகுதிகளில் மட்டுமே வெற்றுபெற முடிந்தது, இலங்கை அரசுக்கு மத்தியில் ஆளும் காங்கிரஸ் செய்த உதவிகளுக்கு மக்கள் கொடுத்த பரிசு.

5. 2 G ஸ்பெக்ட்ரம் ஊழல் - திமுக அரசினதும் கருணாநிதி குடும்பத்தினரதும் மிகப்பெரிய ஊழலாக 2G ஸ்பெக்ட்ரம் ஊழல் தமிழக மக்கள் மனதில் பதிந்தது. இந்த ஊழலில் ராசாவை மட்டும் சிறைக்கு அனுப்பிவிட்டு தனது மனைவி தயாளு அம்மாவையும் மகள் கனிமொழியையும் காக்க கருணாநிதி போராடியது திமுக வினர் உட்பட மக்கள் பலருக்கு அதிர்ச்சியாக இருந்தது. தமிழ்நாட்டுக்கு மக்களுக்கு ஊழல் புதிதல்லதான். அவர்கள் இப்பொழுது தேர்ந்தெடுத்திருக்கும் ஜெயலலிதா உழலே செய்யாதவரும் இல்லைதான். ஆனால், ஒரு லட்சத்து எழுபத்தேழாயிரம் கோடி

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

TORONTO BUSINESS COLLEGE

Personal Support Worker Diploma
- Excellent Instructors
- Well equipped PSW Lab
- Hands on Clinical Training
- 100% Co-op placement
- NACC Certificate
- Good Salary

Computerized Accounting Diploma
- Microsoft Windows
- Microsoft Word
- Microsoft Excel
- Financial Accounting
- Payroll
- Quick Books
- Simply Accounting
- ACCPAC

Co-op Available
Ample Free Parking

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்
Eligible for Tuition Fees, Books, Living Expenses, Day care & Transportation

416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.t-businesscollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# சிவப்பு அட்டைகள்


## விளையாட்டுத் தகவல்கள் 306

### உலக சாதனை: ஒரு கால்பந்தாட்டப் போட்டியில் 36 சிவப்பு அட்டைகள்

கால்பந்தாட்டப் போட்டியொன்றில் மத்தியஸ்தர் ஒருவர் 36 தடவை சிவப்பு அட்டைகளை காட்டிய சம்பவம் ஆர்ஜென்டினாவில் இடம்பெற்றுள்ளது. இதுவொரு புதிய உலக சாதனையாகும். கால்பந்தாட்டப் போட்டிகளில் இரு அணிகளும் தலா 11 பேர் வீதம் மொத்தமாக 22 பேர்தான் விளையாடு வார்கள். சிவப்பு அட்டை காட்டப்பட்ட வீரர்களுக்கு பதிலாக மாற்று வீரர்களையும் களமிறக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், ஆர்ஜென்டின தலைநகர் பியூனர்ஸ் அயர்ஸில் கிளேபோல் மற்றும் விக்டோரியானோ கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியின்போது ஏற்பட்ட மோதலொன்றை யடுத்து இரு அணிகளின் வீரர்கள் 22 பேர், மாற்று வீரர்கள், அணிகளின் உத்தியோகஸ்தர்கள் என அனைவருக்கும் தொடர்ச்சியாக 36 தடவை சிவப்பு அட்டை காட்டினார் நடுவர் டேமியன் ரூபினோ.

விக்டோரியானோ கழக முகாமையாளர் டோமின்கோ கங்கா இது தொடர்பாக கூறுகையில் “எதிரணி வீரர்கள் அனைவரை யும் அவர்களின் அறையில் வைத்து பூட்டுமாறு மத்தியஸ்தர் கோரியமை மோசமான நிலையாகும். அவர்கள் என்னை கொல்லப் பார்த்தார்கள்“ எனத் தெரிவித்துள்ளார். ஆனால், கிளேபோல் கழக முகாமையாளர் சேர்ஜியோ மிசீலி கருத்துத் தெரிவிக்கையில் “வீரர்களில் பெரும்பாலானோர் மோதலில் ஈடுபட்டவர் களை பிரித்தெடுப்பதற்கு தான் முயன்றனர். ஆனால், மத்தியஸ்தர் குழம்பிவிட்டார்“ எனக் கூறியுள்ளார். மேற்படி போட்டியில் விக்டொரியானோ கழகம் 2-0 விகித்தில் வென்றமை குறிப்பிடத்தக்கது. இதற்குமுன் கால்பந்தாட்டப் போட்டியொன்றில் 20 சிவப்பு அட்டைகள் காட்டப்பட்டமையே உலக சாதனையாக இருந்தது. 1993 ஆம் ஆண்டு பரகுவேயில் நடைபெற்ற போட்டியொன்றின் போது இச்சம்பவம் நடைபெற்றிருந்து.

பிரிமியர் லீக் கால்பந்து: பரிசுக்கோப்பையை நெருங்கும் மான்செஸ்டர் யுனைடெட் பிரி-மியர் லீக் கால்பந்துப் போட்டியில் பரிசுக்கோப்பையை நெருங்கியுள்ளோம் என மான்செஸ்டர் யுனைடெட் அணியின் மூத்த வீரர் ரயான் கிக் கூறினார். செல்சியா அணியுடன் மோதிய ஆட்டத்தில் 2-1 கோல் கணக்கில் மான்செஸ்டர் யுனைடெட் அணி வெற்றி வாகை சூடியதைத் தொடர்ந்து ரயான் கிக் இவ்வாறு தெரிவித்தார். 19 வது லீக் சாம்பியன் கப்பை கைப்பற்றும் வகையில் மான்செஸ்டர் யுனைடெட் அணி உள்ளது. இன்னும் 2 ஆட்டங்களில் ஆட வேண்டி உள்ள நிலையில் சாதனை படைக்கும் வெற்றியை யுனைடெட் எதிர் நோக்கி உள்ளது.



லீவர்பூல் அணி இதுவரை 18 லீக் சாம்பியன் கப்பில் பரிசுக் கோப்பை வென்றுள்ளது. அதே அளவு வெற்றியை பெற்றுள்ள மான்செஸ்டர் யுனைடெட் அணி இந்த பிரி-மியர் லீக்கில் பரிசுக்கோப்பை வென்றால் 19 முறை லீக்கை வென்ற வரலாற்றுச் சாதனையை படைக்கும். கடந்த 17–18 ஆண்டுகளாக யுனைடெட் அணிக்கு சவால் தரும் அணிகளாக ஆர்செனல் மற்றும் செல்சியா அணிகள் இருந்தன. சமீப ஆண்டுகளாக செல்சியா அணி சவால் எழுப்புகிறது. செல்சியா அணியுடன் மோதிய லீக் ஆட்டத்தில் யுனைடெட் வீரர் ஜாவியர் ஹெர்னான்டஸ் முதல் நிமிடத்திலும் 23 வது நிமிடத்திலும் நெமன்ஜா விடிக்கும் கோல் அடித்தனர். செல்சியா அணிக்கு 68 வது நிமிடத்தில் பிராங்க் லாம்பர்டு கோல் அடித்தார். இருப்பினும் பெர்குசன் நிர்வகிக்கும் மான்செஸ்டர் யுனைடெட் அணி வெற்றியை நிறுத்த முடியவில்லை.

### மெஸ்ஸி ஆட்டத்தினால் காலிறுதியில் பார்சிலோனா

ஐரோப்பாவின் மிகப்பெரிய கால்பந்து தொட ரான யு.இ.எ.ப்.ஏ சாம்பியன் லீக் தொடரின் காலிறுதிக்குள் பார்சிலோனா அணி நுழைந்துள்ளது. அர்ஜென்டினா நட்சத்திரம் மெஸ்ஸி இரண்டு அபார கோல்களால் ஆர்செனல் அணியின் வாய்ப்பைத் தட்டி பறித்தார். இதனால் பார்சிலோனா காலிறுதிக்குள் நுழைந்தது. இந்த ஆட்டத்தில் களமிறங்கும்போது முதல் லெக் ஆட்டத்தில் ஆர்செனல் அணி 2-1 என்ற நிலையில் வெற்றி பெற்று முன்னிலை பெற்றிருந்தது. ஆனால் நேற்று பார்சிலேனா 3-1 என்று வெற்றி பெற்றதால் மொத்தம் 4-3 என்ற கோல்களில் வெற்றி பெற்று ஆர்சனல் கனவைத் தகர்த்தது. முதலில் பார்சிலோனா அணி 1-0 என்று முன்னிலை பெற்றது. அதன் பிறகு அதே அணியின் செர்ஜியோ பஸ்கெல்ஸ் தன் கோலிலேயே அடிக்க ஆர்செனல் அணி சமன் செய்தது. ஆனால் கடைசியில் சாவி மற்றும் மெஸ்ஸியின் அபார கோல்களால் பார்சிலோனா வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. ஆட்டம் முழுதும் 19 முறை பார்சிலோனா கோலை நோக்கி அடிக்க ஆர்செனல் ஒருமுறை கூட கோலை நோக்கி அடிக்க முடியவில்லை. ஒரு கோலும் பார்சிலோனா போட்டுக் கொடுத்தது. 2009ஆம் ஆண்டு சாம்பியன் லீக் காலிறுதியிலும் மெஸ்ஸியின் ஆட்டத்தினால் ஆர்செனல் வெளியேறியது என்பது குறிப்பிடத்தக்கது.

### பரிசுக்கோப்பையை பார்சிலோனா வுக்கே தந்துவிடலாம்: ரொனால்டோ

ரியல் மாட்ரிட் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ பார்சிலோனா வில் கடைசி சரிவை சந்தித்தார். அவரது அணி வடகிழக்கு ஸ்பெயினின் காடலோனிய வீரர்களால் ஐரோப்பிய போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டது. பார்சிலோனா அணி தனது மண்ணில் 1-1 ஆட்டக்கணக்கில் 2 வது சுற்று ஆட்டத்தை சமன் செய்தது. பெர்னபு நகரில் நடந்த முதல் சுற்று ஆட்டத்தில் பார்சிலோனா அணி 2-0 கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது. தங்களது எதிரி அணிக்கு நடுவர்கள் சாதகமாக இருப்பதாக மாட்ரிட் அணியினர் உணர்ந்தனர். இதே நிலை செவ்வாய் கிழமை காணப்பட்டது. ஒரு கோலை நடுவர் நிராகரித்ததால் ரியல் மாட்ரிட் வீரர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆத்திரம் அடைந்தனர். பார்சிலோனா அணி தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறது. அநீதிகளுக்கு இடையே நாங்கள் வாழ வேண்டி உள்ளது என ரியல் மாட்ரிட் ஸ்டார் கிறிஸ்டியானோ ரொனால்டோ மனம் கொதித்தார். பார்சிலோனாவுக்கு சாதகமாக செயல்படுவது கால்பந்துக்கு அழகல்ல. இந்த நிலையில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் நாங்கள் எங்கள் ஊரிலேயே இருந்துவிடுகிறோம். அடுத்த ஆண்டு பரிசுக் கோப்பையை பார்சிலோனா அணிக்கு நேரடியாக தந்து விடலாம் என்றும் ரொனால்டோ விமர்சித்தார்.

### மான்செஸ்டர் யுனைடெட் சாம்பியன் கனவைத் தகர்த்த லிவர்பூல்

பார்க்ளேஸ் இங்கிலீ பிரிமியர் லீக் கால்பந்து போட்டித் தொடரின் முக்கியமான போட்டியில் லிவர்பூல் அணி முதலிடம் வகிக்கும் மான்செஸ்டர் யுனைடெட் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அதன் சாம்பியன் கனவைத் தகர்த்துள்ளது. நடந்த போட்டியில் மான்செஸ்டர் வெற்றி பெற்றிருந்தால் அடுத்த இடத்தில் உள்ள வைரிகளான ஆர்செனல் அணியைக் காட்டிலும் 6 புள்ளிகள் முன்னணி பெற்று சாம்பியன் பட்டம் வெல்லலாம் என்ற நிலையில் களமி-றங்கியது. ஆனால் நெதலார்ந்து வீரர் டர்க் குய்ட் என்பவரது அபாரமான ஹேட்ரிக்கிற்கு முன்பு மான்செஸ்டர் யுனைடெட் அணி வாளாயிருந்தது.

சில வாரங்களுக்கு முன் செல்சீ அணியிடமும் மான்செஸ்டர் யுனைடெட் உதை வாங்கியது. மேலும் லிவர்பூல் அணி இதுவரை 18 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. மான்செஸ்டர் அணியும் 18 முறை வென்றுள்ளது. இந்த முறை மான்செஸ்டர் சாம்பியன்களானால் அது லிவர்பூல் சாதனையை முறியடித்து விடும், இதனால் லிவர்பூல் அணி இதனை முறியடிக்க ஆக்ரோ'மாக விளையாடியது. சுவாரேஸ் என்பவரது அபாரமான ஆட்டத்தைப் பயன்படுத்தி குய்ட் 3 கோல்களையும் அடித்தார். முதல் பாதியின் முடிவில் அடுத்தடுத்து 2 கோல்களும் பிறகு 65-வது நிமிடத்தில் 3-வது கோலையும் அடித்து குய்ட் ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தினர். மான்செஸ்டர் அணிக்கு மெக்சிகோ அணியின் நட்சத்திர வீரர் ஜேவியர் ஹெர்னாண்டஸ் ஆறுதல் கோலை அடித்தார்.

### ஐ.பி.எல் : புதிய சாதனை படைத்த லசித் மாலிங்க

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் எனும் சாதனைக்குரியவராகியுள்ளார் இலங்கையரான லசித் மாலிங்க. இவர் இதுவரை 37 போட்டிகளில் பங்குபற்றி 59 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவ்வருட தொடரில் 11 போட்டிகளில் பங்குபற்றி 26 விக்கெட்டுகளை வீழ்த்தியமையும் மாலிங்கவின் மற்றொரு சாதனையாகும். 2008 இல் பாகிஸ்தானை சேர்ந்த சொஹைல் தன்வீர் -ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடி 22 விக்கெட்டுக் களை வீழ்த்தினர். அவ்வருடம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. 2009இல் டெக்கன் சார்ஜஸ் சார்பில் விளையாடிய ஆர்.பி.சிங் 23 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தார். அவரது அணி சுற்றுப்போட்டியை வென்றது. கடந்த வருடம் வித்தியாசமான ஒரு நிலைமை தோன்றியது. பிரக்யன் ஓஜா அதிகூடிய விக்கெட்டுக்களை எடுத்தபோதும் அவரது அணியால் சம்பியனாக முடிய வில்லை. சென்னை சுப்பர் கிங்ஸ் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் சம்பியனாகியது. இப்போது நடைபெறும் ஐ.பி.எல். இருபதுக்கு 20 போட்டியில் மாலிங்க மிகவும் ஆபத்தான பந்துவீச்சாளர் என கிங்ஸ் ஓஜ பஞ்சாப் அணியின் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார். “அவருக்கு அனுபவம் வந்துவிட்டது. அவர் மிகவும் பயங்கரமான இருபதுக்கு 20 பந்து வீச்சாளர். அவரது யோக்கர் மிக ஆபத்தானது. பவுன்ஸர்கள் தடுமாற வைப்பவை. அவரது பந்துவீச்சில் பல்வேறு வகைகளை காணலாம்“ என கில்கிறிஸ்ட் கூறினார்.

### கங்குலி வருகை: ரசிகர்கள் உற்சாகம்

நீண்ட நாள்களுக்குப் பிறகு சௌரவ் கங்குலியின் ஆட்டத்தைப் பார்த்த உற்சாகத்தில் மைதானத்தில் நுழைந்து அவரது காலில் விழுந்து வணங்குகிறார் ரசிகர் ஒருவர். டெக்கான் அணிக்கெதிராக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

YARL WINDOW BLINDS & DRAPERY

WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds

Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
CALL: N.SELVAM

# வினா - விடை

அண்மையில் எனது அலுவலகத்தில் வாராந்த ஆதனம் சம்பந்தமான கலந்துரையாடலில் சில கேள்விகளிற்குரிய பதில்களை இந்த இதழில் தர உள்ளேன்.

**வினா 1.** நான் அண்மையில் வீடு வாங்கினேன். எனது வீடு விற்பனை முகவர் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தினை (Driving License) தரும்படி கேட்டிருந்தார். இது நடைமுறையில் உள்ளதா? எனது வாகன சாரதி அனுமதிப்பத்திரனை கொடுக்கலாமா?

**விடை 1.** வீடு வாங்குபவர்களுடைய அடையாளங்களை, தகவல்களை சேகரித்து வைத்திருக்கவேண்டுமென யூன் 23, 2008 இல் அரசினால் கொண்டு வரப்பட்ட சட்டம் உறுதி செய்துள்ளது. அத்துடன் அத்தாட்சியை உறுதிபடுத்த பெறப்படும் அத்தாட்சிப் பத்திரங்களில் வாகன சாரதி அனுமதிப்பத்திரமும் ஒன்றாகும். அத்தாட்சியை குறிப்பிட்ட முகவரே பார்த்து உறுதி செய்தல் வேண்டும். இதற்காகவே முகவர் உங்களுடைய Driving License ஐ கேட்டு இருக்கலாம். பொதுவாக பெறப்படும் தகவல்கள் முகவருடைய Real estate நிறுவனத்தில் (Brokerage) பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும்.

வாகன அனுமதிபத்திரம், கடவுட்சீட்டு (Passport), பிறப்புஅத்தாட்சிப் பத்திரம் (Birth certificate) போன்றவற்றையும் அத்தாட்சிப் பத்திரமாக பாவிக்கலாம். ஆனால் OHIP Card ஐ அத்தாட்சி பத்திரமாக பாவிக்கமுடியாது. இத்துடன் ஆதனம் ஒன்றை விற்பவருடைய அத்தாட்சி தகவல்களும் சேகரிப்படுகின்றன.

ஆதனம் வாங்குபவர் கொடுக்கும் ஆரம்பமுதலீடு (Down payment) கொடுக்கப்படும் முறை (Draft, Money Order + Cheque) மற்றும் தரப்படும். காசோலையின் தகவல்களும் சேகரித்து வைக்கப்படுகின்றன என்பதனையும் நினைவில் கொள்ளலாம்.

குறிப்பு : கனடாவிலிருந்து சட்டத்திற்கு எதிராக வெளிநாடுகளில் இயங்கும் பல குழுமங்களிற்கு பணம் அனுப்பப்படுவதாகவும் அத்துடன் பல நாடுகளிலிருந்து கனடாவிற்கும் சட்டத்திற்கு எதிராக பணம் வருவதனையும் கட்டுப்படுத்துவதற்காக யூன் 23, 2008 இல் இந்த புதிய சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.
'Fintrac' Legislation என அழைக்கப்படுகின்றது. (Fintrac: Financial Transaction and Reports Analysis Centr of Canada)

• வாகன அத்தாட்சிப்பத்திரம் கொடுப்பதில் தவறில்லை. ஆனால் குறிப்பிட்டவர் நேர்மையான முகவரா என சிந்தித்து செயல்படவும்.

**வினா 2.** புதிதாக வாங்கும் கொண்டோ, வீடுகளிற்கு HST மேலதிகமாக செலுத்த வேண்டுமா?

**விடை 2.** ஆம் என்றாலும், பொதுவாக புதிதாக நிர்மாணம் செய்யும் நிறுவனங்களில் HST ஐ சேர்த்தே விலையை நிர்ணயிக்கின்றன. பொதுவாக மேலதிகமாக HST ஐ செலுத்த வேண்டிவராது, இருந்தபோதிலும் சில சந்தர்ப்பங்களில் ஒரு பகுதி HST ஐ செலுத்த வேண்டுமென நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் கேட்கலாம். உங்களுடைய முகவருடன் ஆலோசிப்பதால், தகுந்த முடிவை எடுக்கமுடியும்.

**வினா 3.** ஆதனம், வியாபாரம், நிலம் போன்றவை விற்கும் போது Commission உடன் மேலதிகமாக HST கொடுப்பனவு செய்ய வேண்டுமா?

**விடை 3.** ஆம், Commission இற்கு HST செலுத்தவேண்டும். முகவர் அல்லது முகவரின் நிறுவனம் HST ஐ உங்களிடம் பெற்று அரசிற்கு கொடுக்கப்படல் வேண்டும். இது சட்டம்.

**வினா 4.** கொண்டோமெனியத்திற்குரிய மாதாந்த கட்டுப்பணத்திற்கு (Monthly Maintance Fee) HST செலுத்தப்படல் வேண்டுமா?

**விடை 4.** Residential கொண்டோமெனியத்திற்குரிய மாதாந்த கொடுப்பனவிற்கு மேலதிக HST செலுத்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 341**


**HomeLife / GTA Realty Inc., Brokerage***
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"
*Independently Owned & Operated
5215 Finch Ave. E, #203 Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng (Broker/Owner)

**CONDO. FOR RENT**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom + den condo. for lease. Utilities included. Immediate occupancy. Resonable rent.

**BRAND NEW TOWN HOUSE**

**KENNEDY & SHEPPARD**
3 + 1 Den town house sale. 3 Washrooms. Asking only $430,900.

**HOUSE FOR SALE**
3 Bedroom + walk-out house for sale. 2 Storey house. New Market (HWY404 / MULLOCK). 5 Years old. Main floor master bedroom + full washroom. Immediate occupancy. Asking only $389,900.

**CONDO. FOR SALE**
SHERBOURNE & BLOOR
2 Bedroom + den condo for sale. 2 Washroom.

**CONDO. FOR SALE**

**WARDEN & FINCH**
2 + Den can be 3 bedroom. Asking only 159, 900

**BRAND NEW CONDO. AVAILABLE**
**HWY 401 & YONGE**
2 Bedroom, 2 washroom. Over 1200 Sqft. Asking price $474,000. Call: 416.315.9397

**CONDO. FOR RENT**

**YONGE & LAKESHORE TORONTO**
2 Bedroom condo for rent. Corner unit. Rent $1800.

**CONDO FOR SALE**
**MCCOWAN & ELLESMERE**
Brand new 1 bedroom + den condo for sale. Walking distar to Scarborough Town center. Immediate occupancy. Asking $239,900.

**SPACE FOR LEASE**
**Finch & Middlefield.**
1000 sqft. 2nd Floor. All utilities included. Close to all amenities. Lease only $1100.

**BRAND NEW TOWN HOUSE FOR SALE**

**KENNEDY & SHEPPARD**
4 Bedroom, 3 washrooms
Asking price $444,900

**CONDO. FOR SALE**
**MCCOWAN & SHEPPARD**
2 Bedroom + den condo. for sale. 2 Full washroom. Large unit. Very close to TTC, 3 minutes to hwy 401. Asking $234,900

**SPACE FOR LEASE**
2000 Sqft. Clean building. Lots of parking. 2nd floor. Above Embassy store in Scarborough / at 5200 Finch Ave. East. All utilities included. No extra. Can be used for Private Tution, Medical Office, Yoga class, Insurance, Law Office Physiotheraphy , Optical, Mortgage........ Much more Resonable rent..



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**
**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**

நந்தா ஐயாத்துரை
*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*


# தமிழ் நாட்டில்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

ஸ்பெக்ட்ரம் ஊழல் கிராமங்களின் தேநீர் கடைகள், வீட்டு சமையலறைகள் வரை பேசப்பட்டது. "ஓட்டுக்குக் கொடுக்கப்படும் பணம், அதில் ஒரு பகுதியே" என்ற அதிமுக கூட்டணியின் பிரசாரம் மக்களிடம் நன்றாகவே எடுபட்டது. ஸ்பெக்ட்ரம் வழக்கின் விசாரணை ஒழுங்காக நடைபெற, திமுக தோல்வி அவசியம் என்ற தெளிவு படித்தோர் மத்தியில் உருவாகி இருந்தது. எனவே, சென்னை சிட்டி முதல் அழகிய பாண்டிபுரம் போன்ற கடைக்கோடி கிராமம் வரைக்கும் மக்கள் பணத்தை வாங்கிக் கொண்டு மாற்றி ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். கைநீட்டி பணத்தை வாங்கிவிட்டால் தமிழ் மக்கள் மாற்றி ஓட்டு போடமாட்டார்கள் என்ற அரசியல்வாதிகள் நம்பிக்கை தவிடு பொடியாகியுள்ளது.

6. சீமானின் காங்கிரஸ் எதிர்ப்பு - ஈழத்தமிழர் பிரச்சினையில் பெரும் அதிருப்தியுடன் இருந்து வந்த தமிழ் உணர்வாளர்களின் வாக்குகளை திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ் இற்கு எதிராக போடும்படி நாம் தமிழர் கட்சித்தலைவர் சீமான் பிரச்சாரம் செய்தது அதிமுக விற்கு உதவியாக போனது.

7. விஜயின் அதிமுக ஆதரவு - ரஜனிக்கு அடுத்து பெரும் ரசிகர் கூட்டத்தைக் கொண்டுள்ள நடிகர் விஜய்க்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு அவரது படங்களுக்கு முட்டுக்கட்டை போட முயற்சித்தது, வழக்குகளை காட்டி பயமுறுத்தி பணியவைக்க முயன்றது போன்ற திமுக வினரின் செய்கையால் கடுமையாக பாதிக்கப்பட்ட நடிகர் விஜய்யை அ.தி.மு.க தம்பக்கம் இழுத்ததன் மூலம் அவரின் ரசிகர் கூட்டம் திமுக விற்கு எதிராக திரும்பியது.



8. திரைத்துறையில் கருணாநிதி குடும்ப ஆதிக்கம் - திரைப்படத்துறையிலும் கருணாநிதி குடும்பத்தினரின் ஆதிக்கம் இதுவரை இல்லாத அளவு மிக அதிகமாக இருந்தது. கலாநிதி மாறன், தயாநிதி மாறன் ஆகியோரின் நிறுவனம் தமிழ் சினிமாவை தமது கைக்குள் வைத்திருந்தது. அதேபோல் அழகிரியின் மகன், ஸ்டாலினின் மகன், கருணாநிதியின் இன்னொரு பேரனின் தயாரிப்பு நிறுவனம் என எங்குபார்த்தாலும் திரைப்படதுறையில் கருணாநிதியின் குடும்பத்தினராகவே இருந்தது. இவர்களைத் தாண்டி எவரும் படம் எடுக்கவோ நடிக்கவோ முடியாது என்ற நிலை. இதை மனதில் வைத்தே அஜித் முதல்வர் கருணாநிதி முன்னிலையில் தங்களை மிரட்டுவதாக பொதுக்கூட்டத்தில் கூறினார். இவற்றால் திரைப்படத்துறையினர் பலர் திமுக விற்கு எதிராக செயற்பட்டனர்.

9. இலவசங்கள் - வழக்கமாக திமுக வினர் தான் மக்களுக்கு அதிக அளவில் இலவச பொருட்கள் வழங்குவார்கள். இம்முறை அதிமுக வினரும் திமுக விற்கு சரியாக மிக்ஸி, கிரைண்டர், Fan என இலவச பொருட்களை வழங்கினார்கள். இதனால்



இலவச பொருட்களாலும் திமுக வினால் வழமைபோல் வாக்குகளை திசை திருப்பமுடியவில்லை.

10. விஜயகாந்த் - விஜயகாந்தின் தேமுதிக வை தனது கூட்டணிக்குள் இழுத்ததன் மூலம் அதிமுகவின் வாக்குகளை சிதறடிக்காமல் ஜெயலலிதா காப்பாற்றியது அவருக்கு கிடைத்த பெருவெற்றியாகும். திமுக வினர் தேமுதிக வை தனது கூட்டணிக்குள் இழுக்காமல் அல்லது அவரை அதிமுக வுடன் சேரவிடாமல் தடுக்காமல் பெரிய தவறை செய்து விட்டனர்.

அதிமுக அமோக வெற்றி பெற்ற பின்னர் ஜெயா தொலைக்காட்சிக்கு அளித்தி பேட்டியில் ஜெயலலிதா இலங்கை பிரச்சினை தொடர்பாக பின்வருமாறு கூறினார்.

இலங்கைப்பிரச்சினை ஒரு சர்வதேசப் பிரச்சினை. ஒரு மாநில அரசால் குறிப்பிட்ட அளவில் மட்டுமே செயல்பட முடியும். அதற்குமேல் செயற்படுவதென்றால் மத்திய அரசால் மட்டுமே முடியும். இருப்பினும் இலங்கைப்பிரச்சினை தொடர்பாக நான் இரண்டு தீர்வுகளை முன்வைத்து அதை செய்யுமாறு மத்திய அரசசை வற்புறுத்துவேன் என்றார். அவர் தெரிவித்த 2 தீர்வுகள் பின்வருமாறு.

முதல்தீர்வு - போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை புரிந்த இலங்கை அதிபர் ராஜபக்சாவை சர்வதேச போர்க்குற்றங் களுக்கான நடுவத்தின் முன் நிறுத்தல்.

இரண்டாவதுதீர்வு - ஈழத்தமிழர்கள் கௌரவாக, சுதந்திரமாக வாழ இலங்கை அரசை நடவடிக்கை எடுக்க வற்புறுத்துதல். அதை இலங்கை அரசு செய்யாவிடில் இலங்கை மீது இந்தியா பொருளாதார தடைவிதித்தல்.

“கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழகத்தில் நான் பயணம் செய்யும் போது ஒன்றை உணர்ந்தேன். தமிழக மக்கள் தி.மு.க. ஆட்சி மீது கடும்கோபத்தில் இருக்கிறார்கள். எப்போது தேர்தல் வரும் இந்த ஆட்சியை தூக்கி வீசலாம் எனக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அது. எனவேதான் யாருடைய பேச்சையும் கேட்காமல் தைரியமாக தேர்தலைச் சந்தித்தேன்” என்றார் ஜெயலலிதா, தேர்தல் முடிவுகள் வெளியானதும். ஜெயலலிதா, இப்படிச் சொன்னாலும் அவரே எதிர்பார்க்காத வெற்றிதான் இது என்பதில் சந்தேகமில்லை. ஜெயலலிதா மட்டுமல்ல, எதிரணியில் கருணாநிதியும் இந்த முடிவை எதிர்பார்க்க வில்லை. தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளைக் கையில் வைத்துக்கொண்டு, ஆட்சி அமைக்கத் தேவையான அளவு தன் கூட்டணி வெற்றிபெறாமல் போனால், எதிரணி யில் இருந்து யார், யாரை இழுக்கலாம் என கடந்த ஒரு மாதமாகக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார் கருணாநிதி. விஜயகாந்த் அணியில் இருந்து சிலரை இழுக்க நடந்த பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடந்ததாகவும் செய்திகள் கசிந்தன. இப்பொழுது எல்லாமே தலை கீழாகிவிட்டது. அவரது அரசியல் வாரிசு ஸ்டாலினே பெரும் போராட்டத்துக்குப் பிறகுதான் வெற்றிபெற்றார்.

## தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 2011 சட்டசபை தேர்தல் முடிவுகள் (மொத்த தொகுதிகள் - 234)

I. அதிமு.க கூட்டணி- 203

| | |
|---|---|
| 1. அதிமுக (ஜெயலலிதா) | 150 |
| 2. தேமுதிக (விஜயகாந்) | 27 |
| 3. மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் | 09 |
| 4. இந்திய கம்யூனிஸ்ட் | 08 |
| 5. மனித நேய மக்கள் | 02 |
| 6. புதிய தமிழகம் | 02 |
| 7. சமத்துவ மக்கள் (சரத்குமார்) | 02 |
| 8. இந்திய குடியரசு | 01 |
| 9. அகில இந்திய பார்வர்ட் பிளாக் | 01 |
| 10. தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை | 01 |
| 12. அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகம் | 0 |

II. திமுக கூட்டணி - 31

| | |
|---|---|
| 1. திமுக (கருணாநிதி) | 23 |
| 2. காங்கிரஸ் | 05 |
| 3. பாமக | 03 |
| 4. விடுதலைசிறுத்தைகள் | 0 |
| 5. கொங்கு நாடு முன்னேற்ற கழகம் | 0 |
| 6. இந்திய யூனியன் முஸ்லீம் லீக் | 0 |
| 7. மூவேந்தர் முன்னேற்றக் கழகம் | 0 |
| 8. பெருந்தலைவர் மக்கள் கட்சி | 0 |

III. பாஜக கூட்டணி - 0

**கீழே 2006 ஆம் ஆண்டின் சட்டசபை தேர்தல் முடிவுகள் ஒப்பிட்டு பார்ப்பதற்காக தரப்பட்டுள்ளது.**

2006 சட்டசபை தேர்தல் முடிவுகள் (மொத்த தொகுதிகள் - 234)

1. திமுக கூட்டணி - 163

| | |
|---|---|
| 1. திமுக | 96 |
| 2. காங்கிரஸ் | 34 |
| 3. பாமக | 18 |
| 4. மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் | 9 |
| 5. இந்திய கம்யூனிஸ்ட் | 6 |
| 6. இந்திய யூனியன் முஸ்லீம்லீக் | 0 |

2. அதிமுக கூட்டணி - 69

| | |
|---|---|
| 1. அதிமுக | 61 |
| 2. மதிமுக | 6 |
| 3. விடுதலைச் சிறுத்தைகள் | 2 |
| 4. இந்திய தேசிய லீக் | 0 |

III. தேமுதிக - 1 IV. சுயேட்சை - 1

# கனேடிய நாடாளுமன்றத்தேர்தல் ஒரு அலசல்

03ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒருவர் கூறியது நினைவுக்கு வருகிறது. அவர் பெயர் ஞாபகமில்லை. அவர் கணிப்பின் படி கனடாவிற்கு இரு அரசியல் கட்சிகள் தான் நடைமுறைக்கு ஏற்றது. வலது சாரிக் கட்சியான கொன்சர்வேற்றிக் கட்சியும் இடதுசாரிக் கட்சியான NDP நாட்டின் அரசியல் கட்சிகளாகத் துலங்கும். இரண்டிற்கும் இடை நடுவே லிபரல் கட்சி தேவையற்றது. எனவே காலகதியில் லிபரல் கட்சி தேய்ந்து அழிந்து விடும் என்றார். ஆனால் அந்த நிலை இவ்வளவு சீக்கிரத்தில் வருமென்று அந்த அவதானர் கனவிலும் கருதியிருக்க மாட்டார். இந்தச் சாதனையை செய்வதற்கு உடந்தையாக இருந்தவர் இம்முறை தேர்தலில் மணக்வ்விய ஜெரார்ட் கெனடியே. அவர் ஒரு பேராசைக் காரர்! ஒன்றாறியோ பிரதமராகும் கனவுடன் வந்தார். அங்கே அந்த வாய்ப்புக் கிட்டவில்லை. தாவினார் நாடாளுமன்றத்திற்கு. மார்ட்டின் தேர்தலில் கண்ட தோல்வியால் கட்சித்தலைமைப் பதவியை கைகழுவி விட இவருக்கு அதனைக் கைப்பற்றினால் என்ன என்ற ஆவல் உந்தியது. அதற்குத் தடையாக நின்றவர்கள் பொப் றேயும், மைக்கேல் இக்நாற்றிவ்வும். அவர்கள் கட்சியில் மூத்தவர்கள். ஆகவே அவர்களுடன் போட்டியிட்டு வெற்றி கொள்ள முடியாது. ஆகவே அவர்களைத் தோற்கடிப்பதற்கு என்ன வழி என குள்ள நரித்தனமாக யோசித்தார். தலைமைக்குப் போட்டியிட்ட ஸ்ரீபன் டியோன் எனும் தம்பளப்பூச்சிக்கு தனது ஆதரவினைக் கொடுத்து அவரைக் கட்சியின் தலைவராக்க உதவினார் பின்னர் பதவியைத் தனதாக்கலாம் என்ற அபிலாசையுடன். பொதுத் தேர்தல் வந்தது. கட்சி மீண்டும் தோல்வி கண்டது. கட்சிக்குள்ளேயே ஸ்ரீபன் டியோனுக்கு எதிர்ப்பு வர அவர் ராஜினாமா செய்தார். தலைவருக்காக அடுத்து வந்த போட்டியில் மீண்டும் பொப்றேயும், மைக்கல் இக்நாற்றிவும் போட்டியிட்டனர். ஆனால் பெப்றே விட்டுக் கொடுத்தமையால் மைக்கேல் இக்நாற்றிவ் தலைவரானார். ஆனால் கென்னடி தொடக்கி வைத்த கட்சியின் அழிவுப் பாதையிலேயே மைக்கேல் இக்நாற்றிவ்வும் நடந்தார். கொன்சர்வேற்றிவ் கட்சியின் ஆட்சியை அகற்றி விட்டு மூன்று கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டணி ஆட்சியை அமைப்பதற்கு குயூபெக்குவா தலைவர் டியூசொப்ஸ், லிபரல் கட்சியின் தலைவர் ஸ்ரீபன் டியோன் மற்றும் NDPயின் தலைவர் ஜாக் லேய்ரன் ஆகியோர் ஒரு ஒப்பந்தமே செய்திருந்தனர். இக்நாற்றிவ் அதெல்லாம் வேண்டாம் கூட்டரசாங்கம் தேவையில்லை, தனிப்பெரும் கட்சியாகத்தான் ஆட்சி அமைப்பேன் என்று விதண்டாவாதம் செய்தார். இப்போ கட்சி சரித்திரத்தில் காணாத தோல்வியை கண்டதுடன் தனது தொகுதியையும் பறி கொடுத்து நிற்கிறார். தலைமைப் பதவியையும் காற்றில் விட்டு விட்டார். அவருக்கென்ன? உடனடியாகவே பல்கலைக்கழகத்தில் வேலைக்குப் போய் விட்டார். ஆனால் சீர்குலைத்த கட்சியைத் தூக்கி நிறுத்துவது யார்? எப்படி?

படுதோல்வி கண்ட லிபரல் கட்சி மீண்டும் எழுமா என்பது சந்தேகமே. கொன்சர்வேற்றிவ் கட்சிக்கும் இப்படி ஒரு கேடுகாலம் வரவே செய்தது. மல்றோனியின் பின் வந்த கனடாவின் முதல் பெண் பிரதம மந்திரி கிம் கம்பெல் அவர்களின் தலைமையில் தேர்தலில் போட்டியிட்ட கொன்சர்வேற்றிக் கட்சி இரண்டே இரண்டு உறுப்பினர்களுடன் நாடாளுமன்றம் புகுந்தது. அது இம்முறை பூரண பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றவில்லையா எனலாம். அது உண்மைதான். ஆனால் ஆரம்பத்தில் கூறியது போன்று அது ஒரு வலதுசாரிக் கட்சி. அதற்கு மாற்றாக வேறு கட்சி இல்லை. புதிய கொன்சர்வேற்றிவ் கட்சி என்ற புனருத்தாரன பெயருடன் கிழக்கே பிரபலமாயிருந்த கொன்சர்வேற்றிவ் கட்சியும் வடக்கே மக்கள் அபிமானத்தைப் பெற்று நின்ற றிபோர்ம் கட்சியும் இணைந்ததால் ஏற்பட்ட புதிய தெம்பு இன்னொரு காரணமெனலாம்.




2. விகிதாசார பிரதிநிதித்துவம் பற்றிய சர்சை எழுந்தபோது அதனைத் தீவிரமாக எதிர்த்த கட்சிகள் கொன்சர்வேற்றிவ் கட்சியும் லிபரல் கட்சியும் தான். விகிதாசார பிரதிநிதித்துவம் அமலில் இருந்திருக்குமாயின் லிபரல் கட்சி இத்தனை படுமோசமான தோல்வியைக் கண்டிருக்கவும் மாட்டாது. கொன்சர்வேற்றிவ் கட்சி முழுமையான பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்திருக்கவும் மாட்டாது. உதாரணத்துக்கு

ஆனால் இந்த முறையில்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில்லை. ஒரு கணிப்பிற்காக இதனைக் கூறியுள்ளேன். ஆனால் கட்சிகள் பெற்ற வாக்கு வீதத்தினைப் பார்க்கின்றபோது 60% மக்கள் கொன்சர்வேற்றிவ் கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளனர் என்பது புலனாகும். ஆனால் நாடாளுமன்றப் பலத்தினைப் பார்த்தால் ஹார்பர் நிம்மதியாக அடுத்த நான்கு வருடங்களும் எவ்வித இக்கட்டும் இல்லாமல் ஆட்சியை நடத்துவார் எனப்பது தெரிகிறது.

3. பொதுவாகவே லிபரல் கட்சியினுடைய அதிகார பீடத்திற்கு பொப் றே மீது சற்று வெறுப்பு உள்ளது. அவர் NDP கட்சியிலிருந்து லிபரலுக்கு வந்தவர் என்பது பாரம்பரிய லிபரல் கட்சியினரால் அங்கீகரிக்க முடியவில்லை. போதாக்குறைக்கு அண்மையில் அவரது கூற்று ஒன்றும் அவர்களின் வயிற்றெரிச்சலை அதிகரிக்கச் செய்தள்ளது. லிபரல் கட்சியும் NDPயும் இணைவதனை அவர் வரவேற்றமையால் அவரைக் கட்சிக்குத் தலைமை ஏற்க விடாமல் தடுப்பதற்கென்றே ஒரு கூட்டம் கிளம்பியுள்ளது. தலைமைக்கான தேர்தலை இரண்டு வருடங்களின் பின்னர் வைக்கலாம் என்றும் அதுவரை ஒரு தற்காலிகத் தலைவர் இருக்கலாமெனவும் அதிகார வர்க்கம் தீர்மானித்ததுடன், அந்த தற்காலிகத் தலைவர் பின்னர் தலைமைக்குப் போட்டியிடப் படாது எனவும் கருத்துத் தெரிவித்துள்ளது.

4. இந்தப் பொதுத் தேர்தலில் ஆச்சரியத்தினைத் தந்த மாநிலம் குயூபெக். பிரிவினை வாதத்திற்குச் சவுக்கடி கொடுத்தது ஏன் என்பது புதிராகவே உள்ளது. பிரெஞ்சு மொழி பேசும் பகுதியில் வாழ்பவர்கள் கூட குயூபெக்குவா கட்சியினை நிராகரித்து NDPயினுக்கு வாக்களித்ததுடன், அக்கட்சியின் தலைவரையும் வீட்டுக்கு அனுப்பியது ஆச்சரியமே. குயூபெக்குவா கட்சி குயூபெக் மக்களினது ஆசைக்குரிய கட்சியாக இருந்த சமயத்தில் கூட அக்கட்சின் சார்பில் 58 நாடாளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை. குயூபெக்குவா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 43 பேர் பதவியை இழந்துள்ளார்கள். இதன் விளைவாக அக்கட்சி கட்சி அந்தஸ்தினையும் இழந்து விட்டது. இத் தேர்தலில் 58 NDP உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் அது மக்கள் NDP யின்மேல் வைத்த பாசத்திலும் பார்க்க ஏனைய கட்சிகளின் மேல் உள்ள வெறுப்புத்தான் காரணமாகிறது எனலாம். தேர்தல் சமயத்தில் தொகுதிப் பக்கமே எட்டிப் பார்க்காமல் ஏதோ போகப்படாத இடம் என ஒதுங்கி நின்ற பெண்மணி ருத் எலன் பிறோஸ்சே NDP சார்பிலே தேர்ந்தெடுக்கப் பட்டார் என்றால் வேறு என்னத்தைச் சொல்வது. வாக்காளர்களுக்கு தன் கட்சியின் கொள்கைகளை எடுத்துச் சொல்லாமலே வெற்றி கண்டுள்ளார் அம்மையார். ஆனால் குயூபெக் மக்களுடைய அபிலாசைகளை செயல்முறைப் படுத்துதல் NDP யினுக்கு அத்தனை சுலபமான காரியமல்ல. ஆகவே அடுத்த நான்கு வருடங்களும் ஜாக் லேய்ரனுக்கும் அவரது NDPக்கும் சோதனைக் காலமாக அமையலாம். எத்தனை விரைவில் அவரை அரவணைத்தார்களோ அத்தனை வேகமாக குயூபெக் மக்கள் அவரை விட்டும் விலகிச் செல்லலாம். ஆகவே அடுத்த பொதுத் தேர்தலில் இதே அளவு குயூபெக் மக்களுடைய ஆதரவு NDPயினுக்குக் கிடைக்குமோ என்பது சந்தேகத்துக்கு இடமானது என்பதை மறுக்க முடியாது. ஆனால் அங்கேயும் ஜாக் லேய்ரனுக்கு ஒரு அதிருஷ்டம் காத்து நிற்கிறது எனலாம். குயூபெக்குவா கட்சி, கட்சி அந்தஸ்தினை இழந்து விட்டமையால் அதற்கு அரசாங்கத்தின் நிதி உதவி கிடைக்க மாட்டாது. ஆகவே அக்கட்சியை வளர்ப்பது என்பது அத்தனை சுலபமல்ல.



**பொ. கனகசபாபதி**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

சமீபத்தில் படித்தது. ஒரு ஆப்கான் தம்பதியர் கொலை செய்யப்பட்டு ரொறொன்ரோவில் இறந்து விடுகின்றனர். வளர்ந்த பிள்ளைகள் இருக்கிறார்கள். பெற்றோர் பெயரில் வங்கியில் நல்ல பணமும் இருந்தது. ஆனால் சவ அடக்கத்திற்குப் பணம் இல்லை. ஏனெனில் உயிருடன் இருந்த பிள்ளைகளின் பெயர் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்க வில்லை. அந்தப் பிள்ளைகள் பெற்றோரின் சவ அடக்கத்திற்கு தம் இன மக்களிடம் நன்கொடை பெற்று இறுதிச் சடங்குகளை நிறைவு செய்தனராம்.

நிதித்திட்டமிடல் வாழ்வுக்கு மட்டுமல்ல, சாவுக்கும் கூடத்தேவை. அன்பு உறவை இழந்து தவிக்கும் நேரத்தில் பணக் கவலையும், சவ அடக்கத்திற்கு கூடச் சேர வேண்டுமா? மேற்குறிப்பிட்ட சம்பவத்தைப் பார்த்த பின் சமூக ஆர்வலர் ஒருவருக்குத் தோன்றிய எண்ணம் இதுதான். வங்கிக் கணக்குகளை உறவுகளுடன் கூட்டுக் கணக்காக, யார் வேண்டுமானாலும் எடுக்கும்படி வைத்துக் கொள்ளுங்கள். அல்லது குறைந்த பட்சம் குறைந்த அளவு தேவைக்கான தொகையையாவது சம்பந்தப்பட்டவர் இல்லையென்றால், எப்படி எடுப்பது என்று மற்ற குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். மேலும் ஒரு செய்தி. நீங்கள் உங்கள் மரணசாசனம் அல்லது உயிலை எழுதியிருக்க வேண்டும். இல்லையேல் உங்களுக்காக ஒன்ராரியோ அரசாங்கம் எழுதியிருக்கும் உயில், உங்கள் மரணத்துக்குப் பின் நடைமுறைப்படுத்தப் படும். ஒன்ராரியோ அரசாங்கம் உயில் எழுத மறந்தவர்களுக்கும், எழுத சோம்பேறித்தனப்படுபவர்களுக்காகவும் ஒரு பொது மரணசாசனம் அல்லது உயிலை எழுதியிருக்கின்றது. அதை Succession Law Reform Act இல் பார்க்கலாம்.



நான் வழக்கறிஞர் அல்ல, என்றாலும் நான் புரிந்துகொண்ட சில செய்திகளை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். நீங்கள் உயில் எழுதாத பட்சத்தில்

1. முதல் 200,000 டொலர்கள் உங்கள் வாழ்க்கைத் துணைக்குப் போகும். குழந்தைகள் இருந்தால், குழந்தை இல்லையேல் முழுவதுமே வாழ்க்கைத் துணைக்குப் போகும்.

2. ஒரு குழந்தை இருந்தால் 200,000க்கு மேல் உள்ள தொகையில் பாதி வாழ்க்கைத் துணைக்கும், மீதி குழந்தைக்கும் போகும்.

3. ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் 200,000க்கு மேற்பட்ட தொகையில் பாதி வாழ்க்கைத்துணைக்கும் மீதி எல்லாக் குழந்தைகளுக்கும் போகும்.

இப்படி ஒன்ராரியோ மாநில உயில் சொல்லிக் கொண்டே போகின்றது. உறவுகளே இல்லை எனில் சொத்து அந்த நிலையில் ஒன்ராரியோ அரசாங்கத்துக்குச் சொந்தமாகும்.

ஒன்ராரியோ அரசாங்கம் உங்களுக்காக எழுதியிருக்கும் உயில், உங்களுக்குச் சம்மதம் என்றால் நீங்கள் ஒன்றுமே செய்ய வேண்டாம். இல்லையேல் தகுந்த உயிலை, தக்க வழக்கறிஞர் மூலம், எழுதுவதே நல்லது.

மரணத்தைப் பற்றிச் சொல்லும் போது ஆயுட்காப்புறுதியைப் பற்றிச் சொல்லாமல் விட்டால் கட்டுரை நிறைவு பெறாது. மரணம் ஆறிலும் சம்பவிக்கும். அறுபதிலும் சம்பவிக்கும். எப்போது என்பதுதான் தெரியவில்லை. ஆனால் ஒருநாள் நிச்சயம். அத்தகைய மரணத்தில் உங்கள் அன்பு உறவுகளை காக்க விரும்பினால், ஒரு Tim Hortons Coffee விலையில் அல்லது அதற்கும் குறைவான விலையில் தவணைக்கால ஆயுட்காப்புறுதியை எடுத்து குடும்பத்தின் நிதி நிலையைக் காக்கலாம். உதாரணத்துக்கு முப்பதுவயது ஆணுக்கு பத்தாண்டுத் தவணைக்கால ஆயுட் காப்புறுதியை மாதத்துக்கு 11 டொலரிலும், பெண்ணுக்கு 9 டொலரிலும் எடுக்க முடியும். இதே 50 வயது ஆணுக்கு 17 டொலர்களும், பெண்ணுக்கு 13 டொலர்களும் பிரீமியமாக வரும். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் டொலர் தொகைகள் விளக்குவதற்காகக் கொடுக்கப்பட்டவையே. உங்கள் ஆரோக்கியம், புகைக்கும் தன்மை இவற்றைப் பொறுத்து இந்த தொகைகள் மாறுபடலாம்.

முக்கியமானது என்ன?
வாழ்வுக்கும் திட்டமிடுங்கள்
சாவுக்கும் திட்டமிடுங்கள்.

உங்களுக்கு வரும் சந்தேகங்களை போக்கிக் கொள்ள ஆசிரியருடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி: 416.473.6100 ஆசிரியரின் இணைய தள முகவரிகள்
www.dreamandmoney.digitalepaper.in.
மற்றும் www.perrii.com



**பெரி. முத்துராமன்**



# ஐ.நா. அறிக்கையும் அறக்கோட்பாடுகளும்

ஈழத் தமிழருக்கு இழைக்கப்பட்ட சித்திர வதைகள், துன்புறுத்தல்கள், படுகொலைகள் போன்றன பற்றிப் பேசாமல், 21-ம் நூற்றாண்டின் வரலாற்றைக் கடந்து விட முடியாது. இவை பற்றிய அக்கறை கொள்ளாமல் சனநாயகம் பற்றிப் பேசுவதிலும், அர்த்தம் இருக்க முடியாது. ஈழத் தமிழர்கள் மேல் மானுடப் படுகொலை நிகழ்த்தப்பட்டதாக ஐ.நா. அறிக்கை கூறுகிறது. 1948 முதல் இலங்கையில் சிங்களப் பேரினவாதம் இன்னொரு இனத்தின் மீது நிகழ்த்தி வரும் அடக்குமுறை பற்றி - ஐ.நா. இப்போதாவது உதடு பிரித்து வார்த்தைகள் உதிர்த்திருக்கிறது என்பது சிறு ஆறுதல்.

**- பா. செயப்பிரகாசம் -**

உலகத்துக்கே தெரிந்த உண்மைகளை இவ்வளவு காலதாமதமாக வேனும் ஐ.நா. தன் புத்தியில் பதிய வைத்துக்கொண்டு தனக்கான கடமையைச் செய்வதில் முதலடி வைத்துள்ளது என்பது வரவேற்கத்தக்க விடயமேயாயினும், இன்றைய நவீன தகவல் தொழில் நுட்ப யுகத்தில், பல பத்தாயிரம் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையை இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் சொல்ல நேர்ந்திருக்கிறது என்பதற்கு ஐ.நா.வெட்கப்பட வேண்டும். இவ்வாறான மெத்தனமான போக்குக்கு உலக நாடுகளும் ஐ.நா.வும் பதிலளித்தாக வேண்டும். ஈழத்தில் நடந்த கொடுமை, கொடூரம், படுகொலைகள் ஏதோ ஒரு பாகத்தில் நடக்கிறது என்ற உலக நாடுகளின் கண்டு கொள்ளாமையால், விளைந்த அனர்த்தங்கள் ஆயிரம். குறிப்பாக அண்டையிலிருக்கிற, உலகின் முதலாவது பெரிய ஜனநாயக நாடு என்று பெருமை பேசிக்கொள்கிற இந்தியாவுக்கு பெரும் அவமானகரமான கரும்புள்ளியாக ஆகிவிட்டது. உன்னைப் போல் பிறரையும் நேசி எனப்படுவது எக்காலத்துக்கும் நிற்கிற உயிருள்ள மனித அறம். தனது நலன்களுக்காக மற்ற மனிதர்களை துன்புறுத்தாது, தீங்கிழைக்காது வாழுதல் அறம். மற்றவரின் நலன்களை தனக்காக அபகரித்துக் கொள்வது அறவாழ்வு முறைக்கு எதிரானது. இவ்வகையான வாழ்வு நெறிகள் அனைத்தை யும் உள்ளடக்கியதான ஒருசொல் சனநாயகம். தனிமனிதனாக வாழுகையிலும் சமூகமாக இயங்குதலிலும், உலகமாக ஒன்றுதலிலும் சனநாயமாக இயங்குதல் என்பதே சமகாலத்தின் அறக்கோட்பாடு ஆகும். ஆயுதமேந்திய இரு தரப்பு மோதிக்கொள்வது யுத்தம் அது நடைபெறுகையில் கையாள வேண்டிய நெறிமுறைகள் முடியாட்சிக் காலத்தின் போதே வரையறுக்கப்பட்டுள்ளன. "பசுக்களும், பசுக்களைப் பேணும் பார்ப்பனரும், பெண்டிரும், பிணியுடையோரும், பொன்போற் புதல்வர் பெறாதோரும் - பாதுகாப்பான இடத்திற்குச் சென்றடைக. எம் போரைத் தொடங்கப் போகிறோம்'' (புறநானூறு) என அறிவித்து - அத்தகையோர் அகலதலின் பின்னர் இன்னொரு நாட்டின் மீது போர் தொடங்கியிருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்கள் தோல்வியுற்ற படையினரைச் சிறைப்பிடித்தல், அந்நாட்டின் விளை நிலங்களை அழித்தல், நீர்நிலைகளை அழித்தல் என அத்துமீறல்களையும் நிகழ்த்தினார்கள் எனச் சான்றுகள் உள.

பேரழிவு யுத்தத்தின் சமகால சாட்சியம் நாகசாகி, ஹிரோஷிமா. மனித அழிவுகளோ, மனித அவலங்களோ ஏற்படாத போர்நெறிகளே சனநாயக உலகின் அறக்கோட்பாடு. அப்பாவிப் பொதுமக்கள் மீது வாயுக் குண்டு வீச்சு, பாஸ்பரஸ் கொத்துக்குண்டு வீச்சு, ஏவுகணை எறிதல், கனரக ஆயுதங்கள் தாக்குதல் போன்ற கொலைக்காரியங்களைத் தவிர்ப்பது, மக்கள் விழுமியங்கள், வழிபடு தலங்கள், மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் போன்ற மக்கள் திரளும் பகுதிகள் தாக்கப்படக்கூடாது போன்றவை நிகழ்காலத்தினது போர்நெறி.



இலங்கையில் எல்லா வகையிலும் இவை யாவையும் மீறப்பட்டன. பயங்கரவாதிகளை ஒழிப்பது என்ற போர்வையில் ஒரு இனத்தை அழிக்கும் முயற்சி தான் இந்நிகழ்ச்சி நிரலின் முதலும் முற்றானதுமான நோக்கம். பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை குண்டுகளால் தகர்க்கப்பட்டன, பன்னிரண்டு வயதுச் சிறுமி முதல் பெண்கள் பாலியல் வல்லுறவு கொள்ளப்பட்டனர். வன்னியி லிருந்த எல்லா மருத்துவமனைகளும் தாக்குதலுக்கு இலக்காகின. பாதுகாப்பு வலையப் பகுதிக்குள் கனரக ஆயுதம் பயன்படுத்தப்படாது என ராணுவம் உறுதியளித்திருந்தது. எனவே பல இடங்களிலும் சிதறிக் கிடந்த மக்கள் பாதுகாப்பு வலையப் பகுதிக்குள் குவிந்தபோது குண்டு வீசி அழிக்கப் பட்டார்கள். போர் நடந்த பகுதியிலிருந்த மக்களின் எண்ணிக்கை வேண்டுமென்றே குறைத்துக் கூறப்பட்டது. முடிவில் 2009 சனவரி முதல் மே மாதம் வரையுள்ள காலத்தில் மட்டும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும் பகுதியினர் யாராலும் அடையாளம் காணப்படவில்லை'' என ஐ.நா அறிக்கையில், போர் அறங்கள் மீறப்பட்டு - மானுடப் படுகொலையை இலங்கை நிகழ்த்திய விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களையும் மருத்துவமனைகளையும் இலங்கைப் போர் விமானங்கள் குண்டு வீசி அழித்தன. இதே நிகழ்வு லிபியாவில் நிகழ்ந்தபோது, சொந்த மக்களை விமானங்கள் குண்டு வீசி அழித்தன என்பதற்காக பன்னாட்டு விமானங்கள் லிபியா மீது பறக்கத் தடை விதித்தது ஐ.நா. லிபியா வில் நடந்தது போலவே இலங்கையிலும் மக்களை விமானங்கள் குண்டு வீசிக்கொன்றன. தெரிந்த பின்னும் உலக நாடுகளும் ஐ.நா. வும் தடை விதிக்க முன்வரவில்லை. இதன் பின்னணி தெளிவானது. லிபியா விவகாரத்தில் கடா'.பிக்கு எதிராக ஐ.நா. நடவடிக்கை மேற்கொள்ள அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் ஐ.நா. வின் பின் நின்றன. அதே நாடுகள் ஈழத் தமிழர்கள் படுகொலையின் போது இராசபக்ஷே பின்னால் நின்றன.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் அசைந்தால் ஐ.நா அசையும் அந்த நாடுகள் விசை கொடுத்தால் மட்டுமே ஐ.நா என்ற பொம்மை இயங்கும். ஐ.நா. பொதுச் செயலரோ, ஐ.நா.மன்றமோ சுய அதிகாரங்கள் கொண்டவர்கள் அல்லர். யுத்த அழிவு நடந்த ஓரிரு மாதங்களில் பான்.கி.மூன் சித்திரவதை முகாம்களான முள்வேலி முகாம்களுக்குச் சென்றார். உலகெங்குமுள்ள மனிதநேயர்கள், மனித உரிமையாளர்கள் எழுப்பிய கூக்குரல்களின் அழுத்தம் காரணமாக அவர் அங்கு போனார். இலங்கை அரசு எந்த இடங்களைப் பார்வையிடலாம் என வழி நடத்தியதோ அந்த இடங்களுக்கு நடந்தார். எந்த மக்களைச் சந்திக்க வேண்டுமென இலங்கை கூட்டிச்சென்றதோ அந்த மக்களை மட்டும் சந்தித்தார். உண்மையில் அது அழைப்பு அல்ல, இலங்கையின் கட்டளை. யதார்த்த அர்த்ததில் அது உடன் செல்லல் அல்ல, முதுகுக்குப் பின்னால் கத்தியை அழுத்திக் கொண்டு முன் நடத்திச் செல்லல்.

சமகாலப் போர்நெறிகள் எவ்வாறு அழிமானம் செய்யப்பட்டன என்பதைக் கண்டறியும் ஐ.நா பொதுச் செயலராக அவர் வரவில்லை. இலங்கை அரசு அதிகாரிகள், இராணுவத் தளபதிகள், ராசபக்ஷே சகோதரர்கள், அமைச்சர்கள் சூழ அவர் பார்வையிட்டுச் சென்றார். ஒரு மனிதநேயவாதி, என்ன செய்திருக்க வேண்டும்? என்ன செய்திருக்கக் கூடும்? இந்தப் பாதுகாப்புக்களை ஒதுக்கி விட்டு தனது சொந்தப் பாதுகாவலர்களுடன் மட்டுமே மக்களைச் சந்தித்திருக்க முடியும். நவகாளி யாத்திரையின் போது அரசின் எந்தப் பாதுகாப்பும் தேவையில்லையென உதறிவிட்டு மகாத்மா காந்தி அப்படித்தான் நேரடியாய் மக்களுடன் கலந்தார். பான்.கி.மூனைக் காணுகிறபோது இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் குடியரசுத் தலைவராய் இருந்த ஒருவர் பற்றி ஒரு அரசியல் விமர்சகர் எழுதிய வாசகம் நினைவுக்கு வருகிறது. "இதுவரை குடியரசுத் தலைவர்களாக வந்தவர்கள் ரப்பர் ஸ்டாம்புகளாக இருந்தார்கள். இப்போது முதன் முதலாக ஒரு ரப்பர் ஸ்டாம்ப் குடியரசுத்

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.
Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# வினா - விடை

07ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவையில்லை. ஆனால் வியாபார நிறுவனங்களாக உள்ள கொண்டோக்களிற்குரிய மாதாந்த கட்டுப்பணத்திற்கு (Monthly Maintance Fee) HST மேலதிகமாக செலுத்த வேண்டும்.

**வினா 5.** ரொறொன்ரோவில் புதியதாக நிர்மாணம் செய்யும் கொண்டோக்களில் முதலிடுவது பற்றிய உங்களது கருத்து என்ன?

**விடை 5.** எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்று இப்பொழுது சொல்வது இலகுவல்ல. ஆனால் கடந்த காலங்களில் நடந்த நிகழ்வுகளை கொண்டு ஓரளவு எதிர்காலத்தை எதிர்வு கூறலாம். இருந்தபோதிலும் அதிலும் கவனமாக முடிவு எடுப்பதே சிறந்தது.

வட அமெரிக்காவில் புதிதாக நிர்மாணம் செய்யும் கட்டிடத்தொகுதி வியாபாரத்தில் ரொறொன்ரோ முதலாவது நகரமாக இன்றைய காலகட்டத்தில் திகழ்கின்றது. இன்று 250 இற்கு மேற்பட்ட கட்டிடத் தொகுதிகள் ஆரம்பகட்டத்தில் மற்றும் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. ரொறொன்ரோ அமைதியான சூழ்நிலை, திடகாத்திரமான ஆரோக்கியமான பொருளாதார நிலையைக் கொண்டுள்ளது. அத்துடன் இப்பொழுது குறைந்தளவு அடமானக்கடன் வட்டிவீதமான சூழ்நிலையும் காணப்படுகின்றது. புதிய வரவாளர்களும் ரொறொன்ரோவை நோக்கி வந்து கொண்டு இருக்கிறார்கள். ரொறொன்ரோ பல்கலைக் கழகம், றையசன் பல்கலைக்கழகம், ஜோர்க் பல்கலைக்கழகங்கள் ஆகிய 3 முக்கிய வளாகங்கள் (Campus) ரொறொன்ரோவில் இருக்கின்றன.

இதனால் வாடகைக்கு எப்பொழுதும் தேவை இருந்து கொண்டே இருக்கும். வயது குறைந்தவர்களும், வயதானவர்களும் ரொறொன்ரோவை நாடுவதும் அவதானிக்க கூடியதாக உள்ளது. எனவே நீண்ட காலத்தை மனதில் வைத்து முதலீடு செய்வது பலனைக் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.



**வினா 5.** அடமானக்கடனின் வட்டி வீதத்திற்கு என்ன நடக்கலாம்?


**விடை 5.** அடமானக்கடனின் வட்டிவீதம் ஏற்கெனவே மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் நிச்சயமாக வட்டி வீதம் அதிகரிக்கும். ஆனால் எப்பொழுது அதிகரிப்பு தொடங்கும் என்பதே இன்றைய மற்றைய கேள்வி. பொருளாதார நிபுணர்களின் எதிர்வு கூறலின் படிய 2011 வசந்த காலத்தில் (Summer) இருந்து வட்டி வீதம் கூடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கனேடிய நாடாளுமன்றத்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

5. NDPயினுக்கு மிகவும் பிரபலமான எட்புறோட்பென்ற் தலைமை ஏற்றிருந்த காலத்தில் கூட அக்கட்சியினால் சாதிக்க முடியாததை ஜாக் லேய்ரன் சாதித்துள்ளார். இது நாள்வரை ஆளும் கட்சி எதிர் கட்சியாக கொன்சர்வேற்றிவ் கட்சியும் லிபரல் கட்சியுமே மாறி மாறி வந்துள்ளன. கிறெட்சியன் பிரதமராயிருந்தபோது தான் குயூபெக்குவா எதிர்க்கட்சியாக இருந்தது. இத்தேர்தல் சரித்திரத்தினை மாற்றி விட்டது. இதுகாலம் வரை அங்கீகரிக்கப்பட்ட கட்சி ஸ்தானத்துக்கே போராடிப் பெறவேண்டியிருந்த NDP உத்தியோக பூர்வமான எதிர்க்கட்சியாகி உள்ளது. கட்சியின் தலைவரான ஜாக் லேய்ரன் எதிர்க்கட்சித்தலைவராகிறார்.

உத்தியோக பூர்வ எதிர்க் கட்சி என்பது அடுத்த அரசினை அமைப்பதற்குத் தகுதி உடைய கட்சியாகக் கணிக்கப்படுகிறது. ஆகவே இது நாள் வரை ஜாக் லேய்ரனுடைய உரைகள், கருத்துக்கள் பெற்ற முக்கியத்துவத்திலும் பார்க்க இனிமேல் அவரது பேச்சுகள் மிக நுணுக்கமாக ஆராயப்படும். அவரது கட்சியில் பலர் புது முகங்கள், அனுபவம் குறைந்தவர்கள் என்று கூறப்படுகிறது என்றாலும் முன்னால் ஒன்றாறியோ மாகாண அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த டேவிட் கிறிஸ்ரோபேர்சன் மற்றும் ஐறீன் மத்தீசன்



போன்றோரும் குயூபெக்கில் மந்திரியாக இருந்த தோமஸ் முல்கர் போன்ற அனுபவ சாலிகள் உள்ளனர். அவர்களின் பரிபூரண உதவி ஜாக் லேய்ரனுக்கு கிடைக்கவே செய்யும். 'We'll have a lot of new energy, new blood, new talent and new knowledge coming into the House of Commons, and, when people vote for change, that's what they want" - Jack Layton

# சிவப்பு அட்டைகள்

06ஆம் பக்கத்தொடர்ச்சி

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற லீக் ஆட்டத்தில் புணே அணிக்காக கங்குலி சிறப்பாக விளையாடினார். கங்குலி வருகையால் ரசிகர்கள் உற்சாகமடைந்தனர். 4-வது ஐபிஎல் சீசனில் எந்த அணியாலும் கங்குலி ஏலத்தில் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் புணே அணிக்காக கங்குலி தேர்வானார். ஆனால் தேர்வு செய்யப்பட்ட பின்னர் கடந்த 2 ஆட்டங்களில் அவருக்கு வாய்ப்பு தரப்படவில்லை. இந்த நிலையில் டெக்கான் அணிக்கெதிராக செவ்வாய்க் கிழமை அவர் களமிறங்கினார். அவர் மைதானத்துக்குள் நுழையும்போதே ஹைதராபாத் ரசிகர்கள் உற்சாகக் குரலிட்டு அவரை வரவேற்றனர். கங்குலி பொண்டரி, சிக்ஸர் விளாசியபோது ரசிகர்கள் எழுப்பிய கோம் விண்ணைத் தொட்டது. இந்த நிலையில் அவர் விளையாடிக் கொண்டிருந்தபோது மைதானத்துக்குள் ஒரு ரசிகர் நுழைந்து கங்குலியின் காலில் விழுந்து வணங்கினார். இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரிகள் அந்த ரசிகரை மைதானத்திலிருந்து வெளியேற்றினர்.

## தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது புணே

மொஹாலியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஐபிஎல் லீக் ஆட்டத்தில் புணே வாரியர்ஸ் 5 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாபை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக 7 ஆட்டங்களில் தோற்றதற்கு முற்றுப்புள்ளி வைத்தது புணே. முதல் இரண்டு ஆட்டங்களில் வென்ற பிறகு, இப்போது 10-வது ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளது புணே. பஞ்சாபுக்கு எதிரான வெற்றியின் மூலம் 6 புள்ளிகளுடன் 10-வது இடத்தில் இருந்து 8-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. பஞ்சாப் அணி கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. முதலில் ஆடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 119 ரன்கள் எடுத்தது. பின்னர் ஆடிய புணே வாரியர்ஸ் 17.1 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 120 ரன்கள் எடுத்து வெற்றிபெற்றது. முன்னதாக டாஸ் வென்ற பஞ்சாப் முதலில் பேட்டிங்கைத் தேர்வு செய்தது. 8 பந்துகளைச் சந்தித்த கில்கிறிஸ்ட் 3 ரன்களில் வெளியேறினார். வல்தாட்டி 23 ரன்களில் ஆட்டமிழந்தார். இதன்பிறகு ஜோடி சேர்ந்த மார்ஷ், கார்த்திக்கும் அணியை சரிவிலிருந்து மீட்கப் போராடினர். 28 பந்துகளைச் சந்தித்த மார்ஷ் 1 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 32 ரன்கள் எடுத்து புவனேஷ் குமார் பந்துவீச்சில் போல்டு ஆனார். 27 பந்துகளைச் சந்தித்த கார்த்திக் 3 பவுண்டரிகளுடன் 30 ரன்கள் எடுத்து வெளியேறினார். இதன்பிறகு வந்த வீரர்கள் வேகமாக வெளியேறினர். இறுதியில் அந்த அணி 8 விக்கெட் இழப்புக்கு 119 ரன்கள் எடுத்தது. பின்னர் ஆடிய புணே அணியில் ரைடர் 15 ரன்களில் ஆட்டமிழந்தார். பாண்டே 28 ரன்களில் பிரவீண் குமார் பந்துவீச்சில் ஸ்டம்பை பறிகொடுத்தார். உத்தப்பா 18 பந்துகளில் 22 ரன்கள் எடுத்து பெவிலியன் திரும்பினார். யுவராஜ் அதிரடியாக விளையாடினார். 15-வது ஓவரில் யுவராஜ் 2 சிக்ஸர்களையும், 2 பவுண்டரிகளையும் விளாச வெற்றி இலக்கை நெருங்கியது புணே. இருப்பினும் அடுத்த ஓவரில் யுவராஜ் ஆட்டமிழந்தார். அவர் 15 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 35 ரன்கள் எடுத்தார். இறுதியில் அந்த அணி 17.1 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 120 ரன்கள் எடுத்து வெற்றிபெற்றது. 4 ஓவர்களை வீசி 17 ரன்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்திய ராகுல் சர்மா ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.



## சென்னை வெற்றி

சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற ஐபிஎல் லீக் ஆட்டத்தில் சென்னை அணி 18 ரன்கள் வித்தியாசத்தில் டெல்லியை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம் சென்னை அணி 16 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த ஆட்டத்தில் தோற்றதன் மூலம் டெல்லி அணி போட்டியிலிருந்தே வெளியேறியுள்ளது. முதலில் ஆடிய சென்னை அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 176 ரன்கள் எடுத்தது. பின்னர் ஆடிய டெல்லி அணி 20 ஓவர்களில் 6விக்கெட் இழப்புக்கு 158 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வி கண்டது. டாஸ் வென்ற சென்னை அணி பேட்டிங்கைத் தேர்வு செய்தது. மைக் ஹசி 5, ரெய்னா 14 ரன்களில் வெளியேறியபோதும், மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் விஜய் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 35 ரன்கள் எடுத்து வெளியேறினார். இதன்பிறகு ஜோடி சேர்ந்த பத்ரிநாத்தும், தோனியும் டெல்லி பந்துவீச்சாளர்களை பதம் பார்த்தனர். பத்ரிநாத் 1 சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 55 ரன்கள் எடுத்தார். பதான் வீசிய கடைசி ஓவரின் இரண்டாவது பந்தில் அரைசதமடித்த தோனி, அந்த ஓவரின் கடைசி இரண்டு பந்துகளை சிக்ஸருக்கு விரட்ட சென்னை 176 ரன்கள் குவித்தது. தோனி 31 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 63 ரன்கள் எடுத்து களத்தில் இருந்தார். கடைசி 4 ஓவர்களில் மட்டும் சென்னை 59 ரன்கள் குவித்தது.

## டெல்லி தோல்வி

பின்னர் ஆடிய டெல்லி அணியில் ஓஜா அதிரடியாக ஆடினார். மோர்கல் வீசிய 3-வது ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர்களை விளாசினார். அதே ஓவரிலேயே அவர் 25 ரன்களில் வெளியேறினார். இதன்பிறகு வந்தவர்களில் வேணுகோபால் 2 சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 30 ரன்கள் எடுத்தார். பதான் தனிநபராக நின்று போராடினார். இருப்பினும் டெல்லி அணியால் 6 விக்கெட் இழப்புக்கு 158 ரன்களே எடுக்க முடிந்தது. பதான் 34 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 2 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 44 ரன்கள் எடுத்து களத்தில் இருந்தார். தோனி ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

# இளைஞர்களின் எதிர்ப்புத் தன்மை

## ஓடும் நீர் உறைவதில்லை 122

அன்பார்ந்த வாசகர்களுக்கு: இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள விடயம் பற்றிய உங்கள் சுய பார்வை இப்பகுதியில் இடம்பெற விரும்பினால் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி kgmaster54@hotmail.com எனும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

தற்கால இளைஞர்களின் மனோபாவமானது எதிர்ப்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பது எம்மில் பலருக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தரலாம். நாம் இளைஞர்களாக இருந்த காலத்தில், எமது மனோபாவமானது, எம்மைவிட வயதால் கூடியவர்களால் அல்லது அறிவால் உயர்ந்தவர்களால் அல்லது அனுபவத்தால் முதிர்ச்சி பெற்றவர்களால் ஒரு விடயம் தரப்படும் போது அதை மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளுதல் வழக்கமாக இருந்தது. இருந்தது மட்டுமல்ல இப்போதும் இருக்கின்றது. ஆனால் தற்கால இளைஞர்களோ, எதிர்ப்புத் தன்மை அதிகம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இக்கட்டுரை மூலம் தற்கால இளைஞர்களிடம் எதிர்ப்புத் தன்மை மேலோங்கி இருப்பதற்கான காரணம் என்ன என்பதை பகிர்ந்துகொள்வதே எனது நோக்கமாகும். முதலில், நாம் இளைஞர்களாக வாழ்ந்த காலப் பகுதியை ஒரு மீளாய்வு செய்வது அவசியமாகின்றது. நாம் பிறந்ததிலிருந்து கணிசமான காலத்திற்கு நமது பெற்றோர்கள், உற்றார்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலர் நமது

**KG Master-kgmaster@rogers.com**

ஒட்டு மொத்தமான வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தாங்களாவே ஏற்றுக்கொண்டார்கள். இன்னொரு வகையில் கூறுவதாயின் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய வகையில் சமுதாயக் கட்டமைப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனால் இந்தக் கட்டமைப்புக்குள்ளேயே எமது வாழ்க்கை உள்ளடக்கப்பட வேண்டியதாயிற்று. அத்துடன் இவர்கள் அனைவரும் அறிந்துகொண்ட தெரிந்து கொண்ட விடயங்கள் அனைத்தும் இவர்களைப் பொறுப்பாக ஏற்றுக்கொண்டவர்களது அறிதலாகவும் தெரிதலாகவும் இருந்தன. இன்னும் சிறிது காலம் நாம் பின்னோக்கிச் செல்வோமாயின் இவர்கள் அறிந்துகொண்ட, தெரிந்துகொண்ட விடயங்களின் அடித்தளமாக இவர்கள் சார்ந்த மதம், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன அமைந்திருந்தன. இவையனைத்தும் தனி மனித ஒழுக்கத்தை மையமாக வைத்து மனித சமுதாயத்தை நகர்த்துவதற்குப் பயன் படுத்தப்பட வேண்டியதாயிற்று. அத்துடன் மாற்றங்களுக்கு இடமளிக்க முடியாத வகையில் அல்லது இடமளிக்கக் கூடாத வகையில் பல தலைமுறைகளாக பின்பற்றுதல், வழிப்படுத்தல் என்ற அடிப்படையில் பயன்படுத்தப்படுவதாயிற்று.

இவ்வாறான விடயங்கள் சமூக விதிமுறைகளாக நீண்ட காலமாகப் பின்பற்றப்படுவதற்கு மிகவும் சாதகமாக அமைந்தது ஒரு சமூகத்திற்கும் இன்னொரு சமூகத்துக்கும், ஒரு இனத்துக்கும் இன்னொரு இனத்துக்கும், ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையில் தடுக்கப்பட்ட அல்லது தவிர்க்கப்பட்ட



அல்லது இயல்பாகவே மற்றைய சமூகத்தின் வாழ்வு முறைகளைப் புரிந்து கொள்ளவோ அல்லது அறிந்து கொள்ளவோ வசதிகளற்று இருந்தமையே ஆகும். ஒவ்வொரு சமூகமும் மிகச் சிறிய ஒரு வட்டத்துக்குள் தமது விழுமியங்களை மட்டும் நடைமுறைப்படுத்துவதாகவும் அவற்றை ஏற்றுக்கொள்வதுதான் வாழ்க்கையின் அடிப்படை எனவும் கருதிக்கொண்டது. இதனால் ஏதோ ஒரு கால கட்டத்தில் அப்போதைய சூழ்நிலைக்கு அவசியம் எனக் கருதப்பட்ட விடயங்கள் தத்துவங்களாகவும் போதனைகளாகவும் மக்கள் மனதில் மீளாய்வுக்கு அல்லது மாற்றத்திற்கு இடமளிக்கப்பட முடியாத வகையில் பதிவு செய்யப்பட்டன. இதனால் அப்போதைய இளைஞர்களால் "ஏற்றுக்கொள்ளல்" அவசியமானது எனக் கருதப்படவேண்டியதாயிற்று. சில சந்தர்ப்பங்களில் ஒரு சில இளைஞர்கள் எதிர்ப்பைக் காட்ட முயலும்போதெல்லாம் பலர் ஒன்று திரண்டு அந்த எதிர்ப்பை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுபவர்களாக இருந்தார்கள். எனவே அக்கால இளைஞர்களுக்கு "ஏற்றுக்கொள்ளல்" தன்னிச்சையாகவும் தவிர்க்கமுடியாததாகவும் அமைந்தது. இதனால் எமக்குத் தனித்துவம் இருந்தும் கூட, எமது சொந்தக் கருத்தை தன்னிச்சையாக வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. ஏனெனில் எமது கருத்துக்கள் ஒருபொழுதும் எமக்குப் போதிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் நடைமுறைகளுக்கும் எதிராக அமையக் கூடாது என்பதில் சமூகம் மிகவும் உன்னிப்பான கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது. இன்னொரு வகையில் கூறுவதாயின் ஒவ்வொரு மதமும் அதன் தத்துவங்களையும் நடைமுறைகளையும் இறுதியானதாக்கிக் கொண்டன. புதிய ஒரு கிருஷ்ணரோ அல்லது யேசுவோ அல்லது நபிகளோ அல்லது புத்தரோ உருவாகுவதற்கு வாய்ப்பு நிராகரிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொடர்பாடல் என்பவற்றின் அபரிமிதமான வளர்ச்சி உலகத்தை உள்ளங்கைக்குள் கொண்டுவந்துள்ளது. அது மட்டுமன்றி ஒரு விடயம் பற்றிய கருத்துக்களையும் விளக்கங்களையும் பல்வேறு வகையான கோணங்களில் ஆய்வு செய்வதற்கு இக்கால இளைஞர்களுக்கு எந்தவித தடைகளுமின்றி வாய்ப்பளிக்கப்படுகின்றது. இதனால் ஒரு விடயம், அல்லது தத்துவம், அல்லது கோட்பாடு அறிவியல் ரீதியாக மட்டுமன்றி விஞ்ஞான ரீதியாகவும் சரியா அல்லது தவறா என்பதை நிரூபிக்க வேண்டியுள்ளது. இதற்கும் மேலாக மாற்றங்களின் அதி வேகத்தன்மை "இதுதான் இறுதியானது" என எதயுமே வரையறுத்துக் கூற முடியாமல் செய்துவிடுகின்றது. இன்றைய புதியவைகள் அன்றைய தினத்திலேயே பழையவையாகி விடுகின்றன. அந்த வேகத்தில் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால் இன்றைய இளைஞர்கள் பிறரின் நம்பிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. இந்த ஏற்றுக்கொள்ளாத தன்மை காலத்தின் தேவையாக அமைந்துவிட்டது. ஆம் வாசகர்களே, இன்றைய இளைஞர்களின் எதிர்ப்புத்தன்மை காலத்தின் கட்டளை. வாழ்வியல் நடைமுறைக்கு ஒவ்வாத தத்துவங்களும், கோட்பாடுகளும், மரபுகளும் விலக்கப்பட்டு மனிதனின் தனித்துவத்துக்கு பாதகமாக அமையும் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் களையப்பட்டு உண்மை எது என்பதைத் தேடும் முயற்சியின் ஆரம்பம் தான் இன்றைய இளையர்களின் எதிர்புத்தன்மை. அவர்கள் எதிர்ப்பது புளித்துப் புரையோடிப்போன, நடைமுறை வாழ்வியலுக்கு ஒவ்வாத மூட நம்பிக்கைகளையும் அதன் தற்போதைய உடமையாளர்களையும் தான். அறிவியல் ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் மனிதவாழ்வுக்கு உகந்தது எவை என்பதை உறுதிசெய்வதுதான் இன்றைய இளைஞர்களின் தாகம். அதனால் தான் அவர்கள் எந்தவொரு விடயமும் அறிவியலாலும் விஞ்ஞானத்தாலும் உண்மை என நிருபிக்கப்படும் வரை அவற்றில் நம்பிக்கைகொள்வதில்லை. எனவே, இன்றைய இளைஞர்களின் தாகத்தை நாம் புரிந்துகொண்டால் அவர்களின் எதிர்ப்புத்தன்மை காலத்தின் தேவை என்பதும் உண்மையைத் தேடும் பயணம் என்பதும் புலனாகும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master



**LOYAL PEST CONTROL**

COMMERCIAL PROTECTION PROGRAMME

• Cockroaches • Bedbugs • Spiders • Mice • Carpener Ants
• Raccoon • Squirrel • Wasps • Fleas • Flies Etc.

**Ranjan (Muru)**

Insured / Licensed / Experienced Service Technician



416.464.2415/ loyalpestcontrol@hotmail.com

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

மஹராஜியின் உரைகள்



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# சட்டவிரோத வாகன தரிப்புகளுக்கு எதிராக ரொறொன்ரோவில் வழங்கப்படும் தண்டனைகள்

## கனடிய தகவல் தொடர் 148

சட்டவிரோதமாக ரொறொன்ரோவில் வாகனம் தரிப்பவர்களுக்கு ரிக்கற் வழங்கும் அதிகாரமுடையோர் யார்? அவ்வாறு வழங்குவதினால் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள என விதிவிலக்கப்பட்டவர்கள் யார்? நியாயமற்ற ரிக்கற்றுகளுக்கு எதிராக முறைப்பாடுகள் எங்கே? எப்படி முன் எடுப்பது என்ற விடயங்களை கடந்த இதழில் பார்த்தோம்.

வாகனத் தரிப்புகளின் தவறுகளும், அதற்காக வழங்கும் தண்டனை தொகைகள்? அவை தொடர்பாக முன் எடுக்கப்படும் நடவடிக்கைகள், தண்டனை ரிக்கற்றிலிருந்து தப்பிக்க வழிகாட்டும் ரிக்கற்றில் உள்ள தவறுகள் எவை? என்பது பற்றியும் இவ் இதழில் பார்ப்போம்.

1. உடல் அங்கமானவர்களுக்குரிய வாகன தரிப்பு இடத்தில் அதற்குரிய அடையாள அட்டையில்லாது தரிப்பு செய்தால் $450 டொலர் வரை தண்டனை ரிக்கற் வழங்கலாம். (Parking in a Disabled parking zone)

2. தீயணைக்கும் பகுதியினை தடைசெய்து வாகனம் நிறுத்தினால்? $100 - $250 வரை வழங்கப்படலாம். (Parking in fire route)

3. தீயணைக்கும் தண்ணீர் குழாய்க்கு அருகில் மூன்று மீற்றருக்குள் வாகனம் தரித்து இருந்தால்? $100 டொலர் வரை வழங்கப்படலாம். (Parking in fire Hydrant)

4. மூன்று மணித்தியாலயம் மட்டும் வாகன தரிப்பு செய்யலாம் என்ற இடத்தில் அதனை மீ அதிக நேரம் தரிப்பு செய்தால்? $15 வரை வழங்கப்படலாம். (Park longer than 3 hores)

5. வீதியோரமாக நெருக்கமாக வாகனம் நிறுத்தாது விளிம்பிலிருந்து 30 செ.மீற்றருக்கு அப்பால் நிறுத்தினால் $15 டொலர் வரை வழங்கப்படலாம். (Park more than 30cm from curb)

6. நடைபாதைகளுக்கு மேலால் அல்லது குறுக்காக வாகனம் நிறுத்தினால் $60 டொலர் வரை வழங்கப்படலாம். (Stop on/over sidewalk / footh path)

7. வாகனம் தரிக்க கூடாது என குறிப்பிட்ட வீதியோரங்களில் வாகனம் தரித்தால்? $30 டொலர் வரை வழங்கப்படலாம். (Parking on 'no parking' street)

8. ரொறொன்ரோ நகரின் வீதி ஒன்றில் அந்த வீதியில் வாகனம் தரிக்க போகும் இடத்தில் 'வாகனம் தரிக்க கூடாது' (No parking signs) என்ற நகரசபையின் சைகை எதுவுமில்லையேல் மூன்று மணித்தியாலம் வரை அந்த இடத்தில் வாகனம் தரிப்பு செய்யலாம். தொடர்ந்து மூன்று மணித்தியாலத்திற்கு மேலாக சில நேரங்களில் இரவு முழுவதும் வாகனம் தரித்து நிற்கின்றது என்பது அவதானிக்கப்பட்டு விட்டால் அங்கு ஒரு $15 டொலர் ரிக்கற் வைக்கப்படும்.

9. Park on boulevard - 30 டொலர் வரை வழங்கப்படலாம்.

சில வீடுகள் உள்ள இடங்களில் வீடுகளுக்கு நகர்புறம் வாகனம் தரிப்பு இடம் அவர்களுக்கு இல்லாத இடங்களில் (No drive way) குறிப்பாக நகரின் நெருக்கமான வீடு உள்ள இடங்களில் வீதியோரமாக ஒரு பக்கம் மட்டும் வாகனம் தரிப்பதற்கு நகர-சபை அனுமதி வழங்கப்பட்டிருப்பது வழமையாகும்.

நடத்தை அதிதிருப்தியாக இருந்தால் 416.392.3000

**சட்டவிரோத வாகன தரிப்பு தண்டனை ரிக்கற் (Parking Ticket) தொடர்பான நடவடிக்கைகள் எவ்வாறு முன் எடுக்கப்படும்?**

1. இன்றிலிருந்து 15 நாட்களுக்கிடையில் இத்தண்டனை ரிக்கற்றில் குறிப்பிடப்பட்ட தொகையினை (ஒரு $30 டொலர் என



இவ்வாறு அனுமதி வழங்கப்படாத இடங்களில் அப்பகுதிகளில் வசிக்கும் உரிமையாளர்கள் கூட்டாக நகரசபைக்கு மனுச்செய்து அனுமதி பெறலாம்.

சில நேரங்களில் வீட்டு முன்பக்கம் திருத்தவேலை நடந்தால் (Drive way paved இந்நிலையில் வீதியோரமாக சில நாட்கள் நிறுத்த வேண்டிவந்தால் Parking Enforcement Unit, Phone: 416.808.6500, என்னும் பிரிவுக்கு அழைத்து முன் அனுமதி பெற்று வீதியோரமாக வாகனம் தரிப்பு செய்யலாம்.

சிலநேரங்களில் ரிக்கற் வைத்த உத்தியோகத்தர் மீதோ அல்லது அவர் நடத்தை திருப்தியாக இல்லாவிட்டால் பின்வரும் விலாசத்திற்கு தங்கள் முறைப்பாட்டினை எடுத்துச் செல்லலாம்.

Toronto police enforcement services parking
40, College St.
Tornoto, ON M5G 2J3

Attention : Unit commander parking enforcement' சட்டவிரோத வாகன தரிப்பு என குறிப்பிட்டு வாகனத்தினை கட்டி இழுத்து செல்பவர் (Tow Truck Operators)

வைத்துக்கொள்வோம்)

சட்டவிரோதமாக வாகனம் தரித்த குற்றத்திற்காக நகரசபைக்கு செலுத்த வேண்டும் என குறிப்பிட்டு வாகனத்தின் முன்கண்ணாடி பகுதியில் கண்ணாடி துடைக்கும் பிளேற் கம்பனிகளுக்கு இடையில் (Windshield wiper plates) செலுத்தி வைக்கப்படுவது வழமை! என்பது யாவரும் அறிந்த விடயம் ஆகும்.

2. இப் 15 நாட்களுக்கிடையில் தண்டனை பணம் செலுத்த தவறினால் இந்நாட்களின் பின்பு வாகன உரிமையாளரின் விலாசத்திற்கு 'சமீபத்தில் செய்துள்ள குற்றம் தொடர்பான தகவல்' (Notice of Impending fine) என குறிப்பிட்டு ஒரு கடிதம் தேடிவரும். இக்கடிதத்தில் மீண்டும் ஒரு 15 நாட்களுக்கு இடையில் 'தண்டனை பணத்தினை செலுத்து' இல்லையேல்' நீதிமன்ற விசாரணைக்கு மனு செய்' என கோரப்பட்டிருக்கும்.

இந்த தண்டனை உதாசீனம் செய்தால் வாகன உரிமையாளரின் விலாசத்திற்கு 'குறிப்பிட்ட திகதிக்குள் தண்டனை பணத்தினை செலுத்து' (Notice of Fine and Due Date) என்ற ஆணையில் மீண்டும் ஒரு எச்சரிக்கை கடிதம் தேடிவரும்.

(இவ் எச்சரிக்கை ஆணையில் $30 டொலரா க ஏற்கெனவே இருந்த தண்டனை ரிக்கற் மேலும் பணம் செலுத்த தவறியதற்கு $16 டொலர் சேர்ந்து $46 டொலராக குறிப்பிடப்பட்டிருக்கும்)

இந்நிலைமையில் இருந்தாலும் நீதிமன்றம் சென்று அங்குள்ள சமாதான நீதவானை (Justice of Peace) சந்தித்து வழக்கு விசாரணையினை மீள மனு செய்ய கோரியும் பார்க்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கலாம்.


4. இந்த எச்சரிக்கை ஆணையினை உதாசீனம் செய்தால் 30 நாட்களின் பின்பு இக்குற்றச்சாட்டு பதிவு என்பது மாகாண போக்குவரத்து அமைச்சு அலுவலகத்திற்கு (Ministry of Transportation) அனுப்பி வைக்கப்படும். அங்கு அனுப்பி வைக்கப்படும் போது தண்டனை பணம் இன்னொரு $20 டொலரால் அதிகரிக்கப் படும். அதாவது இப்போது தண்டனை ரிக்கற் $66 டொலருக்கு ஏறிவிடும்.

5. மாகாண போக்குவரத்து அமைச்சின் பதிவில் இருக்கும் போதுதான் பிரச்சினையும் ஆரம்பிக்கும். அதாவது வருடம் வருடம் வாகன உரிமை பத்திரம் புதுப்பிக்கும் போதும், புதிய ஸ்ரிகர் எடுக்க முயற்சிக்கும்போதும் இதனை செலுத்தி முடிக்காமல் தொடர்ந்து புதுப்பித்து வாகனம் செலுத்த முடியாது.

6. இனிமேல் காலங்களில் வாகனம் செலுத்தப் போவதில்லை தானே என்ற முடிவுகள் சில நேரங்களில் வரும் நேரத்தில் இக்கட்டணம் செலுத்த தேவையில்லை என்ற முடிவுக்கும் வரலாம்.

ஆனால் என்ன நடக்கும்?

இரு வருடங்களின் பின்பு கடன் வசூலிக்கும் முகவர் கம்பனிகளிடம் (Credit Collection Agency) கையளிக்கப்படும். அவர்கள் தங்களிடமிருந்து அதனை வசூலிக்க முயல்வார்கள். அங்கும் தண்டனை பணம் செலுத்தாது உதாசீனம் செய்தால் அது பதிவில் போய்விடும். (Credit Bureau Recording) அதாவது செலுத்த வேண்டிய பணத்தினை செலுத்த தவறியவர் என்ற பதிவில் போகும் போது அது கனடாவில் கடன் பெறும் வலிமையினை பாதிக்கும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# நினைவாற்றல் - MEMORY - 9

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் நினைவாற்றல் குறைபாடுகள் பற்றி ஆராய்ந்தோம். ஒருவர் இவ்வாறான குறைபாடுகளால் பாதிக்கப்படுவது மிகவும் துயரமானது. பாதிக்கப்படுபவரின் உடல் நலத்தைக் கவனிப்பதில் மிகவும் அக்கறை எடுக்கப்படவேண்டும். இவ்வாறானவர்களின் தேவைகளைச் சிறப்பாகச் செய்வதற்குரிய போதிய வசதிகள் சமூகத்தில் இருக்க வேண்டும். இப்படியான குறைபாடுகளை நீக்குவதற்கு உரிய வழிமுறை உள்ளது என்ற எண்ணத்துடன் அவர்களை அனுசரித்துக் கவனிக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் நினைவாற்றல் குறைபாடுள்ள ஒருவர் இருக்கும்போது குடும்ப உறுப்பினர்கள் ஆளாத்துயரத்திற்கும் மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றார்கள். இத்தகைய குடும்பங்களுக்கு அரச உதவிகள் பெருமளவில் கிடைக்க வேண்டியது அவசியமாகின்றது. மேலாக நண்பர்களும், உறவினர்களும், முழுச்சமூகமும் தம்மால் இயன்ற ஆதரவை வழங்கி வர வேண்டும். எந்த நிலையிலும் பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர் குடும்பத்தினரோ மனம் நோகும்படியான செயல்களை நாம் செய்யக் கூடாது. இத்தகைய குறைபாடு ஒன்றினால் தனது சிறுவயதில் பாதிக்கப்பட்டவர் டொமினிக் ஓ பிரைன் (Dominic O' Brein) என்பவர். இவருக்குச் சிறு வயதில் ஏற்பட்ட ஒரு விபத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார். இவர் பிற்காலத்தில் எட்டுத் தடவைகள் உலக நினைவாற்றல் சாம்பியன் (World memory Champion) ஆக வந்தார் என்பதை அறியும்பொழுது ஆச்சரியமாக உள்ளது. எனவே இவ்வாறான நினைவாற்றல் குறைபாடுடையவர்களை மனம் தளராது பேணி இந்தக் குறைபாட்டில் இருந்து மீள்வதற்குரிய கவனிப்பை நாம் வழங்க வேண்டும். இவர் சிறு வயதில் டிஸ்லெக்சியா (Dyslexia) என்ற நோய் கொண்டவராக அடையாளம் காணப்பட்டார். அவரின் பாடசாலைப் பருவத்தில் அவர் மீது யாரும் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. அவர் பிற்காலத்தில் கின்னஸ் உலக சாதனைப் பதிவேட்டில் இடம் பிடிப்பார் என்பதை யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் மொத்தம் எட்டுத் தடவைகள் உலக நினைவாற்றல் சம்பியன-ாக வந்தார். பாடசாலையில் அவரை மூளைத் தொழிற்பாடு அற்றவராகப் பார்த்தார்கள். அவருக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் விரக்தி கொண்டார்கள். அதனால் அவர்மீது கோபமும் கொண்டார்கள். மற்றவர்கள் முன்னிலையில் அவரைக் குறைத்துப் பேசினார்கள். அவரின் பதினொன்றாவது வயதில் சுய மதிப்பு (Self-Esteem) அற்றவராகக் காணப்பட்டார். ஆனால் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு தானே எவ்வாறு பிளே காட்ஸ் (Play Cards) கட்டு ஒன்றை முழுமையாக எவ்வாறு நினைவில் வைத்திருக்கலாம் எனக் கற்றுக் கொண்டார். இந்த முயற்சியை ஒரு படிக்கல்லாக எடுத்துக் கொண்டு வேறு எதையெல்லாம் என்னால் சாதிக்க முடியும் எனச் சிந்தித்தார். அந்தச் சிந்தனைகளின் வெளிப்பாட்டினால் மெதுவாக ஒரு வெற்றியாளனாகப் படிப்படியாக உயர்வுற்றார். அவர் தனது 34வது வயதில் முதலாவது உலக நினைவாற்றல் சாம்பியன் போட்டியில் பங்கு பற்றினார். இருபது வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட அவரின் நினைவாற்றல் வலு பல மடங்காக அதிகரித்து இருந்தது. இவர் தனது 34வது வயதிற்கும் 54வது வயதிற்கும் இடைப்பட்ட காலத்தில் எட்டுத் தடவைகள் உலக நினைவாற்றல் சாம்பியனாக வந்தார். இவரின் சாதனை ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்து விட்டு அதனால் உந்தப்பட்டே தனது சாதனை முயற்சியை முன்னெடுத்தார் எனக் கூறப்படுகின்றது. அவர் நினவாற்றல் தொடர்பாக பல நூல்களை எழுதியுள்ளதோடு ஒரு பயிற்சியாளராகவும் விளங்குகின்றார்.

இவர் டொமினிக் சிஸ்ரம் (Dominic System) என்ற நினைவாற்றல் நுட்பத்தை உருவாக்கினார். இதன் மூலம் ஒரு பிளேயிங் காட்ஸ் கட்டில் உள்ளவற்றை ஒரு நிமிடத்திற்குள் நினைவாற்றல் செய்ய முடிந்தது. இந்த நுட்பத்தில் இலக்கங்களுக்கு பதிலாக ஆங்கில எழுத்துக்களைப் பாவிப்பதோடு எழுத்துக்களை பிரசித்தி பெற்றவர்களின் பெயரை அல்லது பிரயாணம் செய்த இடங்களின் பெயர்களை நினைவு செய்தல் மூலமும் நினைவில் வைத்திருக்கப்படுகின்றது. 0 தொடக்கம் 99 வரையிலான இலக்கங்கள் எழுத்துக்களைக் கொண்ட பிரபல்யமானவர்களின் பெயர்களையும் அவர்களின் இயல்புகளையும் குறிப்பதனால் நினைவாற்றல் செய்யப்படுகின்றது.

1A, 2B,3C, 4D,5E, 6S, 7G, 8H, 9N, 0 O



**- அகணி -**
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# கனடாவில்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

இத்தண்டனை ரிக்கற்றில் தவறுகள் ஏதாவது இருந்தால் இலகுவாக தப்பியும் கொள்ளலாம். உதாரணமாக

• எந்த வகையான வாகனம் என்பதில் தவறு. அதாவது 'ரொயோற்றா' வாகனம் என்பதற்கு பதிலாக 'ஹொண்டா' என தவறுதலாக குறிப்பிட்டிருந்தால் அதுவே தப்பிக்க போதும். (Make of Vehicle Incorrect)

• ரிக்கற்றில் குறிப்பிடவேண்டிய இடத்தில் தகவல் ஒன்றினை குறிப்பிட தவறினால் உதாரணமாக

1. தண்டனை தொகை (Fine Amount)
2. குற்றம் (Offense)
3. ரிக்கற் வைத்த உத்தியோகத்தரின் (Office Identification)
4. திகதி & கையொப்பம் (Date & Sign)

ஆகியவற்றினை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

தண்டனைப்பணம் என வாகன தரிப்புகளுக்கு எதிராக வழங்கப்பட்டதனை செலுத்தாது நீதிமன்ற விசாரணைக்கு என குவிந்துள்ள ஏராளமான வழக்குகளை குறிப்பாக $30 டொலர் தண்டனைக்கு உட்பட்ட மனுக்களை விசாரணை மன்றங்கள், விசாரணையாளர் கள், அலுவலக உத்தியோகத்தர்கள் என்பதற்கு குறைகாரணமாக ரொறொன்ரோ நகரசபை தள்ளுபடி செய்து சிலவற்றினை மட்டுமே விசாரணைக்கு எடுத்துள்ளது



எனவும், விசாரணையின்றி தள்ளப்பட்ட விடயங்கள் மனு செய்தவருக்கே தெரியாது நீதிமன்ற அழைப்பினை எதிர்பார்த்து காத்துக்கொண்டு ரொறொன்ரோவில் ஏராளமானோர் உள்ளனர் என்ற சுவையான செய்தியினையும் 'ரொறொன்ரோ ஸ்ரார்' (Toronto Star) யூன் 21. 2008 இல் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

# நினைவாற்றல்...


15ஆம் பக்கத்தொடர்ச்சி

உதாரணமாக 15 என்ற எண்ணை AE குறிக்கும். AE Albert Einstein இனைக்குறிக்க அவர் கரும்பலகையில் எழுதுவதை நினைவுபடுத்தல் மூலம் இலக்கம் 15 நினைவாற்றல் செய்யப்படுகின்றது. இந்த முறையில் எழுத்துக்களையும் பிரபல்யமான பெயர்களையும் சேர்த்துப் பாவிப்பதன் மூலம் நினைவாற்றல் செய்யப்படுகின்றது. டொமினிக் ஓ பிரைன் பிளேயிங் காட்ஸில் உள்ள விடயங்களை தனக்குத் தெரிந்த ஒருவருடன் அல்லது தெரிந்த ஒரு பொருளுடன் ஒப்பிட்டு அதன் மூலம் நினைவு படுத்த முயற்சித்தார். இவ்வாறான கற்பனை உருவங்கள் நினைவாற்றலில் பெரும் துணையாக இருக்கும். எமது கற்பனைத்திறனைப் பயன்படுத்தி தேவையான விடயங்களை நினைவுபடுத்துவதற்குரிய புதிய புதிய நுட்பங்களை நாமே உருவாக்கவும் முடியும். இவ்வாறான நினைவாற்றல் நுட்பங்களைப் பாவித்ததன் மூலம் அதீத நினைவாற்றல் வலு கொண்டவராக டொமினிக் ஓ பிரைன் உயர்ந்துள்ளார் என்பதை அறியும்போது இந்த நினைவாற்றல் நுட்பங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

இரண்டு பாகங்களைக் கொண்ட மூளையில் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம் இடது பாகம் வலது பக்க மூளையின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்த வலது பாகம் இடது பக்க மூளையின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்து கின்றது. இடது கைப்பழக்கத்தைக் கொண்ட டொமினிக் ஓ பிரைன் வலது மூளை ஆதிக்கராக இருந்தார். இடது-வலது பக்க மூளைத் தொழிற்பாடு பற்றிய கருத்துக்கள் நாளாந்தம் மாற்றம் அடைகின்றன. அண்மைக்கால ஆய்வுகளில் இரண்டு கெமிஸ்பியேர்சும் (Hemispheres) மூளையின் தொழிற்பாட்டில் பங்கு கொள்கின்றன என்ற கருத்து நிலவுகின்றது. முன்பு கட்டுரையில் குறிக்கப்பட்டதைப்போல இடது கெமிஸ்பியேர்ஸ் அதிகம் விபரங்களில் (Details) ஈடுபடும். வலது கெமிஸ்பியேர்ஸ் மேலெழுந்த வாரியாக (Bigger Picture) விடயங்களைக் கவனிக்கும்.

ஒரு கணினியில் மென்பொருள் (Software), வன்பொருள் (Hardware) இரண்டும் சேர்ந்துதான் தொழிற்பாடு இருப்பதைப் போல மூளையில் நினைவாற்றல் நுட்பங்களும், ஆரோக்கியமான மூளை உறுப்புக்களும் இணைந்துதான் தொழிற்பாடு ஏற்படுகின்றது. எமது மூளையின் உறுப்புக்களின் தொழிற்பாட்டைச் சீராக வைத்திருத்தல் மிகவும் அவசியமாகின்றது. இந்தக் கட்டுரையில் கூட அதற்குத் தேவையான சில விடயங்களை ஆராய்ந்துள்ளோம். இனிமேலும் நாம் இதுபற்றி ஆராய்ந்து கொள்ளலாம்.

எமது நாளாந்த உணவுவகைகளில் கூட மூளையின் ஆரோக்கியத்திற்குத் தேவையானவற்றை சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகின்றது. மூளை உறுப்புக்களிற்குத் தேவையான பயிற்சிகளை அறிந்து அவற்றை நாளாந்தம் செய்து வருதலும் முக்கியமானது. இவ்வாறான பயிற்சிகள் பற்றியும் இந்தத் தொடர் கட்டுரையில் ஆராய்ந்து வருகின்றோம். இதற்கு மேலாகப் பொருத்தமான நினைவாற்றல் நுட்பங்களை அறிந்து பயன்படுத்துவதால் நினைவாற்றல் வலு அதி-கரிக்கப்படுகின்றது. தலையில் ஏற்படும் காயங்கள் பல சந்தர்ப்பங்களில் நினைவாற்றல் குறைபாடுகள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றன. எனவே தலைக் காயங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதில் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். கெல்மெற் (Helmet) அணிந்து கொள்ள வேண்டிய நேரங்களில் தவறாது அதை அணிந்து




கொள்வது மிகவும் அவசியமாகின்றது. முதியோர்கள் விழுவதனால் அவர்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுகின்றது. பல வேளைகளில் நடைபாதைகளிலும், பொது இடங்களிலும் கிடக்கின்ற வழுக்கத்தக்க பொருட்கள், அல்லது பழத்தோல்கள் போன்றவை காரணமாகின்றன. நாம் இவ்வாறான பொருட்களை கீழே வீசாமலும், யாராவது சமூக அக்கறை இன்றி எறிந்திருப்பதைக் கண்டால் அப்பொருட்களை அகற்றுவதன் மூலமும் இன்னுமொருவர் விழுவதைத் தடுக்கலாம். ஒரு சிலர் வாழைப்பழத்தோல் போன்றவற்றை மற்றவர்கள் விழட்டும் என்றே நினைத்து வீசி எறிவதையும் செய்கின்றார்கள். அவ்வாறான செயல்கள் ஒருவர் வாழ்வில் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். பொது நலன் கருதி வாழும் பழக்கம் ஒவ்வொருவரிடமும் இருத்தல் அவசியம் என்று கூறி விடைபெறுகின்றேன். மீண்டும் சந்திப்போம்.

தொடரும்.

# பத்துவகை தலைவலியையும்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

இரண்டு அடி அகலமான இடைவெளியில் நிற்கவும். பின் இரண்டு கைகளாலும் இடுப்பைப் பிடித்துக் கொண்டு முன்புறம் குனிய வேண்டும். பின்பு இடுப்பின்மேல் பகுதியிலுள்ள உடல் பகுதியை வட்டவடிவாக இடமிருந்து வலமாகவும், பின்



வலமிருந்து இடமாகவும் 10 தடவைகள் சுற்றவும். இதனால் தலையில் இருக்கும் நீர் இறங்கும்போது தலைவலி குணமாகும்.

### மூச்சுப் பயிற்சியும் தியானமும் கபால பாதி மூச்சுப்பயிற்சி

நேராக நின்று கொண்டு உள்ளங்கைகள் இரண்டையும் வயிற்றின் மேல் வைத்தபடி வாயினை மூடிக்கொள்ளவும் அடுத்து மூச்சை மூக்கின் ஆழமாக உள்ளிழுத்து மிகவும் வேகமாக இழுத்த மூச்சினை மூக்கின் வழியாக உதறியபடி வெளிவிடவும் இதனை திரும்பத் திரும்ப வேகமாக இருபது தடவைகள் செய்யவும். பின்பு சற்று நேரம் கழித்து மறுபடியும் 20 தடவைகள் இழுத்து விடவும்.

இதனால் மண்டையோட்டின் உட்புறத்தில் தேங்கியிருக்கும் பழுதடைந்த இரத்த திசுக்கள் அத்துடன் சேர்ந்த நீர் என்பன வெளிவருகின்றன. இதனை சில நாட்கள் தொடர்ந்து செய்து வந்தால் மைக்ரேன் முதலிய தலைவலிகளும் விடுபட்டு போவது உறுதி. இந்த பயிற்சிகளை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் பழக வேண்டும்.


அடுத்து தினமும் 5 முதல் 10 நிமிடமாவது தியானப் பயிற்சி செய்து வரவேண்டும். இதன்போது நரம்பு மண்டலங்கள் அமைதியடைகின்றன. அத்துடன் தலையின் பின்புறமாக முள்ளந்தண்டுடன் இணையும் இரத்த நாளங்களின் இயக்கம் சீரடைவதால் தலைவலியின் தீவிரத்தன்மை குறைந்து செல்கின்றதை ஒரு சில நிமிடங்களிலேயே உணர முடிகின்றது. இவ்வாறு பயிற்சிகளினால் தலைவலியின் தாக்கத்திலிருந்து முற்றாக விடுபடலாம்.

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.


நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

ELECTRICAL WORKS




FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# பத்துவகை தலைவலியையும் பறந்தோடவைக்கும் யோகாசன மருத்துவம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

***Healing Headache Through Yoga*** **தலைவலிக்கு நிரந்தர தீர்வுகள்**



விபரீதகரணி
VEEBAREETHA KARANI

மனித வாழ்விற்கு ஆதாரமாயிருப்பது உடலும், உயிரும்தான். அதில் உடல் அழிந்தால் உயிர் தானாகவே பிரிந்துவிடும். எனவே இந்த உடலை பாதுகாப்பது நமது முதல் கடமையாகும். உணவு முறைகள் சீராக அமையவேண்டும். உடலில் தேங்கும் கழிவுகள் விரைவில் வெளியேற்றப்படவேண்டும். அல்லாதுவிடின் பலதரப்பட்ட நோய்களுக்கு முகம் கொடுக்கவேண்டும். இந்த வகையில் மனிதனுக்கு வரும் முக்கியமான நோய்களில் தலைவலி என்பது அடிக்கடி வரும் நோயாக இருக்கின்றது. இதில் ஒற்றைத் தலைவலி, இரட்டைத்தலைவலி, வாதத்து தலைவலி, பித்த தலைவலி என்று பத்து வகை உண்டு. உடலில் ஏற்படும் பலவிதமான நோய்களில் தோற்றத்தினாலும், தலையில் நீர் தன்மைகூடியிருந்தாலும் தலைவலிகள் ஏற்படும். அத்துடன் கழுத்துப்பகுதியில் வலி இருந்தாலும் தலைவலி ஏற்படும்.

மலச்சிக்கல் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும். ஒருவருக்கு தொடர்ந்து மலச்சிக்கல் ஏற்படுமானால் பெருங்குடலில் உருவாகும் அபாண வாயுவானது மேலெழுந்து தலைப்பகுதியை அடைந்து அங்கு நீர்கோத்து தலை நரம்புகளைப் பாதிப்படையச் செய்வதனால் தொடர்ச்சியான தலைவலிக்கு ஆளாக நேரிடுகின்றது. அடுத்து உணவு சீராக ஜீரணமாகாதுவிடின் ஒருவதமான புளிப்புத்தன்மை உருவாகி அதன்பின் பித்தம் அதிகமாகி நரம்புகள் வழியாக தலைப்பகுதியை அடைந்து உருவாகின்றது.

### யோகாசன பயிற்சிகள்

காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு குறிப்பிட்ட யோகாசன பயிற்சிகளைச் செய்து வந்தால் இந்த தலைவலியிலிருந்து விடுபடலாம்.

### விபரீதகரணி


விரிப்பில் மல்லாந்து படுத்துக்கொண்டு மெதுவாக இரண்டு கால்களையும் மேலே உயர்த்த வேண்டும். பின் இரண்டு கைகளையும் இடுப்புக்கு கீழ் கொண்டு வந்து உடலை மேலே தூக்கிப் பிடிக்கவேண்டும். கால்கள் தலைக்கு நேராக மேலே இருக்க வேண்டும். இந்த நிலையில் 100 முதல் 500 வினாடிகளுக்கு நிறுத்தவேண்டும். மூச்சை ஆழமாக இழுத்து வெளிவிடவேண்டும். அதன்பின் உடலைத் தளர்த்தி இறக்கவும். இதற்கு மாற்று, ஆசனமாக மச்சாசனம் அல்லது சப்த வஜ்ராசனத்தை செய்யவேண்டும்.

### அர்த்த சிரசாசனம்

வஜ்ராசனத்தில் அமர்ந்து கொண்டு இரண்டு கைகளையும் கோர்த்து முன்புறம் வைத்து தலையைத் தரையில் வைத்து வைத்து முழங்கால் முட்டியை மேலே உயர்த்த வேண்டும். பாதங்கள் தரையில் இருக்க வேண்டும் இவ்வாறு 50 முதல்100 எண்ணிக்கை வரை இருக்கவும் பின்தலையை தூக்கவும்.

### சக்கராசனம்

நேராக நின்று கொண்டு கால்களை



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**SEARCHING FOR FAMILY PHYSICIAN**

To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.


**EMR Ready**
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

Contact: DR. VUKIET TRAN
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

**குடும்ப வைத்தியர் தேவை**

புதிதான ***Medical*** கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.



# வருந்தியும் விருந்தோம்பும் வாழ்வு

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (1)

என்ற வள்ளுவர் பெருமான் வாக்குக்கு அமைய வாழ்ந்த திருத்தொண்டர் பலர். அவர்களுள் மாறனார் என்பவர் மாண்பு சொல்லிமுடியாது. இளையான் குடியிலே பிறந்தமையால் அவர் இளையான்குடி மாற நாயனார் என்று அழைக்கப்பெற்றார். பழுதில்லாத உழுவுத்தொழிலால் அவர் உயர்ந்த செல்வந்தராக விளங்கியவர். மேலான சிவபத்தர், வீட்டுக்கு வருபவர் எவராயினும் சோறுகறி விருந்து அளிப்பதை விரதமாகக் கொண்டவர். அவர் விருந்தளிக்கும் பக்குவத்தைப் பெரியபுராணத்திலே சேக்கிழார் பெருமான் விவரிக்கும் விதம் இது:

கொண்டு வந்து மனை புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார். (2)

விருந்து என்றால் வீட்டிலே சமைத்துக் கொடுப்பது தான். கடைகளில் வாங்கிக் கொடுப்பது விருந்தன்று. மேலும் உணவு அளிப்பது மட்டும் விருந்தன்று. விருந்தோம்பி வேளாண்மையும் செய்தல் வேண்டும். வேளாண்மை என்பது இங்கே வேண்டிய பிற உதவி களைச் செய்தல் என்ற பொருளையுடையது. விருந்தாளரை வரவேற்கும் பண்பும் அதன்பாற்படும். நாயனார் விருந்தாளரை எப்படி வரவேற்கின்றார் என்பது கவனிக்கத் தக்கது.

வந்த விருந்தினரை வீட்டுக்குள் அழைத்து வருகின்றார். வாசலில் வைத்து மிகுந்த அன்போடு அவரது பாதங்களைக் கழுவுகின்றார். பின்னர் இருக்கையில் அமரச்செய்து அருச்சனை புரிகின்றார். இங்கே அருச்சனை என்பது விருந்தினரை இறைவனா கப் பாவித்து மலர்தூவி வழிபடுதல். புத்தாடை அணிவிப்பதும் உண்டு. இவை எல்லாம் செய்தபின்னரே உணவளிப்பு இடம்பெறும். அதுவும் சாதாரண உணவல்ல. உண்ணல், தின்னல், நக்கல், பருகல் என்னும் நால்வகை உணவை கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கயர்ப்பு, உவர்ப்பு ஆகிய அறுசுவைத் திறத்தில் அண்டர் நாயகர் தொண்டராகி ய மாற நாயனார் அளித்து வந்தார் என்பது மேலுள்ள பாடல் தருஞ் செய்தியாகும். விருந்தோம்பி வேளாண்மை செய்வதெல்லாம் செல்வம் இருக்கும்வரைதான். வறுமை யுற்றால் மாறானார் என்ன செய்வார்? தமது விரதத்தை எவ்விதம் தொடருவார்?

தேர்வு ஒன்றை நடத்தத் திருவுள்ளங் கொண்டார் சிவபெருமான். மாறனாரை வறியவராக்கினார். செல்வம் இருந்த காலத்திற் சிறப்பாக விருந்துபசாரம் செய்தோம். இப்பொழுது வறுமை வந்துற்றது. பேசாமல் எமது பாட்டைப் பாரப்போம் என்று நினைத்துச் சாதாரண மக்கள் பின்பற்றி வந்த தொண்டைக் கைவிடுதல் இயல்பு. ஆனால் திருத்தொண்டர் அவ்விதம் வாளாதிருப்பதில்லை. வருவாய் குன்றியவிடத்தும் மாறனார் மனம் மாறவில்லை. தம்மிடமுள்ள பொருள்களை விற்று விற்று விருந்தாளர் பசியை அன்புடன் ஆற்றினார். பொருள்களும் தீர்ந்து விட்டன. கடன்பட்டும் கடமையைச் செய்துவந்தார். எத்தனை நாளைக்குக் கடன்படலாம்? அவரும் மனைவியும் உண்ண வழியில்லாத அளவுக்குப் பஞ்சம் அவர்களை வருத்தியது.

ஒருநாள் பசிவயிற்றுடன் வயல் வேலைகளை முடித்துக்கொண்டு மாலை வீடு திரும்பினார் மாறனார். வயல் விளைந்தாலே இனி வாழ்வு. அன்றிரவு நல்ல மழை. பசி வயிற்றைக் கிள்ளியது. பசிவந்திடப் பத்தும் பறந்து போகும். தூக்கமும் பறந்துபோயிற்று. தூக்கம் வராமல் நள்ளிரவுவரை நாயனார் இருந்தார்.

அந்த இருட்டில் யாரோ கதவைத் தட்டுஞ் சத்தம் கேட்டது. வந்தவரை மாறனார் வரவேற்ற வகை இது:

மாரிக் காலத்து இரவினில் வைகியோர்
தாரிப்பு இன்றிப் பசிதலைக் கொள்வது
பாரித்து இல்லம் அடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டனன். (3)

ஓர் தாரிப்பு இன்றி - எவ்வித உதவியுமில்லாமல். பசி தலைக் கொள்வது பாரித்து - மேலோங்கும் பசியைப் பொறுத்துக்கொண்டு. இல்லம் அடைத்தபின் - வீட்டைப் பூட்டியபின். வேரித்தாரான் - நறுமணம்வீசும் மாலையை அணிந்த மாற நாயனார். பண்புற - மிகுந்த மதிப்புடன். காலம் மாரிக்காலம். நேரம் அகால நேரம். வீட்டுக் கதவும் அடைக்கப்பட்டுவிட்டது. வீட்டில் உணவு எதுவும் இல்லை. வீட்டுக்காரரே பல நாட்களாக உணவு அருந்தவில்லை. இந்நிலையில் ஒருவர் கதவைத் தட்டுகின்றார்.

இக்காலத்திற் பலர் கதவே திறக்க மாட்டார்கள். அல்லது யாரது இந்த நேரத்தில்? என்று சத்தம் போட்டு அனுப்பிவிடுவார்கள். அனுப்பமுடியாது போனால் காவல்துறைக்கு அறிவிப்பார்கள். நாயனார் சிவதொண்டரல்லவா? அன்புடன் எழுந்து கதவைத் திறந்து வந்தவரை எதிர்கொள்கின்றார். அடியவர் ஒருவர் மழையில் நனைந்த ஈரத்துடன் வாசலில் நிற்பதைக் காண்கின்றார். அவரை உள்ளே அழைத்து ஈரத்தைப் போக்கி அமர வைக்கின்றார். வந்தவருக்குப் பசியாக இருக்கவேண்டும். குறிப்பால் உணர்ந்துகொண்ட நாயனார் மனைவியை நோக்கினார். வயலில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வாருங்கள் என்றார் அவர்.

விதைநெல்லை வாரி எடுத்தால் விளைச்சல் பாதிக்கும். மனைவியாருக்கு அது தெரியாததல்ல. வந்தவரின் பசியைத் தீர்க்க வேறு வழியில்லை. இல்லறச் சிறப்புக்கு மனைவியின் பங்களிப்பே அதிகம். அதனாலேதான் அவரை இல்லத்தரசி என்று அழைக்கின்றனர் போலும். நல்ல பணிகளுக்குக் கணவனுடன் ஒத்துப்போவது - ஒத்தாசையாக இருப்பது - நங்கையரின் நயத்தக்க நாகரிகம். அந்த நாகரித்தை பொறுத்த கட்டத்திலே காட்டுகின்றார் அம்மையார். இவரல்லவோ மனைவி என்று மாறனார் மனத்துள்ளே நினைத்திருத்தல்கூடும். பத்தாவுக்கேற்ற நல்ல பதிவிரதை! கொட்டும் மழையில் ஒரு கூடையை எடுத்துக்கொண்டு நடந்தார் நாயனார் நள்ளிரவில். தடவித் தடவித் தேவையான விதைநெல்லைப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டுவந்தார். அவரின் வரவை எதிர்பார்திருந்த மனைவியார் கூடையை வாங்கி நெல்முளைகளைத் துப்பபுரவு செய்தார்.

பின்னர் விறகில்லையே என்றார். அவர். இதோ கொண்டுவருகிறேன் என்று வீட்டு வரிச்சுகளை வெட்டிக்கொண்டு வந்தார் இவர். கறிக்கு என்ன செய்வது என்றார் அவர். வெளியிற் சென்று புன்செய் பயிர்களைப் பிடுங்கிக்கொண்டு வந்தார் இவர். சமையலில் வல்ல இல்லத்தலைவி அவற்றைச் சுவையான கறியாக்கினார். அறுசுவைக்கு ஆறுவிதக் கறிகள் இல்லையென்றாலும் பசி ஆறத்தக்க சுவையில் சமையலை விரைந்து முடித்தார். முடித்தபின் மேம்படு கற்பின் மிக்கார் கணவனார் தம்மை நோக்கி, ‘இணையிலா தானை ஈண்டு அமுது செய்விப்போம்’ என்றார்.

மாறனார் அடியவரை அமுதுசெய்ய அழைத்தார். அவ்வேளை எதிர்பாரதது நடந்தது. அடியவரைக் காணவில்லை. அடியவர் இருந்த இடத்திலே சோதி ஒன்று காணப்பட்டது. நாயனாரும் மனைவியாரும் வியப்புற்று நின்றனர். சோதியுள் சிவபெருமான் விடைமீது உமாதேவியாருடன் காட்சியளித்து, ‘அறுசுவை உணவை நாள்தொறும் விருந்தினருக்கு அளித்து மகிழ்வித்த ஐயனே! நீ உன் மனைவியுடன் எமது உலகை அடைந்து குபேரன் உன் ஏவல் கேட்ப இன்புற்றிருப்பாயாக’ என்றுகூறி மறைந்தருளினார்.

ஒரு தொண்டை மேற்கொண்டால் அதனைத் துண்டிக்காது துணிந்து தொடருதல் வேண்டும். துன்பம் வந்தகாலத்தும் அதனை மகிழ்வோடு இத் தம்பதியர் செய்தனர். மெய்வருந்தக் கூலி தரும். மாறனார் இணையருக்கு நல்ல கூலி கிடைத்தது. பலர் துன்பம் நேர்கையிலேயே இறைவனை நினைப்பதுண்டு. வழக்கமாக இறைவனை வணங்கிவருகின்றவரும் எனக்கா இப்படிச் செய்தாய் என்று தாம் வணங்கும் கடவுளை நிந்திப்பதுமுண்டு. இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை. நாம் அனுபவிக்கும் இன்பத்தினாலேதான் துன்பம் வருகின்றது என்பதைப் பலர் நினைப்பதில்லை.

மனைவியுடன் கூடிக்களிப்பது இன்பம். மனைவி ஒரு நோயுள்ள குழந்தையைப் பெறுவதால் வருவது துன்பம். நண்பருடன் கூடிக் குடிப்பது இன்பம். அதனால் வரும் வருத்தங்கள் துன்பம். இப்படி எமது வினைகளால் நாமே இரண்டையும் தோற்றுவிக்கின்றோம் என்பதுதான் உண்மை. அதற்குப்போய்க் கடவுளைத் திட்டவேண்டியதில்லை. வாகனம் ஒன்றை ஓட்டிச் சென்று விபத்திற் சிக்கிக்கொண்டால் வாகனம் செய்தவரைக் குறைசொல்லிப் பயனில்லை. எம்மிலுள்ள தவறுகளையும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

இன்ப துன்பங்களால் இறைவன் எம்மைப் பக்குவப்படுத்துகின்றான் என்றே கொள்ளுதல் வேண்டும். உயிர்களிடத்திலுள்ள பெருங் கருணை யினாலே அதனை அவன் செய்கின்றான். அப்படி அவன் செய்யவில்லை யென்றால் உயிர்களுக்கு உய்வில்லை. கீழ்வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்குச் செல்வதற்குப் பரீட்சை எழுதுகின்றோமல்லவா? அப்படி இக்கட்டான காலம் வந்தால் இறைவன் சோதிக்கிறான் என்று எண்ணுதல் வேண்டும். இறைவனுடைய சோதனைகளிற் சித்திபெற்றவர்களின் வரலாறே திருத்தொண்டர் புராணம். அதற்கு மாறனார் வாழ்க்கை நல்ல உதாரணம்.

----------------

1. திருக்குறள்: 81
2. திருத்தொண்டர் புராணம்: இளையான்குடி மாற நாயனார், பாடல் 4
3. மேற்படி பாடல் 9



கவிஞர் வி. கந்தவனம்

# நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகள்

கனேடிய நயினாதீவு நாகம்மாள் கலாச்சார மண்டபத்தில் 07.05.2011 அன்று நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. “எம்மை நாம் பாதுகாப்பது எப்படி” என்ற மருத்துவ கை நூல் வைத்திய வைத்திய கலாநிதிகளும் தமிழ் அறிஞர்களும் மற்றும் மதகுருமாரும், பெரும் திரளான ஆதரவாளர்களும் கலந்து சிறப்பித்தனர். இந் நூலை விளம்பரம் பத்திரிகை அலுவலகத்திலும், தமிழ் வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.















Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)




* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife/GTA Realty Inc. Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# Another New Project

@

# Warden & Finch




**VIP Special Package For**

## HomeLife/GTA Realy OInc.

## Sales

*"Don't Miss the First Phase"*

**Call your HomeLife/GTA Realtors : 416.321.6969**

- *First buyers get the best choice*

# அழகர்சாமியின் குதிரை-திரை விமர்சனம்



- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ் சினிமாவுக்கும் ரொம்ப தூரம். அவ்வப்போது, இந்த தூரத்தில் சில மைல் கற்களை குறைக்கும் முயற்சிகளை யாராவது ஒருவர் முன்னெடுத்துப் பார்ப்பார்கள். சூரியனை நோக்கிப் பறக்கும் பீனிக்ஸ் பறவை போல்தான். ஆனால், முன் சென்ற பறவை மடிந்து விழுவதைப் பார்த்த பிறகும், பின்னாடி ஒரு பறவை பறக்கத் தொடங்கும். ஜெயகாந்தன், மகேந்திரன், பாலுமகேந்திரா, 'குடிசை' ஜெயபாரதி, 'ஏழாவது மனிதன்' ஹரிஹரன்... இப்படி அனேகம் பேர். இவர்களில் வணிகரீதியில் வெற்றிபெற்றவர்கள் மகேந்திரன், பாலுமகேந்திரா ஆகியோர்தான். இவர்கள் வழியில் அழகர்சாமியின் குதிரை மூலம் வருகிறார் இயக்குநர் சுசீந்திரன். எழுத்தாளர் பாஸ்கர் சக்தியின் குறுநாவலை எடுத்து சினிமாவாக்கியிருக்கிறார்.

கதை மிக எளிமையானது. கடவுள் அழகர்சாமியின் மரக்குதிரை காணாமல் போகிறது. அழகர்சாமியின் வாகனமான மரக்குதிரை இல்லாமல் திருவிழா நடத்த முடியாத நிலையில், கிராம மக்கள் அதனைத் தேடியலைகிறார்கள். ஆச்சரியம், ஒரு நிஜக் குதிரையே கிடைத்துவிடுகிறது. அழகராக பார்த்துதான் ஊருக்குள் நிஜக் குதிரையைக் கொண்டுவந்து விட்டிருக்கிறார் என நெகிழ்ந்து போகிறார்கள் மக்கள். திருவிழா கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளில் இறங்குகிறார்கள். அவர்களை மேலும் உற்சாகப்படுத்தும் விதமாக, அந்த குதிரை வந்த நேரத்தில் கிராமத்தில் நல்ல விஷயங்களாக நடக்கிறது. குதிரையையே கடவுளாக நினைத்து கிராம மக்கள் வழிபடுகிறார்கள்.

ஆனால், உண்மையில் அது குதிரையை வைத்து மலைப்பகுதியில் சுமைத்தூக்கி வாழ்க்கை நடத்தும் தொழிலாளியான அழகர்சாமியின் குதிரை. காணாமல் போன குதிரையை தேடி வருகிறான், அழகர்சாமி. கிராமத்தில் தனது குதிரையைப் பார்க்கும் அவன் கிராம மக்களிடம் அதைக் கேட்க, இது சாமி குதிரை எங்களுக்குத்தான் சொந்தம் தரமுடியாது என்று கிராம மக்கள் மல்லுகட்டுகிறார்கள். தொழிலாளி அழகர்சாமிக்கு குதிரைதான் எல்லாமே அது காணாமல் போனதால் அவனுக்கு முடிவான திருமணமே நிற்கிறது. குதிரையுடன் திரும்பினால்தான் நின்றுபோன கல்யாணம் நடக்கும். எனவே, தொழிலாளி அழகர்சாமியும் கிராம மக்களிடம் குதிரைக்காக மல்லுகட்டி நிற்கிறான்.

ஊர் மக்களுக்கு மழையும் அழகர் ஆற்றில் இறங்குவதும் முக்கியம். குதிரை இருந்தால்தான் அவை நடக்கும். அப்புக்குட்டிக்கு குதிரை கிடைத்தால்தான் வாழ்க்கைச் சக்கரமே ஓடும். இந்த பிரச்சினையில் தலையிடுகிறது காவல்துறை. திருவிழா நடக்கும் வரை குதிரை கிராமத்தில் இருக்கட்டும். திருவிழா முடிந்ததும் குதிரையை அழகர்சாமி எடுத்துச் செல்லட்டும் அதுவரை குதிரையுடனே அழகர்சாமி இருக்கட்டும் என்று சமாதானம் பேசுகிறது. இரு தரப்பும் ஒப்புக்கொள்கிறார்கள்.

அதன்பிறகு என்ன நடக்கிறது என்பது மீதிக் கதை. ஒரு படம் பார்த்தோம் என்கிற திருப்தியைவிடத் திரையில் ஒரு குறு நாவல் படித்தோம் என்கிற திருப்தி. எளிமையான கதைதான் என்றாலும், காட்சிப்படுத்திய விதம் வலிமையாக இருக்கிறது. தமிழ் சினிமா கதாநாயகர்களுக்கு உள்ள தகுதிகள் எதுவும் இல்லாத ஒருவர் அப்புக்குட்டி. குண்டு, கறுப்பு, குள்ளம். இதில் அழகர்சாமியாக வருகிறார். பெண் பார்க்கக் கிளம்பும்போது தனது பருத்த வயிற்றை ஒட்டி வைத்துப் பார்த்து திருப்திபடும் அப்புக்குட்டி, பொண்ணு வந்தவுடன் அதேபோல் தனது வயிற்றை ஒட்டி வைத்து நிமிர்ந்து உட்காரும் கட்சி படு யதார்த்தம். அந்தக் கனமான மரக் குதிரையை யார்தான் களவாடியிருப்பார்கள் என்ற தேடுதலில், ஊரையே சுற்றி வரும் ஒரு சிறுவனிடம் துப்புக்கொடுக்கச் சொல்லி அவனுக்கு புரோட்டாவை வாங்கிக் கொடுத்து தகவல் கறக்கும் காட்சியில் என்னவொரு வில்லத்தனம்..? நடிப்பில் அப்புக்குட்டியும் இரண்டாவது கதாநாயகனாக அழகன் தமிழ்மணியும் ஸ்கோர் செய்திருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் மட்டுமல்ல ஒரு நாள்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# வானம் - திரை விமர்சனம்

தெலுங்கு வெற்றிப் படமான 'வேதம்' படத்தின் தழுவல். ஐந்து கதைகள், ஐந்து கதாபாத்திரங்கள். ஐந்தும் வாழ்க்கையின் ஓட்டத்தில் ஒரு இடத்தில் சங்கமமாவதும் சந்தித்துக் கொள்வதும்தான் கதை.



- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

முதல் காட்சி... பெங்களூருவில் பாடகர் பரத், அவரது காதலி வேகா இருவரது ராப் பாடலோடு படம் துவங்குகிறது. பரத்தின் வாழ்க்கை லட்சியம், 'லைவ் ஸ்டேஜ் ஷோ'வில் கிதார் வாசிக்க வேண்டும் என்பது. இதற்காக தன் இசைக்குழு நண்பர்களோடு சென்னைக்குப் புறப்படுகிறார் பரத். சென்னை செல்லும் வழியில் நடக்கும் சிறு சிறு விடயங்கள் என்று கதை நகர்கிறது.

கந்து வட்டியால் சரண்யா குடும்பம் பாதிக்கப்பட, கொத்தடிமையாக தூத்துக்குடி உப்பளத்தில் வேலை செய்கிறார் சரண்யா மகன். கிட்னி விற்று அதன் மூலம் வரும் 40,000 பணத்தை வைத்து தன் மகனை விடுவிக்க திட்டமிடுகிறார் சரண்யா. இதற்காக, சென்னை வருகிறார். கடனை அடைத்து, தனது மகனை படிக்க வைக்க ஆசைப்படுகிறார். ஆனால், துரதிர்ஷ்டம், அந்தப் பணம் திருட்டு போய்விடுகிறது.

ஆந்திராவை சேர்ந்த பாலியல் தொழிலாளி அனுஷ்கா. தமிழக - ஆந்திர எல்லையோரம் உள்ள சூலூர் பேட்டையில் விபசாரத் தொழில் நடத்தி வரும் ஒருத்தியிடம் இருக்கிறார். இவரிடம் ஒரு காவல்துறை அதிகாரி அசிங்கமாகப் பேசிவிட, அவரை மயக்க மருந்து கொடுத்து படுக்க வைத்து விடுகிறார். இந்த விவகாரம் வெளியே தெரிய வர, அனுஷ்கா கைது செய்யப்படுகிறார். இப்படிக் கிடந்து சிரமப்படுவதைவிட, தனியாகத் தொழில் செய்தால் ஒரே நாளில் 40 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கலாம் என்று அனுஷ்காவுக்கு சொல்லப்படுகிறது. 40 ஆயிரம் ரூபாய் ஆசையுடன், தன் அக்காவையும் அழைத்துக்கொண்டு சென்னைக்கு வருகிறார் அனுஷ்கா. சென்னை வந்து, சொந்தமாக கம்பெனி ஆரம்பிக்க அனுஷ்கா படும் கஷ்டங்கள் என்று இந்தக் கதை பயணம் செய்கிறது.

கோயமத்தூரை சேர்ந்த நடுத்தரவர்க்கத்து முஸ்லிம் தம்பதியினர் பிராகாஷ்ராஜும் சோனியா அகர்வாலும். ஒரு காவல்துறை அதிகாரியின் பொறுப்பற்ற செயலால் பிரகாஷ்ராஜின் தம்பி காணாமல் போகிறார். அந்தத் தம்பி சென்னையில் இருப்பதாக தகவல் அறிந்து பிரகாஷ்ராஜ் சென்னைக்கு வருகிறார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுதல், விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் அவரது மனைவி கர்ப்பம் கலைவது என கதறும் சோகம் இந்தக் கதை.

சென்னையில் ஒரு குப்பத்து இளைஞன் கேபிள் ராஜாவாக வருகிறார் சிம்பு. அன்றாடம் பாட்டுக்கே சிரமம் என்னும் நிலையில், பணக்காரனாக வேண்டும் என்று ஆசைப்படும் சிம்பு, அதற்கு ஒரே வழி ஒரு பெரும் பணக்காரருக்கு மருமகனாவதுதான் என்று முடிவு செய்கிறார். திட்டமிட்டு ஒரு பணக்கார வீட்டு பெண்ணிடம் தானும் ஒரு பெரிய பணக்காரன் என்று பொய் சொல்லி ஏமாற்றி காதலிக்கவும் செய்கிறார். சிம்புவின் நண்பனாக சந்தானம். லூட்டிக்கு சொல்லவா வேண்டும். ஜாலியாக சுற்றிக் கொண்டிருக்கும் இவர்கள் வாழ்க்கைக்குள்ளும் ஒரு பிரச்சினை எட்டிப் பார்க்கிறது. பணக்காரப் பெண்ணின் அம்மாவிடம் திருமணம் பற்றி பேச, அவர் ஒரு ஹோட்டலில் நடக்கும் புது வருட கொண்டாட்டத்துக்கு சிம்புவை வரச் சொல்கிறார். ஆனால், அந்த பார்ட்டிக்கு நுழைவு கட்டணமே 40 ஆயிரம் ரூபாய். சிம்புவும் சந்தானமும் அந்த பணத்திற்காக அலையத் தொடங்குகிறார்கள். எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடியவே, திருடலாம் என முடிவு செய்து சில்லறை திருட்டில் ஈடுட முயற்சிக்கிறார். முயற்சி தோல்வியுறவே காவல்துறையிடம் சிக்குகிறார்.

இப்படித் தனித்தனி பிரச்சினைகளில் அலைந்துக் கொண்டிருக்கும் இந்த ஐந்து பேரும் சென்னையில் அரசு பொது மருத்துவமனையில் சங்கமிக்கிறார்கள், அங்கேயிருந்து விறுவிறுப்பான படத்தின் இரண்டாம் பகுதி தொடங்குகிறது. ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கிறதுதானே. இந்த இடியாப்பச் சிக்கல்களில் இருந்து இவர்கள் எல்லோரும் எப்படி வெளியே வருகிறார்கள், எல்லாம் எப்படி சுபமாக முடிகிறது என்பதுதான் மீதிக் கதையாக இருக்கப் போகிறது என்ற உங்கள் ஊகம் சரிதான். ஆனால், அதை சுவாரசியமாக சொல்லியிருக்கிறார்கள் என்பதுதான் ஆறுதலான விஷயம்.

இதுவரை நாம் பார்த்திராத பிரகாஷ்ராஜ். ஒரு சாமான்ய முஸ்லீமை தன் அபார நடிப்பினால் கண் முன் நிறுத்துகிறார். அப்பாவியாக அவர் தவிக்கும் காட்சிகள் ஆகட்டும், கடைசியில் உணர்ச்சிகரமான காட்சிகள் ஆகட்டும் பிராகாஷ்ராஜின் நடிப்பு வெகு அற்புதம்.

சரண்யாவுக்கு வழக்கம் போல அன்பைப் பொழியும் அம்மா பாத்திரம், வழக்கம் போல பிரமாதப்படுத்தியிருக்கிறார். சரண்யா காட்சி வரும்போதெல்லாம் பின்னணியில் உதயசூரியன் சின்னத்தை காட்டிகொண்டே இருக்கிறார்கள். ஏன் என்று தெரியவில்லை?




விரல் வித்தைகளைக் காட்டும் பழைய சிம்பு, கொஞ்சம் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்தப் படத்தில் எட்டிப் பார்க்கிறார். இன்னும் கொஞ்சம் இயல்பாகக் நடித்திருந்தால் அந்தப் பாத்திரத்துக்கு பிரமாதமாக இருந்திருக்கும். சந்தானம் கூட்டனியால் அங்காங்கே சில இடங்களில் அசத்தி இருக்கிறார்.

அனுஷ்காவுக்கு, தொட்டுக்கொள்ள ஊறுகாய் போல அல்லாமல் படத்திற்கு பலம் சேர்க்கும் பாத்திரம். பலர் நடிக்க தயங்கும் பத்திரமும்கூட. ஆனால், எப்போதும் கண்களில் ஒரு போதை, சிரிந்துகொண்டே இருக்கும் சேலை, அலட்சியமான ஒரு பார்வை என்று, பாலியல் தொழிலாளியாகவே வாழ்ந்திருக்கிறார் அனுஷ்கா. "நான் வேணுமின்னா படுக்கிறேன் சார்... என் பிரண்டை காப்பாத்துங்க சார்" என்று கெஞ்சும்போது கண்முன் நிற்கிறார். ஆனால், சில இடங்களில் தெலுங்கு படத்தின் காட்சிகளையே 'டப்' செய்து உபயோகித்துள்ளனர். இது கொஞ்சமும் தமிழுக்கு ஒட்டவேயில்லை. அதிலும் அந்த விபச்சார விடுதி பாடலுக்கான பாடல் வரிகள் சகிக்கவில்லை.

படத்தின் அறிமுகக் காட்சியே பரத்திற்குத்தான். ராப் இசைக் கலைஞராக, உயர் மத்திய வர்க்க இளைஞனாக பரத்துடைய உடல்மொழி அந்தக் கதாபாத்திரத்திற்குக் கச்சிதமாகப் பொருத்திப் போகிறது. வேகா, பரத் கதாபாத்திரத்திற்கு அழகாக ஈடு கொடுத்திருக்கிறார்.

ஆஸ்பத்திரியில் உள்ள குழந்தை, அனுஷ்கா கூட வரும் அரவாணி, லாரி ஓட்டுற சிங், கடைசியாக டிராக்டர் நம்பர் பிளேட்டில் கணக்கு போடும் சிறுவன் என்று ஒவ்வொரு விஷயங்களையும் நன்றாக பார்த்து பார்த்து செதுக்கியுள்ளார் இயக்குநர்.

இசை யுவன்சங்கர் ராஜா. பல இடங்களில் பின்னணி இசையை அடக்கி வாசித்திருப்பதில் இளையராஜாவை ஞாபகப்படுத்துகிறார். ஆனால், "எவண்டி உன்னை பெத்தான், கையில கெடச்சான் செத்தான்' போன்ற வரிகள் தேவையா யுவன்?

எல்லாவற்றையும் விட இப்படம் பேசுகிற அரசியல் முக்கியமானது. இஸ்லாமியர்களை இவ்வளவு இணக்கமாகவும் மனித நேயத்துடனும் அண்மைக் கால தமிழ் சினிமா காட்டியதில்லை. அதற்காக இயக்குனரை பாராட்டலாம். அப்பாவி மக்கள் மீது அரசு தாக்குதல் நடத்துவதைச் சாடியிருக்கிறார். அரசாக இருந்தாலும் அப்பாவி மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தினால் அதுவும் தீவிரவாதம்தான் என்று ஆணித்தரமாக ஒரு செய்தியை சொல்லுகிறது இப்படம். இஸ்லாமியர்கள் மட்டுமல்லாது, அரவாணிகள், கொத்தடிமைகள், விபசாரிகள், சேரி பையன்கள் என இப்படத்தின் இயக்குனர் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு கதாபாத்திரமுமே மிக முக்கியமானவை. வசனங்கள் மிக மிக வலிமையானவை.

வானம் - ஒரு முறை பார்க்கலாம்.



# திரை விமர்சனம்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

கூத்தில், அரசனாக குறி சொல்லும்போது தன்னை விரட்டும் ஊர்க்காரர்களை "டேய்..!" என்று அழைத்து தனது கோபத்தைத் தீர்த்துக்கொள்ளும் கோடங்கிக்காரன், அப்புக்குட்டி உருவத்தை பார்க்காமல் உள்ளத்தைப் பார்த்திருக்கும் அவனது வருங்கால மனைவியாக வரும் சரண்யா மோகன், வரி வசூல் செய்ய வந்தவர்களிடம் காது கேளாதவர்கள்போல் நடித்து அனுப்பி





வைக்கும் அந்தக் கிழவி, மகள் சேமித்து வைத்த சில்லரைகளை வரியாக வாரிக் கொடுப்பவர், ஊருக்குள் ஒண்ணுக்குள்ள ஒண்ணாக இருந்தாலும் சமயம் பார்த்து காலை வாரிவிடும் பெரிசுகள் கோஷ்டி, ஊர் பிரஸிடண்ட், அவருடைய மகனான தமிழ்மணி காதலிக்கும் ஊர் கோடாங்கி மகள், வாத்தியார், மைனர், மைனரின் வப்பாட்டிகள், காவல்துறை அதிகாரி, பரோட்டா சிறுவன், கார்பென்டர், அழகர்சாமியின் வருங்கால மனைவி அப்பா, எலெக்ஷனில் பிரெசிடெண்டிடம் தோற்றுப்போன அவரது சொந்தக்காரர், அராத்து பொண்டாட்டி, என்று படம் நெடுக வரும் பாத்திரங்கள் அசலாய் மனதை கொள்ளை கொள்ளுகிறார்கள். அனைவருமே மண்ணின் மைந்தர்கள்தான்..! ஒவ்வொருவரும் படத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார்கள்.

கதை மட்டுமல்லாமல், வசனமும் எழுத்தாளர் பாஸ்கர்சக்திதான். எழுத்தைப் போலவே திரை வசனத்திலும் ரசிகர்களை சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கிறார், பாஸ்கர்சக்தி. சிறந்த புகைப் படக்கலைஞராக தமிழ் பத்திரிகை வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான தேனி ஈஸ்வர் அற்புதமான ஒளிப்பதிவாளராக இந்தப் படத்தில் வெளிப்பட்டிருக்கிறார். மேற்குத் தொடர்ச்சி மலை இவரது கேமராவில் மேலும் அழகாக இருக்கிறது. ஆடம்பரம் இல்லாத அபார ஒளிப்பதிவு. 'குதிக்கிற குதிரைக்குட்டி' பாடல் காட்சியை படமாக்கிய விதம் அருமை! மு.காசிவிஸ்வநாதன் எடிடிங் கஞ்சிதம். இளையராஜா இசை பற்றி நாம் என்ன சொல்ல? வழக்கம் போலவே பின்னணியில் பிரமாதப்படுத்தியிருந்தார். முயல் வேட்டைக்காக ஊர் மக்கள் செல்லும்போது அவர்களைப் பின் தொடர்ந்து செல்கின்ற காட்சியிலும், குதிரை தப்பித்து ஓட பின்னாலேயே அனைவரும் துரத்தும் காட்சியிலும், அப்புக்குட்டியுடன் நடக்கும் சண்டைக் காட்சியின்போதும் ராஜாவுக்கு நிகர் ராஜாதான். 'அடியே இவளே', பூவைக் கேளு காத்தைக் கேளு...' பாடல்கள்தான் இந்த வருடத்தின் ஹிட்டாக இருக்கும்! கிராமத்தில் நடக்கும் கதைக்கு ஒரு சில இடங்களில் ராஜா வழங்கியிருக்கும் மேற்கத்தியப் பாணி நாடோடி இசை, தமிழ் சினிமாவுக்கு புதிது.

இப்படியொரு கதையை, இப்படியொரு கதாநாயகனை வைத்து படமாக்கத் துணிந்த சுசீந்திரனுக்கு வணக்கம் பல! குறைகள் இல்லாமல் இல்லை, சில சமரசங்களும் இல்லாமல் இல்லை. ஆனாலும், சினிமாவுக்கென செய்யப்படும் சமரசங்கள் அதிகமின்றி, அதே சமயம் வெகுஜன மக்களின் ரசனையை விட்டும் நகராமல் மிகவும் கச்சிதமாக வந்திருக்கிறது படம் என்றுதான் சொல்லவேண்டும்.

அழகர்சாமியின் குதிரை - அம்சமாக ஓடும் ஓட வைக்கவேண்டும்!


மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி

ஜோதிடம்

பண்டித் மகேந்திரன் சுவாமிகள்






ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி
ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்

மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித்
அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள்
அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும்
பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





100% உங்கள் பிரச்சினைகளுக்கு
தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

**Tel: 647-919-5846 / 647-718-9555**
**5210 Finch Ave. East, Unit # 1, Scarborough**
**(Inside of Golden Bakery)**
**Beside the Meenadchi temple ON, M1S 4S4**

# BASEMENT RENT

**MARKHAM & LAWRENCE**
Large 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, TTC. Avail. immediately.
416.897.9066 / 647.709.5135

**BATHURST & MAJOR MACKENZIE**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.554.4467

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, school. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.1479

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**BIRCHMOUNT & STEELES**
One Master bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, TTC. Avail. June 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.475.0555

**PHARMACY & LAWRENCE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, HWY 401, HWY 404. 2 Washrooms. 1400 sq.ft. Avail. July 01, 2011. No smoking & No pets. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.750.4077

**FINCH & MIDDLEFIELD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, temple, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.299.6710

**FINCH & BIRCHMOUNT**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Utilities included. Close to all facilities. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Each room $325. No Smoking & No pets. Avail. June 01, 2011
தொடர்புகளுக்கு: 416.890.5267

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.282.7436

**STEELES & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2011
தொடர்புகளுக்கு: 416.931.3444

**SEWELLS & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.897.4897

**SHEPPARD & MARKHAM**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.930.8190 / 416.321.5874

**SCAR.GOLF CLUB & KINGSTON**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, go station. Young couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.618.0153

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.882.7638

**MARKHAM & PAINTEDPOST**
2 Bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to 1 minute to TTC, school. Avail. immediately.
416.917.5325 / 416.431.8924

**VICTORIA PARK & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Cable television, internet, parking. Close to TTC, Wexford Swimming Pool and Wexford High school Temples and Churches.
416 288 9575 / 416 729 9575

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
1 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, full washroom, laundry, Sep. entrance. Avail. July 30, 2011. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to school, bus.Available immediately.
416.609.1484/416.843.6721

**MARKHAM & 16TH AVE.**
Newly finished 2 bedroom bsmt for rent. Garage side entrance, parking. Close to school, mall. Avail. May 15, 2011
905.209.1421 / 647.405.1962

**JANE & MAJOR MACKENZIE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, Wonderland, bank. Avail. immediately.
905.303.5370 / 647.244.5370

**MIDDLEFIELD & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.704.7659

**MCCOWAN & DENISON**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. Anytime. Close to ttc, school, shopping.
தொடர்புகளுக்கு: 416.284.6226

**MCCOWAN & MCNICOLL**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, temple, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.335.5028

**SHEPPARD & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Small family or ladies preferred.
தொடர்புகளுக்கு: 416. 727.3716

**HIGHGGLEN & MCCOWAN**
Newly renovated 2 Bedroom walk-out bsmt for rent. Dishwasher included. Close to 3 different high schools & also Elementary school, TTC. Avail. immediately. Price negotiable.
தொடர்புகளுக்கு: 416.737.4807

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom walk-out bsmt for rent. Close TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.662.7984

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

Newly renovated 3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் உள்ள bsmt இல் அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.804.8435

**MCCOWAN & 16TH AVE.**
2 Bedroom bsmt for rent. sep. entrance, laundry, cable. Close to school, Markville mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.721.9709

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

**MCNICOLL & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**MCCOWAN & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, school, park, Scarborough Town Center.
416.439.1570 / 416.431.5195

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. 647.703.1343 / 905.472.1370 / 647.500.4564

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to plaza, school, TTC. Avail. immediatly.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.302.6930

**14TH AVE & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

**NEILSON & FINCH / TAPSCOTT**
2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. வயதான தனியொருவர் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.802.6067

# CONDO. RENT

**KENNEDY & EGLINTON**
3 Bedroom 2 level penthouse condo. for rent. 2 Washrooms. Close to Kennedy Subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.265.2433

**MCLEVIN & TAPSCOTT**
2 Bedroom condo. for rent. Close to all facilities. Avail. Anytime.
416.291.9964 / 416.520.2754

**BRIMLEY & ELLESMERE**
**SCARBOROUGH TOWN CENTER** க்கு அருகாமையில் புதிய தொடர்மாடியில் Condo. வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.817.8479

# CONDO FOR SALE

**KENNEDY & ELLESMERE**
3 Bedroom condo. for sale. Close to library, school, Highland Farm. Avail. immediately.
647.700.7427 / 416.565.6570

# CONDO. RENT /SALE

**KENNEDY & EGLINTON**
***Rainbow Village***
2 Bedroom + 2 Washroom condo. for rent or sale. Close to TTC, Kennedy Subway, tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.5085

# SPACE FOR RENT

**MARKHAM & NASHDENE**
Commercial space for lease. Deck level.
தொடர்புகளுக்கு: 416.292.1975

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

## CARS FOR BUY & SELL

2005 Toyota corolla, 2001 Toyota Sienna, 2003 Honda Accord கார்கள் விற்பனைக்கு உண்டு. கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. அத்துடன் Van வாடகைக்கு ஓட்டப்படும். Airport Service.
அழையுங்கள் : **416.625.4146**

# WANTED

Used Toyota Corolla cars wanted. 1990 - 1997 Only. Any condition.
Steeve - 416.832.1359

மேலும் பக்கங்கள் 25, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# ROOM RENT

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent. Sep. washroom, laundry, parking. Close to all facilities. Avail. Anytime. Working ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.292.7552

**MORNINGSIDE & MILITARY DR**
1 Bedroom for rent. Laundry, parking. Close to TTC, mall. Avail. Anytime. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.833.3912

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**FINCH & WARDEN**
One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopperhut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent - mainfloor. Living room, washroom. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.277.9044

**KEEL & FINCH**
Furnished room for students. Close to all facilities. Now available.
**DENISON & MIDDLEFIED**
2 bedroom bsmt for rent.
905.209.9212 / 416.562.5113

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bangalow house. Close to all facilities. ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**EGLINTON & DANFORTH**
சந்தியில் தனி நுழைவாயில், பஸ்தரிப்பு, கடைகள் உள்ள அமைதியான இடத்தில் ஒரு படுக்கை அறை சகல வதிகளுடன் வாடகைக்கு உண்டு. வேலை பார்க்கும் ஆண்கள் விரும்பத்தக்கது. பென்சன் ஊதியம், சமூகநலன் உதவி பெறுபவர் ஆலோசிக்கப்படும். Rent $350
தொடர்புகளுக்கு: 416.431.5156

**BRIMLEY & DENISON**
1 Room in a bsmt for rent. Sep. entrance, laundry, cable, internet, kitchen. Close to TTC, YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.919.1431

**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent. Close to all facilities. No smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

# HOUSE FOR RENT

**MARKHAM & SHEPPARD**
3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. Parking, laundry. Avail. immediately. அத்துடன் Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance.
தொடர்புகளுக்கு: 416.707.8053

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom on the main unit of the house for rent. Laundry, car parking, spacious living & dining room. Quiet neighborhood. Close to all amenities.
தொடர்புகளுக்கு: 416.291.1752

**NEILSON & SHEPPARD**
4 Bedroom town house for rent. Close to 1 min. to TTC, mall, school. Avail. immediately.
416.754.7123 / 647.219.0451

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

**CONDO. RENT**
**KENNEDY & EGLINTON**
3 Bedroom 2 level penthouse condo. for rent. 2 Washrooms. Close to Kennedy Subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.265.2433

**MCLEVIN & TAPSCOTT**
2 Bedroom condo. for rent. Close to all facilities. Avail. Anytime.
416.291.9964 / 416.520.2754

**BRIMLEY & ELLESMERE**
**SCARBOROUGH TOWN CENTER** க்கு அருகாமையில் புதிய தொடர்மாடியில் Condo. வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.817.8479

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. தனித்தனியாகவும் அறைகள் கொடுக்கப்படும். 3 bedroom also available on Main floor. Family preferred. Avail. immediately.
647.857.2629 / 416.439.6009

**BIRCHMOUNT & FINCH**
4 bedroom detached house for rent. Close to stores, hospital, ttc, etc. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 416.897.4838

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom + 2 washroom house for rent. Kitchen, living room உடன் Newly renovated bungalow house வாடகைக்கு உண்டு. Close to TTC, Cedarbrae mall, school, shopping.
647.707.6933 / 416.439.4076

மேலும் பக்கங்கள் 24, 26


## RULAW LEGAL SERVICES

***Indrajith Ratnalingam***
***(Indran Ratnam)*** Licensed Paralegal
***Member of Law Society of Upper Canada***
***Tel: 416.754.4LAW (4529)***
***Fax: 416.754.4519***
Email: rulawlegal@gmail.com
5200 Finch Ave. East Suite 300
Scarborough, ON M1S 4Z5


# STORE FOR SALE

**LAWRENCE & Scar. GOLF CLUB**
பகுதியில் தமிழ் Grocery கடை ஒன்று விற்பனைக்கு உள்ளது.
416.827.2585 / 416.880.4004

# TUITION

**MCLEVIN & TAPSCOTT**
Behind Malvern mall.
Math & English (JK - Grade 3).
Homework help. Preparing kids for JK.
3 Classes a week $50 per month.
தொடர்புகளுக்கு: 416.332.1254

# TUTORING

Math, English and all other subjects from: JK - Grade 6. By a qualified lady teacher teaching according to current Ontario curriculum. Help available with homework and EQAO tests in Scarborough.
தொடர்புகளுக்கு: 647.241.5236

# TUITION

***FINCH & MIDDLEFIELD***
***GTA Squre Unit #230***
***Chemistry, Physics, Math, English, French, Biology***
***Homework Help Kindergarten to Grade 12.***
***Specialist in University experienced teacher. 416.497.7660***
***647.771.6237 / 416.889.3191***

# SAREE BLOUSE

**அனைத்து தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

# மணமகள், மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து உயர் குலத்தைச் சார்ந்த ஆண் ஒருவருக்கும் பெண் ஒருவருக்கும் கனடாவில் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.554.4467

# மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

# JOB JOB JOB

**VICTORIAPARK & DANFORTH**
Pizza கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆள் தேவை. Part - Time. வாகன சாரதி அனுமதிப்பத்திரம் முக்கியம்.
தொடர்புகளுக்கு: 416.875.6869
(Call after 12am - 9pm)

**CASHIER & COOK தேவை**
**FINCH & MIDDLEFIELD**
GTA Square mall இல் அமைந்துள்ள Restaurant ஒன்றுக்கு Cook & Cashier தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

**YONGE & LAWRENCE**
Midtown இல் அமைந்துள்ள இத்தாலிய உணவகத்திற்கு சமையலறை உதவியாளர் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 416.835.2943

Kitchen செய்யும் Factory ஒன்றில் அனுபவமுள்ள Kitchen, Cabinet Makers, Chairs செய்யக்கூடியவர்கள் வேலைக்குத் தேவை. (A - Z அனுபவமுள்ளவர்கள்)
தொடர்புகளுக்கு: 416.830.3932

**வேலைக்கு ஆட்கள் தேவை**
தோட்டம் துப்பரவாக்க வீடு வெள்ளையடிக்க துப்பரவாக்க உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். Fultime or parttime. Scarborough வில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.269.5174

# TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

# சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

# வீடு காணி விற்பனை

யாழ். வலிகாமம் வடக்கு அளவெட்டியில் தெல்லிப்பழை பண்டைத்தரிப்பு வீதியில் சன சமூக நிலையத்திற்கு எதிரில் சேதமடைந்த வீட்டுடன் கூடிய 6 பரப்பு வீதியோர காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.321.8558


## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)


BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 279


(1) C = (1, -2, 3), d = (4, 2, -1)    |c| |d| = cosø
4 -4 -3 = (√1 + 4 +a) √16 + 4 +1    cosø
3 = √14 √21    cosø = -3√14, √21
= 0.1750

(2) Since 2a + b is perpendicular to a - 3b (2a + b), (a - 3b) = 0
$2a^2 - 5ab - 3|b|^{-2} = 2|a|^2 - 5|a||b| \cos ø - 3|b|^2| = 0$
But |a| = 2|b| Substituting    $8|b|^2 - 10|b|^2 \cos ø - 3|b|^2 = 0$
$\cos ø = 5|h|^2/10|b|^2$    =1/2    ø = 600

(3) a x b is a vector perpendicular to a & b let n = a x b , Now n x a is a vector perpendicular to h and a. Therefore n x a, n and a are perpendicular to each other. ie (a x h) x a, a x h and a are mutually perpendicular.



(4) Let x represent the tip of the ball's shadow is from the base of the lamp post. Let dx/dt represent the rate at which the shadow is moving along the ground.
Let y represent the distance the ball has fallen.
From similar triangles
20 - y/x - 12 = 20/x
xy = 240
dx/dt y + dy/dt x = 0
dx/dt y = dy/dt x
dx/dt (s) = -10 x48
dx/dt = -96m/se.
Therefore the shadow is moving at a rate of 96m/sec.
Any time t, height of the ball is $h = 20 - 5t^2$




When t = 1, h = 15, y = 5.

(5) 1 — p(12/6) /12 $^6$ = 1 - 665280/2985984 =0.777

### Tutorial 280 Questions


(1) A certain radioactive substance is decaying so that at time t, measured in years, the amount of the substance, in grams, is given by the function $f(t) = 3e^{-3t}$. What in the rate of decay of the substance after half a year? (For Gr. 11 & 12)

(2) Determine the derivative of $y = \ln(e^{-2x+1})$ (For Gr. 12)

(3) The letters of the alphabet are used to form a word of length K. How many of these words contain the letter Z if we allow letters to be repeated as often as we like? (For Gr. 12)

(4) How many possible seven - digit telephone numbers are these within a given area code such that the first digit is 3, 5 or 6? (For Gr. 12)

(5) A student 1.6m tall walks directly away from a lamp post at a rate of 1.2m/s. A light is situated 8m above the ground on the lamp post. Show that the student's shadow is lengthening at a rate of 0.3 m/s. When she is 20m from the base of the lamp post. (For Gr. 12)




**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at ***Scarborough & Stouffville***
***Contact: 647.340.9490 / 647.831.0363***

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ஆலடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்பு காணியில் 3 படுக்கை அறை, சமையல் அறை, வரவேற்பு அறையுடன் நல்ல நீர் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.



சாவகச்சேரியில் மட்டுவில் தெற்கில் 2½ பரப்பு காணியில் 4 அறை, சமையல் அறை, வரவேற்பு அறையுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: ***416.566.2601***
Call after 6.00 pm

***HOUSE + LAND SALE IN JAFFNA***

Location: 2nd Cross Street, Jaffna
2½ பரப்பு காணி கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. 2 1/2 Parappu Land including the house and the well. 5 Min. Walk to Subramaniyam Park, Courts, Jaffna Public Library, Central College, Vembadi Girls High School etc. 15 Min. Walk to Jaffa Hospital/ Town Closer to A9 (Kandy - Jaffna) Highway
***Contact : 416-580-0606***

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# மானும் வேடனும்

பறவைகளும், மிருகங்களும் சேர்ந்து வாழும் ஒரு காட்டில், இரண்டு மிருகங்கள் இனிய நண்பர்களாக வசித்து வந்தார்கள். ஒருவன் மான், மற்றவன் முயல். அவர்கள் சில வேளைகளில், ஒரு மிருகத்தின் வீட்டை குழப்பி விட்டு ஓடிக்கொண்டு இருப்பார்கள். அல்லது முயல் ஏதோ ஒரு சிக்கலில் மாட்டி அவருக்கு மான் உதவ வேண்டி இருக்கும். ஆயினும், ஒவ்வொரு பகலும், இரவும் அவர்களுக்கு இனிதாக இருக்கும்.

ஒரு நாள் மாலை நேரத்தில் முதியவர்கள் ஒரு கூட்டம் போட்டார்கள். மிருகங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டு இருந்தார்கள்... திரும்பியும் வரவில்லை. இதைப்பற்றித்தான் அக்கூட்டத்தில் அவர்கள் கதைத்தார்கள். எவ்வளவு கவனமாக இதை செய்தாலும், மானுடைய காதுகளில் விடயம் விழுந்தது. மனிதன் ஒருவன் காட்டில் இருக்கலாம் என்று முதியவர்கள் நினைத்தார்கள். விரைவாக மான் முயலிடம் சென்றான். ஆவலுடன் முயலை அழைத்தான். "முயல்! முயல்!" முயல் கதவை திறந்தான். "முயல்! நாங்கள் இருவரும் சென்று காணாமல் போன மிருகங்களை காப்பாற்றலாம்! வருவியா?" என்று கேட்டான் மான். மானுக்கு திடீர் என்று இன்னும் இரண்டு கொம்புகள் முளைத்த மாதிரி முயல் மானை பார்த்தான்.

"பைத்தியமா உனக்கு? வெளியாலை இருளத் தொடங்குது! இந்த நேரத்தில் எப்படி செல்லலாம்? இப்பதான் நான் சாப்பிட்டு முடித்தேன். அதுவும் பெரிய காட்டில் ஒரு கரடிப்பேயை கண்டால்! இல்லை!! நான் வர மாட்டேன்." என்று கூறினான் முயல்.

"கரடிப்பேய் இருக்குது என்று நம்புகிற வயதா உனக்கு? எவ்வகையிலேனும், இனித்தான் நாங்கள் செல்வதற்கு நல்ல நேரம். இருளத் தொடங்குது. ஒருவருக்கும் நாங்கள் சென்ற விடயம் தெரியமாட்டாது. நாங்கள் விரைவாக திரும்புவோம்." என்று பதிலளித்தான் மான். முயல் கோபத்துடன் திரும்பிச் சென்றான், ஆனால் கல்லில் தடுக்கி விழுந்தான்.

முயல் பெருமூச்சு விட்டான். "சரி... நாங்கள் போகலாம்..." மான் சந்தோசப்பட்டான். "உண்மையாக தயார் என்றால்..."
"ஓம், நான் தயார். நாங்கள் செல்வோம் வா!" மான் உற்சாகத்தால் வெடிக்கப் பாத்தான். முயல் துள்ளித் துள்ளி கொண்டு வந்தான். சூரியன் மறையத் தொடங்கியது. முயலுக்கும் மானுக்கும் தாங்கள் எங்கே காட்டில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் வசிக்கும் இடம் நடுக்காடு. மான், "நாங்கள் கரைக்காட்டுக்கு வந்திட்டோம்!" என்று நினைத்தான். அவருடைய யோசனையும் சரியாக இருந்தது.

முயல் பயத்தில் பல கேள்விகளை கேட்க ஆரம்பித்தான். "நாங்கள் எங்கே? நாங்கள் துலைந்து போட்டமா? இரவு ஆகப்போகுதே!" என்று பலவாறு கேட்டான். மான் அவரை அடக்கப்பாத்தான். ஒரு பயனில்லை. கடைசியில் "நீ கதைப்பதை நிற்பாட்டாவிட்டால், ஒரு மனிதனும் வருகிறசத்தம் கேட்காது!"



அது முயலை நல்லாக அடக்கியது. திடீர் என்று மானின் கண்ணில் ஒரு சிறிய அசைவு தென்பட்டது. "முயல்... நாங்கள் ஒளிக்க வேண்டும் என்று நினைக்கிறேன்...". ஆனால், முயல் பதிலளிக்க முன்னம் என்னவோ ஒரு பொருள் அவர்களுக்கு மேல் எறியப்பட்டது. திடீரென்று எல்லாம் கறுத்துப் போய்விட்டது.

மான் எழும்பியவுடன், அவருக்கு பல கேள்விகள் இருந்தன. "அட, நான் எங்கே? முயல் எங்கே? ஏன் நான் ஒரு கூட்டில் இருக்கிறேன்? என்ன இது, சூரியனும் எழும்ப தொடங்குது!" என்று நினைத்தான் மான். அவன் திரும்பியவுடன், பக்கத்தில் உள்ள கூட்டில் முயல் இருப்பதை கண்டான். "முயல்! முயல்! எழும்பிவிட்டாயா?" முயல் எழும்பித்தான் இருந்தான். "எங்கே இருக்கிறோம் என்று உனக்கு தெரியுமா?" என்று மான் கேட்டான்.



**ஞா. ஆரணி**
அகவை 12

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

ROOM FOR RENT
WARDEN & FINCH
சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய இரு அறைகள் தளபாடங்களுடன் (Fully furnished) வாடகைக்கு உண்டு. மாணவர் அல்லது தனி நபர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்: 416.509.6780


TUTORING BUSINESS FOR SALE
WELL ESTABLISHED FRANCHISE & NON FRANCHISE.
AJAX ON
1000 sq. ft. Rent: $1550.00 (including TMI), Income $4200.00 Royalty $800.00 40 Students, 25 Tutoring students, 5 Teacher JK to Grade 12 Subjects includes, Math, English, Calculus, Physics, Chemistry, French, and Business courses
Net Net Net $2500.00
Franchise fee $5000.00
GREAT LOCATION & REASONABLE RENT.
Fast Growing new subdivisions and communities. GREAT GROWTH POTENTIAL.
please call Karuna 416.830.8520

JOB JOB JOB
WESTERN RD & FINCH AVE WEST
Experience tele marketers needed.
$12 per hours & commission
Contact: 416.646.8860

JOB JOB JOB
MARKHAM & STEELES
Srilankan & South Indian Restaurant Part-time & Full-time
ஆண்கள் அல்லது பெண்கள் வேலைக்கு தேவை.
Experience உள்ளவர்கள் வரவேற்கத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.292.5464

GOODWILL WOODWORKS
Custom Wood Working Home Reovation & Upgrading
- Custom Stair Case
- Flooring
- Painting
- Tiles Works
- Back Splash
- Kitchen, Bathroom
- Bsmt Reno
Compatible Price & High Quality Works
Call us for Free Estimate
10% OFF
Office: 416.292.1975
Fax: 416.335.1975
E-mail: info@goodwillworks.com

YOGA - MEDITATION CLASSLESS
யோகா, தியான வகுப்பு
Scarborough இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது.
ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்:
416.273.2200



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# ஐ.நா....

11ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவராகியிருக்கிறது ஐ.நா. அவையை இயக்குவது உலகின் அறங்களோ, நியாய பூர்வ உணர்வுகளோ இவைகளின் அடிப்படையில் வடிவமைக்கப் பட்ட அதன் விதிகளோ, சட்டங்களோ அல்ல. இன்று ஒரு நாட்டின் வழிமுறையை - தலைவிதியை அந்நாட்டின் மக்கள் தீர்மானிக்கவில்லை. மக்களைக் கையாலா காத நிலையில் வைத்துள்ள ஆதிக்க சக்தியினர் மூலமாக வல்லரசுகள் தீர்மானிக்கின்றன. ஒரு வல்லரசாக உருவாகி விட்ட இந்தியா இந்தப் பிரச்சனையில் ஐ.நா.மன்றத்தில் இலங்கை மீது மனித உரிமை மீறல் தீர்மானம் வந்தபோது, இலங்கைக்காக வரிந்து கட்டி நின்றதையும் மறப்பதற்கில்லை. இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில், இலங்கையினும் கூடுதலாக இந்தியாவே அஞ்சுகிறது'' என்று உளவுப் பிரிவின் (றோ) முன்னாள் அலுவலர் வி.எஸ்.ஆர்.சுப்ரமணியம் குறிப்பிடுவது உண்மையாக இருக்கலாம். தமிழர்கள் படுகொலையும் மனித உரிமை மீறல்களும் நடைபெறவில்லை யென்று இதுவரை இலங்கையைப் பாதுகாத்து வந்த இந்தியா, ஐ.நா வின் இந்த அறிக்கையின் பின்னரும் அப்படிச் சொல்ல முடியாத நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. நடந்தது மானுடப் படுகொலை என்று ஐ.நா சொன்ன பின்னரும் மௌனம் சாதிக்கிறபோது இந்தியா ஒரு சனநாயக நாடு என்ற தகுதியை இழந்து விடுகிறது.



இந்த நேரத்தில் இந்திய ஊடகங்களின் மெத்தனம் அல்லது பொறுப்பின்மை பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். நீதியின் குரலை முன்னெடுக்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது. ஏனெனில் பயங்கரவாத எதிர்ப்பு என்று சொல்லி, உள்நாட்டு ஊடகவியலாளர்களைக் கொலை செய்ததும், ஊடகங்களை அச்சுறுத்தி மௌனிக்கச் செய்ததும், முணுமுணுத்தோரை வெள்ளை வேன் கடத்தல்களில் காணாமல் போகச் செய்ததுமான பலவித அடக்குமுறைகள் நிகழ்த்தியது பற்றி ஐ.நா.அறிக்கை பட்டியலிடுகிறது. இவைகளுக்குப் பின்னரே தமிழ் மக்கள் மீதான படுகொலை தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. இன அழிப்புக்குப் பின்னாலான நடைமுறைகளை ஐ.நா. மேலெடுத்திட இந்தியாவும் இந்திய ஊடகங்களும் குரல் தருவார்களா என்பது கேள்வி.

கிழக்கு ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவில் இனப் படுகொலையில், ஐ.நா எடுத்த நடவடிக்கைகள் ஒரு முன் மாதிரியான நிகழ்வாக நிற்கிறது. ருவாண்டாவில் பெரும்பான்மையினராகிய இனத்தவரின் ஆட்சியில் சிறுபான்மை புலி இனம் ஒடுக்கப்பட்டது. இரு இனத்தவருக்குமிடையே நடந்த மோதல்களிலும் 1994ம் ஆண்டுக்குப் பின் புலி இன மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும், 8 லட்சம்பேர் கொல்லப்பட்டனர். லட்சத்துக்கும் அதிகமான புலி இனப்பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டனர்.

2008 - 2009ல் வன்னியில் மானுட அழிப்பு நடைபெற்றபோது உலகநாடுகள் மௌனம் காத்தது போலவே ருவாண்டா படுகொலையின் போதும் மௌனம் காத்தன. இப்போது இரண்டாண்டுகள் கழித்து வன்னி மக்களுக்கு ஏதோ நடந்திருக்கிறது என்று லேசாய் ஐ.நா அசைவது போலவே ருவாண்டாவிலும் ஐ.நா ஐந்து ஆண்டுகளின் பின் நடவடிக்கை எடுக்க அசைந்தது. அப்போது அங்கிருந்த ஐ.நா. அமைதிப் படையால் படுகொலையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அமெரிக்கா தலையிடத் தயங்கிய உண்மை, அப்போது அதிபராக இருந்த கிளிண்டன் வாசகம் மூலம் வெளிப்பட்டது. "நான் 5 ஆயிரம் துருப்புக்களை அனுப்பியிருந்தால் 5 லட்சம் மக்களைக் காப்பாற்றியிருக்க முடியும்'' என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். ருவாண்டா இனக் கொலை பற்றி விசாரணை செய்ய பன்னாட்டு விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்தது ஐ.நா. அதன் முடிவுகள் வெளியாகி ருவாண்டா படுகொலைக்கு காரணமான 22 பேருக்கு 1998ல் மரண தண்டனை வழங்கப்பட்டது. மிக முக்கியமான குற்றவாளியென ருவாண்டா இராணுவத் தளபதிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. ஐ.நா. வின் பன்னாட்டு ஆணையம் அளித்த மற்றொரு முக்கியமான தீர்ப்பு பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலி யல் வல்லுறவுகள் இனப் படுகொலையின் ஒரு அம்சம் என்று குறிப்பிட்டதாகும்.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், தமிழின இனப்படுகொலை குறித்து விசாரிக்க பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் விதிப்படி, பன்னாட்டு ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டுமென விசாரணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. இதற்கு இந்தியாவும், இப்போது தேர்தலுக்கு பின் அமையப் போகும் தமிழக ஆட்சியும் ஆதரவு அளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

கடந்த மார்ச் 31-அன்று ஐ.நா.பொதுச் செயலாளரிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னும், அதனை வெளியிடாமல் வைத்திருந்தது, கடந்த மார்ச் 31 அன்று ஐ.நா. பொதுச் செயலாளரிடம் இந்த அறிக்கை அளிக்கப்பட்டு விட்டதை உளவறிந்து இலங்கையிலிருந்து வந்த முக்கிய பிரதிநிதிகளை சந்திக்கும் வரை காத்திருந்தது, அறிக்கையை வெளியிடுவதற்கு பதில் இலங்கை அரசின் பிரதிநிதியான சில்வாவிடம் அறிக்கையின் ஒரு பிரதியை கையளித்தது, அதன் ரகசியத்தன்மையை காக்கும் பொறுப்பிலிருந்து தவறியது போன்ற விடயங்கள் பான் கீ மூன் மீதான நம்பகத் தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. லிபியாவில் மக்கள் மீது அதிபர் கடா'.பி நடத்திய தாக்குதல் குறித்து விசாரிக்க பன்னாட்டு ஆணையம் ஒன்றை ஐ.நா வின் மனித உரிமைக்குழு அமைத்தது. ஐ.நாவின் மனித உரிமைக் குழு பற்றி மனித உரிமை அமைப்பின் முன்னாள் தலைவரும் அமெரிக்கப் பேராசிரியருமான பிரான்சிஸ் பாயில் தீர்க்கமான ஒரு கருத்துக் கொண்டிருக்கிறார். இலங்கை இனச் சிக்கலைப் பொறுத்தவரை ஐ.நா மனித உரிமைக்குழு தமிழர்களுக்கு எதிராகவும், இலங்கை அரசுக்குச் சாதகமாகவும் செயல்பட்டு வருகிறது. எனவே இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான விசாரணை நடத்துவதற்கான பன்னாட்டு ஆணையம் அமைக்கும் பொறுப்பை ஐ.நா மனித உரிமைக் குழுவிடம் ஒப்படைக்கக்கூடாது. பன்னாட்டு ஆணையம் ஒன்றை ஐ.நா பொதுச் செயலரே நேரடியாக அமைப்பதற்கான அழுத்தத்தை நாம் தர வேண்டும் என்று கூறியுள்ளார்.

இலங்கை அரசு போலவே சர்வதேச மனிதநலச் சட்டத்தையும், மனித உரிமைச் சட்டங்களையும் விடுதலைப் புலிகளும் மீறியிருப்பதாகக் கூறப்படும் ஆறு வகைக் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையென குழுவின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லை. அழிக்கப்பட்ட இயக்கத்தை பொறுப்பாக்குவதற்கு சாத்தியங்கள் இல்லை. ஆனால் இலங்கை அரசு இன்றும் இயங்குகிறது. இலங்கை அரசை அதன் நடவடிக்கைக்குப் பொறுப்பாக்குதல் என்ற பரிந்துரையையே ஐ.நா.அறிக்கை முன்வைக்கிறது. ஐ.நா குழு அளித்த பரிந்துரைகளை இலங்கை அரசு நிராகரித்து விட்டது. ஐ.நா.குழுவின் அறிக்கையை எதிர்த்து ஒரு கோடி சிங்களவரைத் திரட்ட ராசபக்ஷே திட்டமிட்டுள்ளார்.

"இலங்கையின் வளர்ச்சியை விரும்பாத, இலங்கைக்கு எதிரான நாடுகளின் சதி நடவடிக்கையே ஐ.நா. அறிக்கை. இதில் ஒரு துளி உண்மையும் இல்லை. இலங்கையின் இறையாண்மையை காக்க, ஐ.நா.வுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அறிக்கையை எதிர்ப்போம் என்ற முழக்கத்தின் அடிப்படையில் மே தின ஊர்வலத்தை நடத்துவோம்"என மேதின பேரணியை, ஐ.நா. எதிர்ப்பு பேரணியாக மாற்றினார். எந்தவித அறக் கோட்பாட்டுக்கும் அடங்காதவர்கள் ராசபக்ஷே போன்றவர்கள். செங்கொடித் தொழிலாளர் சங்கமும், விக்கிரம குணரட்னாவின் நவசம சமாஜக் கட்சியும் தவிர, அனைத்து தொழில் சங்கங்களும், கட்சிகளும் சம்மதித்து விட்டன. இலங்கையரைக் காக்க மரணத்தையும் ஏற்க தயார் என்ற பொருளில், "எனது மக்களைக் காக்க நான் மின்சார நாற்காலியிலும் உட்காரத் தயார்" என்று அறிவித்து விட்டார்.

# மானும்...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

"மான்! நான் வேளைக்கு எழும்பிவிட்டேன். இது ஒரு வேடனுடைய சோலை. இங்கு, அவன் வேட்டையாடும் மிருகங்களை கூட்டில் வைப்பான். நீதான் இங்கே பெரிய மிருகம் என்று இந்த மூன்று கோழிகளும் கூறுகிறார்கள்." முயல் இரண்டு கோழிகளையும், ஒரு சேவலையும் காட்டினான். "இப்பொழுது இங்கு இருக்கிற வேறு மிருகங்கள் அவை தான்." மான் திரும்பிப் பார்த்தான். இன்னும் ஒரு கூட்டில் நாலு பறவைகள் இருந்தார்கள். அவர்கள் ஏதோ ஒரு கூட்டம் வைத்துக் கொண்டிருப்பதை மான் கண்டான்.

"நாங்கள் எல்லோரும் சேர்ந்து, எப்படி தப்பிக்கிறது என்று திட்டம் போடலாமே?" என்று மான் கூறினான்.

பறவைகள் சிரித்தார்கள். "மான் சொன்னபடி, நாங்கள் எல்லோரும் சேர்ந்து தப்பிக்கலாமா? ஹம்ம்!" என்று ஒரு பறவை கூறினாள். "மான் இருந்து பார், நாங்கள் தனிய திட்டம் போட்டுவிட்டோம். எங்களுக்கு உங்கள் உதவி வேண்டாம்."


"சரி பார்ப்போமே!" என்றான் மான். மான் ஆவலுடன் பாத்துக்கொண்டு இருந்தான். பறவை ஒன்று விடாமல் கூட்டின் பூட்டை கொத்திக் கொண்டு இருந்தான். மானுக்கு அவனுடைய விடாமுயற்சி பிடித்திருந்தது. ஆனால் அந்தப் பறவை களைச்சுப் போய் விழுந்து, இறந்தது. அதை கவனிக்காமல் மற்ற மூன்று பறவைகளும் கதவைத்திறந்து சென்றார்கள். இரண்டு பறவைகள் மரத்தில் அமர்ந்தார்கள்.

ஏதோ ஒரு மிருகம் இரண்டு பறவைகளையும் தட்டினது. ஒன்றை அதன் வாயில் எடுத்தது. மற்றது குளத்தில் விழுந்தது. மூன்றாம் பறவை அதை கண்டு நின்றது. அப்பொழுது, மறுபடியும் அந்த மிருகம் வந்து அந்தப் பறவையை கடித்தது.

ஒரு கோழி பயத்துடன் மெல்லிசாக கூவியது. "என்ன அந்த பறவை?" என்று கேட்டாள். முயலுக்கும் மானுக்கும் என்னவென்று தெரியும். அது ஒரு கழுகு. மான் ஒருக்காலும் அதை நேரில் பார்க்கவில்லை. பார்க்கவும் விரும்பவில்லை.

"எங்களுக்கு கட்டாயம் தப்பிறதிற்கு திட்டம் தேவை. நாங்கள் சேர்ந்து வேலைசெய்ய வேண்டும். பறவைகள் மாதிரி பிரியக்கூடாது. சரியா?" என்று கேட்டான் மான். "இனிப் பார்ப்போம். முதல் அந்தக் கழுகு மிகவும் பொல்லாதது. மரத்திற்கு கிட்ட போகேலாது. குளம் சிறிய மிருகங்களை விழுங்கிவிடும். எனக்கு ஒரு திட்டம் உண்டு..." என்றது மான்.

கோழிகள் கூவிய உடனே, அவர்கள் பூட்டைக் கொத்தத் தொடங்கினார்கள். முதல்முறை போலவே, பூட்டு கழன்றது. ஆயினும், ஒரு கோழி மயங்கியது. எனவே, சேவல் முயலுடைய பூட்டைக் கொத்தினான். பூட்டும் கழன்றது. கோழி எழும்பினாள். மானுடைய பூட்டு உடையாமல் போனது. முயல், நிலத்தை கிண்டி மான் தப்பிக்கும் படி செய்தான். மிருகங்கள் எல்லோரும் மான் மீது ஏறினார்கள். மான் குளத்தை தாண்டினான்.




கழுகில் இருந்து தப்பித்து விட்டர்கள், இனி கதவுதான் இருக்கிறது. ஆனால் வேடனிலிருந்து தப்பிக்க முடியுமா? வேடனின் வீடு கதவுக்கு பக்கத்தில் தான் இருந்தது. மான் வீட்டை நோக்கி ஓடினான், மற்றவர்கள் கதவுக்கு ஓடினார்கள். "அட, தப்பித்தார்கள். இனி நான் தான் இருக்கிறேன்...' என்று மான் நினைக்கும் போது, வேடன் வெளியே வந்தான். 'அட கடவுளே...சரி. அவர்களாவது தப்பித்தார்கள்...' மான் நினைத்தான். ஆனால், வேடன் மற்றப் பக்கம் பார்த்துக்கொண்டு இருந்தான்!! மான் கதவால் ஓடித் தப்பித்தான்.

மிருகங்கள் எல்லோரும் வீடு திரும்பும் போது, காலை ஆயிற்று. குடும்பங்கள் காத்திருந்தார்கள். மானும், முயலும், கோழிகளும் வந்த உடனே எல்லாம் சரி என்று அவர்களுக்கு தெரிந்தது.

**நீதி: ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!**

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 4 பகுதி 18**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

"இல்லை! நான்தான் இன்பன்."

இனியன் அப்படியே இருக்கையில் தெப்பென இருந்து கொண்டான். தான்தான் இன்பன் என்ற சின்னவனைப் பார்த்தான். வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான். நல்லாய் முத்தின கேசுகளாகத்தான் இருக்கவேண்டும். இவனுக்கென்ன ஒரு முப்பது வயதிருக்கும் இருக்குமா! என்ரை பாதி வயதுடையவன், தன்னை என்னுடன் ஒட்டிப் பிறந்தவன் எனச் சொல்லுகிறானே, விசரில்லாமல் என்னவெண்டு சொல்லுறது!

ஆள் மாறாட்டம் கீறாட்டம் செய்து பணம் கிணம் பறிக்கும் நோக்கமில்லை. அப்பிடியேதாவது இருந்தால் சுலபமாக இன்பனின் மகன்தான் எனச் சொல்லலாம். தோற்றம் அப்பிடி இருக்குது. அட தன்னையே இன்பனெனச் சொல்லுறானே!

**◊ சி.வி. நாதன் ◊**

இருக்கையில் சாய்ந்து இருந்தவன், கையால் மேவாயைத் தடவியபடி, சிரிக்கவோ அல்லது விடவோ என்ற நினைப்புடன் தலையைத் திருப்பி மற்றவனைப் பார்த்தான்.

"தம்பி, அவர் சொல்லுவது சரி. அவர்தான் உங்களுடன் ஒட்டிப் பிறந்த இன்பன்."

மற்றவன் வேலிக்கு ஓணான் சாட்சி சொல்வது போலக் கூறினான்.

ம், இவன் வேறை! இரண்டுக்கும் நல்லாய்தான் கிறுக்குப் பிடித்திருக்குது! முகத்தை மற்றப் பக்கமாக இனியன் திருப்பிக் கொள்ள மற்றக் குண்டையும் பெரியவன் போட்டான்

"நான் நாகராசன். சின்னவயதில் உங்களைத் தூக்கி வளர்த்தவன்"

இப்போது இனியனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தலையைச் சுற்றுவது போல் இருக்க, தலையைப் பிடித்துக் கொண்டான். இவனுக்கென்ன 50 வயது வந்திருக்குமோ! எனக்கு 60 ஆகப் போகிறது. என்னைவிடப் பத்து வயதெண்டாலும் குறைவாகத்தான் இருக்கும். என்னைத் தூக்கி வளர்த்தவன் என்கிறானே! சரியான பைத்தியங்கள்தான். அதுசரி, எப்பிடி இரண்டும் ஒண்டு சேர்ந்ததுகள்? எப்பிடி என்னைக் கண்டு பிடிச்சுதுகள்? இதுகளை எப்படிக் கழட்டி விடுவது?

போலீசைத்தான் கூப்பிட வேண்டும். வீட்டுக்குள்ளையும் வரவிட்டுவிட்டேன். மனதுக்குள் சொல்லிக் கொண்டவன், திரும்பி ரேவதியைப் பார்த்தான். சுவருக்கு அருகில் இருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்திருந்த ரேவதி சிரிப்பை அடக்கிக் கொண்டு இருப்பது தெரிந்தது. ஆனாலும் அவளது முகத்தில் இன்னமும் திகைப்பின் அறிகுறிகள் மறையவில்லை.

"ரேவதி, ஒருக்கா ரெலிபோன் பண்ணுங்கோ!"

ரேவதிக்கு அண்மையில்தான் தொலைபேசி இருந்தது. கணவனின் குறிப்பறிந்து ரேவதி எழுந்தாள், 911 உடன் தொடர்பு கொள்ள.

அந்த நேரம் சின்னவன் அதாவது இன்பன் சொன்னான் "வேண்டாம் இனியன், அப்படி யோசிக்க வேண்டாம்" என்றவன், ரேவதியின் பக்கமாகத் திரும்பி "ரேவதி இருங்கோ" என்றான். குரலில் கட்டளையிடுவது போன்ற தொனியிருந்தது. ஏனோ தெரியவில்லை, அவனுக்குக் கட்டுப்பட்டவள் போல் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

"இனியனும் நானும் ஒன்றாகவே ஒட்டிப் பிறந்ததால் உங்களை எந்த உறவு சொல்லிக் கூப்பிடுவதெண்டு எனக்குத் தெரிய வில்லை. குறையாக ஒன்றும் யோசிக்க வேண்டாம்" என்றவன், இனியனின் பக்கமாய்த் திரும்பி "போலீசையோ அல்லது வேறு எவரையுமோ கூப்பிட வேண்டாம். உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்" என்றான். அதற்குள் மற்றவன் இடைமறிப்பது போல தொடர்ந்தான். "கொஞ்சமல்ல, நிறை யக் கதைக்க வேண்டியிருக்கு. நாங்கள் சொல்லுறதை உங்களால் விளங்கிக் கொள்ள முடியுமோ தெரியாது, என்றாலும் எங்களது மனத் திருப்திக்காகவேனும் கேளுங்கோ." எனப் பெரியவன் கூறிக் கொண்டிருக்கும்போது, அது நடந்தது.

அடுத்த அறையில் இருந்து திலகம் மெதுமெதுவாகத் தட்டுத் தடுமாறியபடி வந்தாள். கண் பார்வை மங்கலாக இருந்ததால் பொருட்கள், ஆட்கள் இருப்பது தெரியும். ஆனால் இன்னதுதான் என்று சரியாக அடையாளம் காண அவளால் முடியாது. வயதின் காரணமான இக்குறை பாட்டை வைத்தியர்களால் குணமாக்க முடியவில்லை.

திலகத்தைக் கண்ட மூத்தவன் அவளை உற்றுப் பார்த்தான்.

அவனது முகத்தில் மலர்ச்சி காணப்பட, "இது…நீங்கள்….. திலகமக்காதானே" என கேட்க, இனியனை அதிசயப்படுத்திய அந்த நிகழ்வு நடந்தது. (இன்னமும் வரும்)










ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

**Tel: 647-707-8671 / 416-829-4004**


5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# பழங்களின் பலாபலன்கள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## தோடம்பழம்



சுவையில் பலமாற்றம் உண்டு. பெரும்பாலும் இனிப்பு, புளிப்புக்கொண்ட பழத்தை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இருந்தும் நாம் இனிப்பான பழத்தையே பெற்றுக் கொள்ளுகின்றோம். சிலர் புளிப்பான பழத்தையும் பெறுவதுண்டு. உயிர்ச்சத்து A,B,C தன்னகத்தே கொண்டுள்ளது. இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்தும் காணப்படுவதினால் பற்கள் பழுதடையாமல் இருக்கவும், எலும்புகள் பெலத்துடன் வளர்ச்சியடையவும் சாதகமாகக் காணப்படுகின்றது.

இரவில் உறக்கம் வருவது குறைவாக இருப்பின் இப்பழத்தை எடுத்து தோல்நீக்கி + தேன் கூட்டிப்பாவித்து வந்தால் பயன் உண்டு. எதற்கும் காலநிலை, உடல்நிலை என்பவற்றைக்கவனித்து அளவுடன் எடுப்பது நன்று. இதன் வீரிய செயல்திறனால் உடல்வரட்சி, நாவரட்சி, எரிவு என்பன அற்றுப்போக இடம் உண்டு. நுரையீரலில் நோய் ஏற்பட்டிருப்பின் இப்பழத்தின் சாற்றை எடுத்து ஒலிவ் ஒயில் (Olive oil)உடன் பாவித்து வந்தால் (1/4, 1/2 தேக்கரண்டி) பயன் பெறவழியுண்டு.

உடல் தேற்றத்திற்கு உறுதுணையளிக்கும் இப்பழச்சாற்றில் தாயின் பால் குழந்தைக்கு குறைவாக இருந்தால் தேன்கூட்டி கொடுப்பதினால் போசாக்கைப் பெறுவதுடன் மலபந்தநிலையை மாற்றிக் கொள்ளும் தன்மையுண்டு. பெரும்பாலும் ஒரு வயதிற்கு மேற்பட்டவருக்கு கொடுப்பது மிக நன்று. சளி, முட்டு, இருமல் தணிவடையும். இது பழரசமாகவும் பெறமுடியும்.

## கொய்யாப்பழம்



சுவையில் இனிப்புத்தன்மையுடையது. குளிர்ச்சியை உண்டாக்கும். வீரியத்தன்மை யுடைய பழமாக இருப்பதினால் இருதய வியாதியைக் குணமாக்கும் தன்மை யுடையது. அத்துடன் குருதியைச் சுத்தப்படுத்தி விருத்தியடையச் செய்யும் தன்மையுடையது. சோகை நிலையில் உள்ளோர் தொடர்ந்து பாவித்து வந்தால் சோகைநிலை அற்று மேனி மினுமினுப்புடன் காணும் நிலை ஏற்படும். மலபந்தம் ஏற்படாது வழியமைக்கும். உயிர்சத்து A,B,C காணப்பட்டாலும் 'C' யின் சத்து அதிகரித்துக் காணப்படுகின்றன.

இப்பழத்தை குழந்தைகளுக்கு கொடுத்துவர நடக்கும் வலுவைக் கொடுத்து, பசித்தன்மையை அதிகரிக்கச் செய்யும். இருதய படபடப்பு அற்றுப்போகும். குடல், ஈரல் போன்ற உள்உறுப்புக்களில் ஏற்படும் புண் நிலையை மாற்றும் தன்மையுடையது. நீரிழிவு வியாதியினால் பீடிக்கப்பட்டவர் பாவித்து வந்தால் தகுந்த பயனைப் பெறமுடியும். ஆண்மைத் தன்மையை அதிகரிக்கச் செய்யும்.

## தக்காளிப்பழம்

இது குளிர்ச்சியை உண்டாக்கும். சீதவீரியம் பொருந்தியது. சிறுநீரை அதிகம் வெளியேற்றும். இப்பழத்தில் கறி, சொதி வைப்பதும் உண்டு. உணவை வெறுப்பின்றி விருப்பத்துடன் உண்ணத்தூண்டும். இதனைப் பாவனைக்கு எடுக்குமுன் நன்கு காம்புப்பகுதியைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அதில் சில கிருமிகள் நிறைந்து காணப்படுவதும் உண்டு.

இப்பழத்தில் சுண்ணாம்பு, இரும்புச் சத்துகள் காணப்படுகின்றன. அத்துடன் பொட்டாசியம், சோடியம் என்பனவும் உண்டு. இது இரத்த விருத்திக்கும் எலும்பு வளர்ச்சிக்கும் ஆதாரமாக உள்ளது. சோடியம், கந்தகம், மக்னீசியம் காணப்படு வதினால் மூளை வளர்ச்சிக்கும் செயலுக்கும் உறுதுணை அளிக்கின்றது. இதில் உயிர்ச்சத்து A,B,C காணப்படு வதினால் தேவைப்படும் சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். இதனால் எம்மை நோயில் இருந்து காப்பாற்ற உதவுகின்றது. எனவே இதனை பழுதின்றி எடுத்து பாவித்துவந்தால் முகம் அழகு கொடுப்பதுடன் எலும்புகளும் பலம்பெற்று வளர்ச்சி யடையவும், சருமம் பளபளப்பாகவும் நரம்புத் தளர்ச்சி அற்று சுகத்துடன் வாழ வழியமைக்கும். மேகநோய் சிறுநீர்போகும்போது எரிவு உள்ளோர் இப்பழத்தைப் பாவித்து வந்தால் பலாபலன் உண்டு. இப்பழத்தை நன்மையாகக் கூறிய பொழுதிலும் ஒருசிலருக்கு ஒவ்வாமையை விளைவிக்கும் இயல்புடையதாகவும் இருக்கின்றது. உ+ம் சருமத்தில் சொறிகடி, தடிப்புத்தன்மை குணம் குறியாக தோன்றும். அவ்வேளையில் இப்பழத்தை உண்ணாமல் விடுவது நன்று. இந்தப்பழத்தில் சோஸ் தயாரித்து விற்பனையாவதையும் நாம் அறிவோம். அதிகமாக சிறுவர்கள் விரும்பி உண்பதைப் பார்க்க முடிகின்றது. நாமும் இதனை இலகுவாகத் தயாரிக்க முடியும். அதாவது நல்ல பழமாக எடுத்து நன்கு துப்பரவு செய்து ஒரு சட்டில் இட்டு நீரும் சேர்த்து சூடாக்கி பின் இறக்கிப் பழத்தை எடுத்து குளிர்ந்த நீரில் சிறிது நேரம் வைத்து எடுத்தால், அதன் தோலை உரிக்க இலகுவாக இருக்கும். பின்பு அதனை




பசைத் தன்மையாக்கி அளவான வெல்லம் கூட்டிக் கிளறிப் பதப்படுத்தி வருவதுதான் உடன் செய்யும் ஜாம் ஆகும். இப்படி தேவைக்கு ஏற்ப செய்து பாவித்து வருவது நன்மை பயக்கும். பாண், ரொட்டி, இட்லி, தோசை போன்றவற்றுடன் பாவிக்கலாம். இப்படி நற்பயன் கொடுக்கும் பழமாக அமைகின்றது.

**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
**Tel.: 647.718.3909**



சுயாதீன கலை திரைப்பட மையம்
ரொரண்ரோ

**9th IF Tamil -2011**

ஒன்பதாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா - படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும்.
அவையாவன:: $500- $300- $200

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படவேண்டும்:

- படைப்புக்கள் மே 15, 2011க்கு (May. 15, 2011) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது..
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு: 1-416-450-6833; 1-416-804-3443;
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com
- Independent Art Film Society of Toronto

# முதுமையும் உடல் உள கோளாறுகளும்

முதுமை ஒரு நோயல்ல! ஆனால் அது ஒரு இயல்பான நிகழ்வு. வயோதிபம் என்பது ஆளுக்கு ஆள், இனத்திற்கு இனம், பால்வேறுபாடுகள் என்பவற்றால் ஒரு சிக்கலான உணர்வை ஏற்படுத்தினாலும் வயது முதிர்தலை எவராலும் தடுக்க முடியாது. பொதுவாக கால வயது (Chronological age) கொண்டே நாம் முதுமையை அளவிடுகின்றோம். முதுமை அடையும் போது சில அம்சங்களை இவர்களிடமிருந்து அவதானிக்கலாம். படிப்படியாக நண்பர்களை இழந்து கொண்டு வருவார்கள். இளைஞர்கள் எல்லோரும் பொறுப்பற்றவர்கள் என எண்ண ஆரம்பிப்பார்கள். பழைய நினைவுகளை அடிக்கடி இரைமீட்ப்பார்கள். நடக்க விருக்கும் சத்திரசிகிச்சை பற்றியோ, நோய்களைப் பற்றியோ கதைத்துக் கொண்டிருப்பார்கள். சுயநலத்தை கூட்டிக் கொள்வார்கள். வாழ்வு மிக மோசமானது என எண்ணத் தொடங்குவார்கள். சிறிய மாறுதல்களையும் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். தாங்கள் வாழ்ந்த காலத்தை விட இப்போதுள்ள மக்கள் முட்டாள்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் இவர்களுக்கு ஏற்பட ஆரம்பித்தால் அவர்கள் முதுமையடைந்து கொண்டிருக் கிறார்கள் என்பது தான் அர்த்தம்.

பொதுவாக 65 வயது முதியோர்களுக்கான எல்லையாக கொள்ளப்படுகின்றது. பல்வேறு இலவச மருந்து சேவைகளும், போக்குவரத்து சலுகைகளும், உடற் சீரமைப்பு உதவிகளும் வழங்குவதற்கு இவ்வயதினை அரசுகள் கடைப்பிடிக்கின்றன. மருத்துவ ஆய்வுகளின்படி இந்த வயதிலிருந்து உடலியல், உளவியல், மாற்றங்கள் தீவிரமடைகின்றன என்பதே உண்மையாகும். உடலில் ஏற்படும் தளர்வுகள் காரணமாக பல்வேறு கோளாறுகள் இவர்களை வந்தடைகின்றன. ஒவ்வொரு நாடுகளிலும் இக்கோளாறுகள் வேறுபடலாம். எமது முதியோர்கள் தாயகத்திலிருந்து இங்குவந்து புதியதொரு சூழ்நிலையில் வாழ்பவர்கள். எனவே இவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் அதிகமாகும். எனினும் நாம் அதனை புரிந்து கொள்ள வேண்டும்.

முதியோர்களின் உடல், உளரீதியான மாற்றங்களில் அதிக அக்கறையை கடந்தகால மருத்துவர்கள் எடுக்கவில்லை எனினும் இன்று மிகவும் கூடிய அக்கறை எடுக்கப்பட்டுவருகின்றது. மருத்துவ தேவை கருதி முதியோர்களை 65-74 வயதினர், 75-84 வயதினர் 85க்கு மேற்பட்டவர்கள் என வகுத்துள்ளனர். மிகவும் முதுமை அடையும் போது பலவீனம், புதிய நோய்கள், ஒளியிழந்த கண்கள், பலமிழந்த பற்கள், சுவையிழப்புகள் போன்ற பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இந்த நிலையில்தான் இவர்கள் 'அறளை' பெயர்ந்தவர்கள் என்று இளையோரால் ஒதுக்கப்படுகின்றனர். வீட்டுக்கு பாரமானவர்களாகவும்,



வேண்டத்தாகதவர்களுமாக இவர்கள் கருதப்படுவதால் முதியோர் இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். உடலும், உள்ளமும் ஒன்று சேர்ந்து பாதிப்பது மிகவும் கொடுமையான நிகழ்வாகும்.

**வயது முதிர்ச்சி ஏற்படும்போது உடல், உள மாற்றங்கள் நிகழ்வது தவிர்க்க முடியாததொன்றாகும். பொதுவான உடல் பிரச்சினைகள்**

1. நோ (Pain) உளைவு (Aches)
2. இருமல், தடிமன் (Cough, Cold)
3. மலச்சிக்கல் (Constipation)
4. உடல்தளர்வு (Fatigue)
5. தலைவலி (Headache)
6. தலைச்சுற்றல் (Dizziness)
7. சமிபாடின்மை (Indigestion)
8. இதயப் படபடப்பு (Heart Palpitations) மூச்சுவிடுவதில் சிரமம் (Shortness of Breath)
9. செவிப்புலன் கட்புலன் மாற்றங்கள் (Hearing Changes, Fusion Changes)

இவற்றினை குடும்ப மருத்துவர்கள் மூலம் விசேட நிபுணர்களிடம் சிகிச்சை செய்வதால் மட்டுமே முற்றாக மாற்ற முடியும். பொதுவாக சில நோய்களை முற்றாக மாற்ற முடியாதெனினும் உணவு, பழக்க வழக்கங்களால் குறைக்க முடியும்.

90 வீதமான முதியோர்கள் ஏதாவது உடல் வலியுடன் வாழ்வதனை பொதுவாக காணமுடியும். உடல் நோவும், வலியும் வாழ்க்கையுடன் நித்தியமாக இணைந்துள்ளது. பொதுவாக உடலில் உள்ள எலும்புகளில் ஏற்படும் தேய்மானம் (Degeneration), தசைத்தளர்வு (Muscle Strain), மூட்டுத்தேய்மானம் (Osteoarthritis), முள்ளந்தண்டு வளைவு (Spinal stenosis), போன்றவை ஏற்படுகின்றன. நடைமுறையில் முதியோர்கள் செய்கின்ற செய்கைகள் அவர்களை பாதிக்கலாம். பிழையான முறையில் வளைதல் (Im proper Bending), குப்புறப்படுத்தல் (Sleeping on Stomach), பாரங்களை தூக்குதல் (Lifting) போன்றனவும் உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்தலாம். உடற்பயிற்சி, நீச்சல் செய்தல், யோக வகுப்புகளுக்கு செல்லுதல் இவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

பொதுவாக மனநலமும் உடல் நலமும் சேர்ந்ததே ஒருவருடைய ஆரோக்கிய மாகும். முதலில் குறிப்பிட்ட உடல் நலம் தவிர்ந்த மனநலம் என்பது உளவியல் சம்பந்தப்பட்டது. முதியோர்களின் மூளைக் கோளாறுகளே மிகவும் முக்கியமாகும். பொதுவாக இரு வகையான மூளைக் கோளாறுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. மூளைத்தடுமாற்றம் (Dementia)
2. மூளைச் செயலிழப்பு (Delirium)

முதலாவது வகையான மூளைத்தடுமாற்றம் என்பது பொதுவாக அறிவுசார் (Cognitive) திறன்களை படிப்படியாகக் குறைவடையச் செய்கின்றன. இவர்களுக்கு பொருட்களை ஞாபகப்படுத்துதல் கடினம். குறிப்பாக அண்மைய சம்பவங்கள் மறந்து போய்விடும். பிள்ளைகளின் பெயர்களை வரவழைப்பது கடினம், சொந்தவேலைகளை செய்ய மறந்து விடுவர். அர்த்தமற்ற உரையாடல், திருட்டு செய்வதில் விருப்பம், உளச்சோர்வுறல் என்பன ஏற்படலாம். எனவே இவர்களது செயல்கள் படிப்படியாக அதிகரிப்பதால் சில வயதெல்லைகளை உருவாக்கியுள்ளனர். 65-74 வயதினர்கள் இந்நோயில் ஒரு வீதத்தினரும், 75-84 வயதினர்கள் இந்நோயில் நான்கு வீதத்தினரும், 84 க்கு மேற்பட்ட வயதினரில் 10 வீதத்தினரும் இந்நோய்க்குள்ளாவர். இவ்வாறான மூளைத் தடுமாற்றத்திற்கு பல நோய்கள் காரணமாகலாம். முக்கியமான நோய் அல்சைமர் (Alzheimer) ஆகும். 50வீத அல்சைமர் நோயாளிகள் இப்பிரிவில்



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep.)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $340,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000

# உதைக்கும் கதைகள்

## தூறல்

### வானரன்

ஒரு முன் மாலைப் பொழுது. விளையாட்டு மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஒரு சிறுவர் கூட்டம் மைதானத்துக்குள் நுழைய முயற்சித்தது. பாதுகாப்பு அதிகாரி அனுமதிக்கவில்லை. வெறுப்புடன் வெளியேறும் சிறுவர்கள் மைதானத்துக்கு வெளியே நிற்கின்றார்கள். திடீரென அவர்களுக்கு புதையல் கிடைத்தது. அரங்கினுள் உதைபந்து விளையாடிக் கொண்டிருந்த வீரர்கள் பந்தை உயர்த்தி அடிக்க பந்து மைதானத்துக்கு வெளியே வந்து விடுகின்றது. அந்த பந்தை புதையல் போல் சிறுவர்கள எடுத்துக் கொள்கின்றார்கள். இப்பொழுது சிறுவர்கள் ஆட்டத்தை மறந்து பந்துடன் ஒரு மைதானத்துக்கு ஓடுகின்றார்கள். இடையில் தங்களிடம் உள்ள பணத்துக்கு கொக்கோ கோலா வாங்குகின்றார்கள். விளையாடி முடிக்கும் பொழுது பந்து யாருக்கு என்ற சண்டை வந்து ஒரு சிறுவன் பந்துடன் வீட்டிற்கு செல்கின்றான். வீட்டில் கட்டிலின் கீழ் பந்தை மறைத்து வைத்து விட்டு தனது அலுவல்களை கவனிக்கின்றான். அவனது தந்தை எங்கே என்பது தெரியாது. தாயுடன் வாழ்ந்து வருகின்றான். இவர்களது குடும்பம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பம். இவனுடன் உதைபந்து விளையாடும் சிறுவர்களது குடும்பமும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள். இவனது தாய் ஒரு பழைய ஓவியத்தை தூசு தட்டி இவனிடம் கொடுத்து ஒரு கடையில் விற்று பணத்தை பெற்றுவருமாறு கூறுகின்றான். சிறுவனும் அவனது நண்பனும் கடைக்குச் சென்று பணத்தை பெறுகின்றனர். கடைக்குச் செல்லும் பொழுதும் பந்துடனேயே செல்கின்றனர். வீட்டை மறந்து இச் சிறுவர்கள் விளையாடத் தொடங்குகின்றார் கள். இருட்டி விட்டது. வீட்டிற்கு செல்ல வேண்டும். சிறுவனின் மேலங்கியினுள் பணம் இல்லை. இந்த பத்து வயது சிறுவன் பயந்து விட்டான். என்ன செய்வது. மீண்டும், மீண்டும் தேடுகின்றார்கள். பணம் கிடைக்கவில்லை. தன்னுடன் இறுதியாக நின்ற சிறுவனை வற்புறுத்தி வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பி விட்டு பந்தை துடைக்கின்றான். பந்துடன் ஓடுகின்றான். அதே பழைய பொருட்கள் விற்கும் கடை அங்கு தான் அவனது ஓட்டம் நிற்கின்றது. பந்தை விற்று விட்டு பணத்துடன் வீட்டிற்கு செல்கின்றான். அச் சிறுவனின் முகத்தில் ஒரு பயங்கர சோகம் தெரிகின்றது. இப்படம் சிலியில் படமாக்கப் பட்டது. The Last Goal Wins என்ற பெயரில் இப்படம் படமாக்கப்பட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடுகள் உதைபந்தாட் டத்திற்கு பிரபல்யம் பெற்றவை. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் பிரதான பொழுது போக்காகவும் விளையாட் டாகவும் உள்ளது உதைபந்தாட்டம். இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் கிரிக்கெட்டுக்கு தரும் ஆதரவை உதை பந்தாட்டத்திற்கு தருவதில்லை. மிகவும் குறைந்த செலவுடன் விளையாடப்படும் விளையாட்டுக்களுக்கு வளர்ந்து வரும் நாடுகள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. உதைபந்து பிர-பலமானதைப் போல் ஆட்டத்தின் வெற்றிக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் உலகெங்கும் பிரபல்யமாக வுள்ளது. கிரிக்கெட்டில் Match fixing என்ற பதம் இன்று பிரபல்யமானது. நடந்து உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் இப் பதம் பல போட்டிகளில் அடிபட்டது. விளையாட்டு வீரர்களை வாங்குவது என்பது, அல்லது ஆட்டத்தின் முடிவை முன் கூட்டியே தீர்மானிப்பது என்பது இப்பதத்தின் சுருக்கமான விளக்கம். இதற்காக விளையாட்டு வீரர்களுக்கு லட்சங்களில் இருந்து கோடி வரை கொடுக்கப்படுகின்றன. இதன் சரித்திரத்தை ஆராயாமல் எமக்கு தெரிந்த சரித்திரத்திரத்தில் முதல் நிகழ்வாக இருப்பது சிக்காகோ White Sox ; பேஸ்போல் World Series ஐ Cincinnati Reds டம் தோற்றது. இது நடைபெற்றது 1919ம் ஆண்டு. இதனை Black Sox Scandal என ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். சிக்காகோ அணியின் எட்டு வீரர்கள் வாழ்நாள் முழுவதும் உயர் லீக்கில் விளையாடுவதற்கு தடைசெய்யப்பட்டது. இதனை மையமாக வைத்து 1988ல் Eight Men Out என்ற படம் வெளிவந்தது. இதற்கு முன் இதே பெயரில் நாவலொன்றும் வெளிவந்தது. Match fix-ing ன் மூலத்தை ஆராய்ந்தால் இது கிராம மட்டத்தில் நடைபெறும் ஆட்டங்களிலும் இடம் பெறுவதைக் காணலாம்.

சிலியின் சன்டியாகோவின் புற நகர் பகுதியொன்றில் மூன்றாவது லீக் அணியில் விளையாடும் முப்பது வயது மிக்க வீரர் கொன்சாலிஸ். இவர் இவரது அணியின் முக்கிய வீரர். இவரது அணி அந்த லீக்கின் முக்கிய அணி. இவருக்கு உள்ளுக்குள் ஒரு புகைச்சல். தன்னால் முதலாவது லீக்கில் இடம் பெறவில்லை என்பதே அவரது கவலை. மூன்றாவது லீக் ஆட்டங்களை கவனிப்போர் மிகக் குறைவு. இவர்களது பார்வையாளர்கள் அந்த புற நகர் வாழ் மக்கள். இவரால் மேல் செல்ல முடியாமைக்கு மற்றொரு காரணம் இவரது வயது. இவரது காதலியே இவருக்கு அறிவுரை வழங்குவார். இவர் தன மனஆதங்கங்களை உடலுறவின் போது வன் உறவாக வெளிப்படுத்துவார். இதனால் காதலி கோபமடைகின்றார். இவரை எதிர் அணியைச் சேர்ந்த முக்கிய புள்ளி சந்திக்கின்றார். அவர் வைக்கும் கோரிக்கை ஒன்றே ஒன்று. ஞாயிறு நடக்கும் ஆட்டத்தில் கோல் அடிக்க வேண்டாம் என்பதே அது. அதற்காக இவருக்கு பணமும் கொடுக்கப்பட்டது. பணத்தை பெற்றவுடன் இவர் சந்தோசமாகவே காணப்படுகின்றார். ஆட்டத்தில் ஆரம்பத்தில் இவரது ஆட்டம் இவரது அணியினருக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது. கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களை தவறவிட்டு விடுகின்றார். ஆட்டம் இறுதி நேரத்தை நோக்கி நகர்கின்றது. இவரது அணி பயிற்சியாளர் திட்டுகின்றார். அதில் ஒன்று இவரது தன்மானத்தை கேள்வி கேட்கின்றது. விளைவு இவருக்கு பணம் கொடுத்தவர் களுக்கு எதிராகவே செயல்படுகின்றார். இவர் அடிக்கும் கோலுடன் ஆட்டம் முடிகின்றது. படத்தின் பெயர் படத்தில் கொன்சலாஸினது நடவடிக்கைகளுக்கு எதிரானதாகவே உள்ளது. இத் தலைப்பு பார்வையாளர் களுக்கும் அறிவுரை வழங்குகின்றது. "Don't fall for that" என்ற தலைப்பு இச்சகதியினுள் செல்ல வேண்டாம் என சகலருக்கும் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.




சிலி போன்ற நாடுகளில் உதைபந்தாட்டம் என்பது அவர்களது கலாச்சாரம் எனக் குறிப்பிடலாம். அதுவும் சிலி விளையாடும் ஆட்டங்களை மக்கள் பார்க்கமலேயே இருக்க மாட்டார்கள். நகரத்தில் இருந்து கிராமத்திற்கு ஒரு அலுவல் காரணமாக செல்லும் பிரான்சிஸ்கோ படகு பழுதடைந்தது காரணமாக நகரத்திற்கு மீண்டும் செல்ல முடியாமல் உள்ளது. படகில் வந்திறங்கிய இரு சகோதரிகள் தங்களது வீட்டில் அன்றிரவு தங்க பிரான்சிஸ்கோவிற்கு இடமளிக்கின்றனர். இவர்களது வீட்டில் இருக்கும் தொலைக்காட்சியில் உதைபந்தாட்டத்தை பார்க்க கிராமத்தைச் சேர்ந்த சிலர் வருகின்றனர். சகோதரிகள் திருமணமாகதவர் கள். இவர்களது தந்தை சில நாட்களுக்கு முன்னரே மரணமானவர். அன்று தொலைக்காட்சி வேலை செய்யவில்லை. உலக கிண்ண ஆட்டம். என்ன செய்வது என அனைவரும் யோசிக்கின்றனர். மழை வேறு பெய்கின்றது. இறுதியில் பிரான்சிஸ்கோ கூரை மீது ஏறி அன்ரனாவை சீர் செய்கின்றான். கீழே வர முயற்சிக்கும் பொழுது வழுக்கி கீழே விழுந்து விடுகின்றான். இளைய சகோதரி முதலுதவிகள் செய்கின்றார். மற்றைய சகோதரியை பார்வையாளர் ஒருவர் விரும்புவதாக கூறுகின்றார். தங்களது வாழ்க்கை பயணத்தின் தேடலை தேடிக் கொண்ட இவர்கள் ஆட்டத்தை பார்த்தார்களா என்பதே முடிவு. The Passion of Crowds என்பதே இப்படத்தின் தலைப்பு

இயல்பு வாழ்க்கையில் விளையாட்டின் முக்கியத்துவத்தை பல்வேறு பரிமாணங்களினூடாக இயக்குனர் Andres Wood வெளிப்படுத்தியுள்ளார். மனதை வலிக்கும் வகையில் எடுக்கப்பட்டுள்ள இந்த மூன்று படங்களும் பார்வையாளர்களை நோக்கி பல கேள்விகளை எழுப்புகின்றது. உதைபந்தாட்டத்தை மையமாக வைத்து பல படங்கள் வெளிவந்துள்ளன. சில வருடங்களுக்கு முன்பு வந்த Bend it like Becham குறிப்பிடத்தக்க படம். இது இந்திய கலாச்சாரத்தில் பெண்கள் விளையாடுவதில் உள்ள சிரமங்களை பதிவு செய்துள்ளது. பெண்கள் மீதான அடக்கு முறை கலாச்சாரத்தை கட்டுடைக்கும் ஒரு இளம் பெண்ணைப் பற்றியது. அப் பெண்ணின் உணர்வுகள் மீதான தாக்குதலை மிகவும் காத்திரமாக இப்படம் வெளிப்படுத்தியது. Offside என்ற ஈரானிய படமும் பெண்கள் மீதான பிரச்சினைகளை வெளிப்படுத்து கின்றது. பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை பதிவு செய்துள்ளது. சுமார் நூறுக்கு மேற்பட்ட படங்கள் விளையாட்டையும் உதைபந்தாட் டத்தையும் மையமாகக் கொண்டுள்ளன. இவற்றில் ஒரு சிலவே காத்திரமான படைப்புக்களாக வெளிப்படுகின்றன. உதைபந்தாட்டக் கதைகள் (Historias de Fútbol (Soccer Stories) (Football Stories) (1997)) என்ற பெயரில் வெளிவந்துள்ள மேற்கூறப்பட்ட மூன்று கதைகளும் சமூகத்தின் அடி மட்டத்தில் வைத்திருக்கப் படுபவர்களின் வாழ்வை பதிவு செய்துள்ளது.

பிற்குறிப்பு

விளையாட்டைப் பற்றிய படங்களின் பெரும் பட்டியலையே இங்கு குறிப்பிடலாம். அவற்றில் பெரும்பாலானவை விளையாட்டின் வர்த்தக கவர்ச்சியின் பாதிப்பாகவே உள்ளன. தமிழில் பல படங்கள் வெளிவந்துள்ளன. வெண்ணிலா கபடிக் குழு, லீ போன்ற பல படங்கள் வெளிவந்துள்ளன. Hip Hip Hurray,Boxer, All Rounder , Kabhi Ajnabee The Maalamaal, Awwal Number Chamatkar, Jo Jeeta, Wohi Sikander, Lagaan, Stumped, Iqbal, Hattrick, Say Salaam India, Ta Ra Rum Pum, Chain Kulii ki Main Kulii, Apne Chak De India போன்ற ஹிந்திப் படங்களும் வெளிவந்துள்ளன.

இவை எதுவும் விளையாட்டைப் பற்றிய சரியான பதிவாக கூறமுடியாது. இன்று விளையாட்டு என்பது விளையாட்டுடன் முடியாமல் அகமும் புறமும் முடிவுகளை தீர்மானிக்கின்றன. இவை பற்றிய பதிவுகள் அவசியம். தமிழ் இலக்கியத்திலும் விளையாட்டு பற்றிய பதிவுகள் குறைவு. இன்று விளையாட்டு எமது வாழ்வின் ஓர் அங்கமாக மாறும் பொழுது அவை பற்றிய பதிவுகளும் அவசியம்.


REAL TEAM
Thinking of selling? Think SOLD!
HOMELIFE
" Put our experience to work for you, and see the difference! "
Neilson/McLevin
$ 249,900
Detached,3 Bedrooms
close to all Amenities
Good Starter home
Newly Fin Basement
Call for more Details
McCowan/MajorMac
$ 620,000
5 Bedrooms Detached
4 Washroom,Hardwd floor
3 Years New,Appr 2800sf
Large Hfamily Home
Close To All Amenities
Markham/Ellesmere
$ 749,900
Custom Built 4 Bedrooms
Fully Upgraded
Detached Few Years Old
Prime Scarborough Lcation
Call More Details
Markham/14th Ave
$ 499,900
3 Bedrooms Detached
Finishe Basement
close to all Amenities
Newly Renovated House
Callfor More Details
Mclevin/Neilson
$ 159,900
2 Bedroom Condo
2 Washroom
well kept Unit
24hrs Security
close to all Amenities.
Investment Property
$389,900
Great Investment Property
Restaurant With Three
Apartments. Good Return.
Anchored With Good
Tenants
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Scarborough Town Ctr
Sale Or Lease
One Bedroom+ Dent
Scarborough Town Center
Brand New Condo
Available For Sale or Lease
Close To All Amenities
Hwy 10/Cresthaven
$371,900
Detached,4 Bedrooms
Finished Basement
Large Family home
Lovely Upgraded
Call for more Details
Kennedy/Hwy7
$ 1.98 Million
Custom Built Home
5 Bedrooms Detached
& Huge House.
Upgraded Home
close to all Amenities
14th Ave/9thLane
$ 639,900
4 Bedrooms Detached
Over 2500sq feet
Close to all Amenities
Large Family Home
Call for More Details
Ravi Raveendran
Real Estate Broker
416.817.8479
Markham/Passmore
$ 549,900
3 Bedrooms Detached
Over 2000sq feet
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Finch/Middlefield
$ 189,900
2 Bedroom Condo
well kept Unit
Laminate Floor
close to all Amenities.
Markham/Buroak
$619,900
4 Bedroom Detached
5 Washroom
Finished Bsmt
Over 2500 Sf
close to all Amenities.
Weston/Majormac
$ 629,900
4 Bedrooms Detached
Finished Basement
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Birchmount/Sheppard
$279,900
4 Bedrooms,Town house
Agincourt Area
Short Walk to All Amenities
Call for more Details
Mccowan / Finch
SOLD
$269,900
3 Bedrooms,Town House
Great Location
Short Walk to All Amenities
Call for more Details
Kethees Seevaratnam
Sales Representative
416.275.5788
Bovaird/Sandlewood
$379,900
Detached,4 Bedrooms
Few years Old
Close to all Amenities
Call for more Details
Yonge/Sheppard
$ 429,900
New Luxury Condo
Walk To Subway
close to all Amenities
call for More Det...
McLevin/Tapscott
$ 299,900
3 Bedrooms Feehold
3 WashroomTown House
Close to all Amenities
Call for More Details
HWY 7 / McVean
Brand New
$949,000
New Detached,5Bed Rms
Walk-Out Basement
Ravine Lot.
Hardwood Floor
Approx 4500 Sq Ft
Justin William
Real Estate Broker
416.803.7344
Investment
Barrie
$529,000
Good Investment Property with tenant
2 Store with 7 apartment in Barrie
Call for more Details..
Oshawa
$499,000
Good Investment Property with tenants.
2 Stores with 4 apartments in Oshawa
Call for more Details..
Ottawa
$ 750,000
Gas Station With Property
Conv.Store/ Country Style Coffe Shop.
and More ...
Call for Details....
Markham
Daisy Mart
$ 129,900
Bussy Location,Well Estabilished
Business.
Call For More Details
Markham
$275000
Well Estabilshed
Sports Bar/Restaurant
In Bussy Location
Call for more Details..
Brampton
Becker's
$ 274,900
Bussy Location,Well Estabilished
Business.
Call For More Details
New Projects
Celebration
CONDOMINIUMS AT BRIDLEWOOD MALL
WARDEN & FINCH
From $ 185,900
Direct:416.803.7344
*Each office Independently owned and operated
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave, East, Toronto, ON. Tel: 416-321-6969 & 145 Traders Blvd. E, Mississauga,ON Tel: 905-712-2666


# “உலக வரலாறும் மனித விடுதலையும்”

## தத்துவாசிரியர் ‘ஹெகல்’ - 1

வரலாறு குறித்து எத்தனையோ கோட்பாடுகள், சிந்தனைகள், கருத்துருவாக் கங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. ஆயினும் நவீன வரலாற்றில் “ஹெகல்” முன்னெடுத்த சிந்தனாவாதம் தொடர்பான கருத்தியல் இன்றைய வரலாற்று மாணவர் களுக்கு அடிப்படையான பாடமாக அமைந்த ஒன்று.

நாங்கள் தற்போதய அரசியல் கால கட்டத்தில் நவீன அரசியற் கோட்பாடுகள் குறித்து நுனிப்புல் மேய்ந்து செல்பவர்களா கவே சாதாரண மனிதர்கள் என்ற வகையறாவுக்குள் அடங்குவோம். ஆயினும் அரசியல் குறித்த ஆழ்ந்த பிரக்ஞை படைத்த மாந்தர்களும் நம்மில் உண்டு. அவர்கள் தங்கள் அறிவு, வாசிப்பு, சிந்தனை ஆகியவற்றின் கொள்ளளவுக்கேற்ற விதத்தில் கலை, இலக்கியம், தத்துவம், அரசியல் பற்றி விவாதித்து உரையாடி உடன்பட்டும், முரண்பட்டும் கொள்வதை எம்மால் அவதானிக்க முடியும். அவ்வாறான சூழ்நிலையில் “அன்ரன் பாலசிங்கம்” அவர்களின் “உலக வரலாறும் மனித விடுதலையும்” என்ற தலைப்பிலான கட்டுரையொன்றை “விடுதலை” என்ற அவரது நூலொன்றில் வாசிக்க நேர்ந்தது. ஏற்கெனவே பலமுறை இப்புத்தகத்தை வாசித்த போதிலும் இம்முறை அவற்றை வேறு வகையில் நோக்கினேன். அதில் அவர் மிகவும் சுருக்கமாக உலக வரலாற்றில் மிகப் பெரும் தாக்கங்களை ஏற்படுத்திய சில கோட்பாட்டாளர்கள் குறித்து எழுதியிருந்தார்.

எனவே அதிலுள்ள சில விடயங்களைப் பற்றி எழுதுவதும், பேசுவதும் பின் அவற்றிற்கூடாக விரிந்து செல்லக் கூடிய அறிவுத்தளத்தில் புதியவைகளைக் கற்றுக்கொள்ளுதலும் அத்தியாவசியமானது என எண்ணுகின்றேன். அந்த வகையில் “ஹெகல்” பற்றி “அன்ரன் பாலசிங்கம்” அவர்கள் எழுதியுள்ளதை எடுத்துக் கொள்வோம். “ஹெகல்” கடுமையானதும், பூடகமானதுமான மொழியில் எழுதிய ஜேர்மனிய தத்துவ அறிஞர். அவரது நூல்கள் சொற்புதிர்களால் நிறைந்திருப்பதாகக் கூறப்படும். அவரது மொழியாடலில் மனம் என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் அதற்குப் பல்வேறு அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டிருக்கும். சாதாரண மனித மனம் என்பதற்கு அப்பால் மனம் என்பது மனித ஆன்மா, மானிடத்தின் கூட்டு ஆன்மா, அண்டமெங்கும் வியாபித்து நிற்பதாக அவர் கருதும் பிரபஞ்ச மனம் என்ற பொருட்களையெல்லாம் கொள்வதாகக் கருதப்படுகின்றது. அதேவேளை மெய்ப் பொருளையும், மெய்யுண்மையாகக் கருதப்படும் பரிபூரணத்துவத்தைக் குறியீடு செய்வதாகவும் மனம் என்பதன் கருத்து மையம் அமையுமாறும் வியாக்கியானங் களைக் “ஹெகல்” கொடுப்பார்.



இவ்வகையில் பிரபஞ்ச மனதின் அசை வியக்கத்தையே “ஹெகல்” வரலாறு என்று கூறுவார். இவ் அசைவியக்கம் பிரபஞ்சத்திலிருந்து மானுட வாழ்வு ஈறாக சர்வமெங்கணும் வியாபித்து நிற்கும் மாபெரும் சக்தியாக அமைகிறது. இந்தப் பேரசைவு அனைத்தையும் படைத்து, இயக்கி, அழித்து முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது. மனித நாகரிகங்கள், சாம்ராஜ்யங்கள், பண்பாட்டு மறுமலர்ச்சி யுகங்கள் என்பன தோன்றி, வளர்ந்து, மடியப் புதியவை தோன்றிய வண்ணம் உள்ளன.

இந்த அசைவியக்கங்களினூடாக மனித மனமானது முரண்கள் மறைந்த நிறைவை நோக்கிப் பயணிக்கின்றது. திண்மம், திரவம், வாயு ஆகியன சடத்துவப் பொருட்கள் என அழைக்கப்படும். இந்தச் சடத்துவ உலகின் சாராம்சமாக ஈர்ப்புச் சக்தி இருப்பது போல, ஆன்ம உலகின் சாரமாக விடுதலை நோக்கிய சக்தி உணர்வுபூர்வமாக இயக்கம் கொள்கிறது. எனவே வரலாறு என்பது ஆன்மத்தின் விடுதலை நோக்கிய நகர்வு (History is the movement of the sprit towards freedom) என்கிறார் “ஹெகல்” அவர்கள். காலச் சுழற்சியில் உருவாகும் புதிய நாகரிகங்கள், புதிய பண்பாட்டு உலகங்கள் விடுதலை குறித்த பிரக்ஞையை, விழிப்புணர்வை மனித சமுதாயத்திடம் விதைத்தது. வேதங்களாக, தத்துவங்களாக, கலை இலக்கிய வடிவங்களாக, சமூகச் சிந்தனைக-ளாக, அரசியற் கோட்பாடுகளாக காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டுக் கோலங்கள் விடுதலையின் விழிப்புணர்வை விரிவுபடுத்தியது. போர், புரட்சி, கிளர்ச்சி என்று மனிதர்கள் விடுதலை வேண்டி எழுச்சி கொண்டனர். இவ்விதம் விடுதலையின் தேடுதலாக மனித வரலாறு நகர்கிறது. இந்த வரலாற்று நகர்வு, யுகங்களை விழுங்கிய நீண்ட பயணமாகத் தொடர்கிறது. இந்தப் பெரும் பயணத்தில் முடிவில்லாது தொடரும் இந்த ஆன்மீக யாத்திரை-யில் கோடான கோடி மனிதர்களின், கோடானு கோடி சுயசரிதச் சுவடுகளை உள்வாங்கி வரலாற்று இயக்கம் அசைந்து செல்கிறது. (விடுதலை, பக்கம் 109).

வரலாறு காலங்களை மகிழ்வும், சோகமும், துன்பமும், துயரமும் கொண்டதாகவே எழுதி நிற்கிறது. எனவே இப் பூமியில் துன்பியல் நாடகமாக அரங்கேறும் மானுட வரலாறு குருதியைச் சிந்தி சோகச் சிலுவையை சுமந்தபடியே பயணிக்கின்றது என்பார் “ஹெகல்”. அவ்வாறான வரலாற்றுப் பாதையில் அபூர்வமாகத் தேர்வுக்குள்ளாகும் சிலர் வரலாற்று நாயகர்களாகத் தோற்றம் பெறுகின்றனர். அவர்களுக்கூடாக வரலாறானது தனது குறிக்கோள்களை நிறைவேற்றி விடுகிறது. அவ்வாறானவர்களே “மகா அலெக்சாண்டர்” முதல் “நெப்போலியன்” வரையிலானவர்கள் என்றும் இவர்களுக் கூடாக வரலாறு தனது முன்னோக்கிய பயணத்தை நிகழ்த்துமாறு வரலாறு விதி செய்திருக்கிறது என்றும் கூறியுள்ளார் “ஹெகல்” அவர்கள்.

“ஹெகல்” உருவாக்கிய தத்துவார்த்தக் கருத்தியலின் மையம் “இயங்கியல்” (Dialectics) என்பதாகும். இந்த “இயங்கியல்” தத்துவத்தின் அடிப்படையிலே மனவுலகம், பொருளுலகம், உலக வரலாற்று இயக்கம் ஆகிய மூன்றினையும் “ஹெகல்” விளக்க முனைந்தார். இந்த உலகம் எப்போதுமே இயங்கிக் கொண்டிருக்கிறது. கட்டவிழ்ந்து கொண்டிருக்கிறது. காட்சி மாற்றம் பெற்றுக் கொண்டிருக்கிறது. அக உலகம், புறஉலகம் எல்லாமே பெயர்ச்சிக்கு உள்ளாகாத கணமே இல்லை. அந்த நகர்வில் புத்தெழுச்சி கொண்டு எகிறிப் பாய்கிறது வரலாற்று இயக்கம். இவ் வரலாற்று இயக்க சக்தியால் அணுவிலிருந்து அண்ட சராசரங்கள் ஈறாக அனைத்தும் புரட்டப்படுகிறது. காலம், வாழ்வு, இருப்பு, வரலாறு எனக் ஹெகலினால் இயக்கமாக வரையறுக்கப்படும் இத்தொடர் இயக்கச் சக்தி மனித மனம், சமூகம், இயற்கை என்ற ரீதியில் அனைத்தையும் வளர்ச்சிப் போக்கில் இட்டுச் செல்லும் என்ற கருத்தியலினாலான அடிப்படை விதிகளைக் கொண்டு கட்டமைக் கப்பட்டுள்ளது “ஹெகல்” அவர்களால். இதன் மூலம் வரலாற்றில் முதன்முதலாக இயங்கியல் விதிகளை நெறிப்படுத்திய தத்துவாசிரியனாக “ஹெகல்” திகழ்கின்றார்.

“இந்த இயங்கியல் விதிகளில் அடிப்படையானது முரணியமாகும் (Contradiction). எந்தப் பொருளுக்கும் ஒரு தன்னியக்கம் இருக்கிறது. உள்ளீட்டான சுய இயக்கம் இருக்கிறது. இந்த சுய இயக்கம் முரணியத் தன்மையைக் கொண்டது. அதாவது ஒன்றுக்கொன்று மாறான, முரணான எதிர்வுத் தன்மைகளைக் (Oposite Tendencies) கொண்டது. ஒரு பொருளில் இந்த எதிர்வுத் தன்மைகள் ஒன்றித்திருக்கும் நிலையை எதிர்வுகளின் ஒன்றியம் என்கிறார் ‘ஹெகல்.” (விடுதலை, பக்கம்-113) “இந்த எதிர்வுச் சக்திகள் ஒன்றித்திருந்து அதே சமயம் ஒன்றோடொன்று முரண்பட்டு நிகழ்த்தும் பிணக்காகப், போராட்டமாக அந்தப் பொருளின் வாழ்வியக்கம் அசைகிறது. இந்த முரண்பாடு முற்றி வெடிக்கும் பொழுது மாற்றம் நிகழ்கிறது. புதியது பிறக்கிறது. எனவே எந்தப் பொருளினது இயக்கத்திற்கும், மாற்றத்திற்கும், புத்தாக்கத்திற்கும், புதிய வளர்ச்சிப் போக்கிற்கும் அந்தப் பொருளில் உள்ளீடாக அதன் உள்ளியக்கமாகச் செயற்படும் முரணியமே காரணியாக அமைகிறது. சிந்தனை உலகிலும் சரி, சமூக உலகிலும் சரி, இயற்கையின் சகல பொருட்களிலும் சரி, தோற்றம், மாற்றம், முன்னேற்றம் என்பன புற சக்திகளால் தூண்டப்படுவதல்ல. அது உள்ளீட்டாக, உள் முரண்பாடுகளின் உந்துலால் நிகழ்கிறது.” (விடுதலை, பக்கம்-113) இயங்கியலின் அடிப்படையிலேயே மனித மனம் புறநிலை வளர்ச்சி காண்கிறது என்கிறார் “ஹெகல்”. இங்கும் முரணியக்கம் முக்கிய இடம் பெறுகிறது. முரண்பாடான சிந்தனைகள் தோன்றி அவற்றின் தீர்வாகப் புதிய சிந்தனைகள் பிறக்கிறது. காலப்போக்கில் அந்த புதிய சிந்தனையிலும் மேலும் புதிய வகை முரண்பாடுகள் எழுந்து அது களையப் பெறும்போது மேலும் செழுமை பெற்ற சிந்தனையாக வளர்ச்சியுறுகிறது. இவ்விதம் ஒரு முடிவில்லா முரணியக்கச் சுழற்சியில் மனித மனமானது பரிணாம வளர்ச்சி கண்டு உயர்சி பெறுகிறது. மனித அறிவு முன்னோக்கிப் பாய்ந்து செல்ல முனைகிறது. (இன்னும் வரும்)




நடராஜா முரளிதரன்

**RESTAURANT FOR SALE**

Brand New Bar & Grill restaurant for sale.

Over 30 seats. LLBO. **MIDDLEFIELD & FINCH**

For more info. call: 416.677.4707



**யோகா சோதிடம்**

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# தோமஸ் யங்கின் இருதுளைப் பரிசோதனை

## நுண்ணுலகியல் 10

குவாண்ரம் பிறந்த கதை

'தோமஸ் யங்' ஒளி அலை வடிவில்தான் செல்கிறது என்பதனை மிகவும் நுணுக்கமான பரிசோதனை ஒன்றின் மூலமாக எடுத்துக் காட்டினார். ஒருநிற ஒளிமுதலில் இருந்து வெளிவரும் வெளிச்சத்தை ஒரு சிறிய துளையின் ஊடாகப் போக விட்டார். அவ்விதம் துளையின் ஊடாக வெளிவந்த வெளிச்சத்தை மீண்டும் அருகருகே சமாந்தரமாக இருந்த மிகச் சிறிய இரண்டு துளைகளின் ஊடாகப் போக விட்டு, மறுபுறத்தில் ஒரு திரையை வைத்தார். அத்திரையில் ஒளிர்வான பட்டைகள் மாறி-மாறித் தோன்றின. இதுதான் 'யங்' செய்த பரிசோதனை. மிகவும் எளிமையான பரிசோதனை, ஆனால் பெரிய மாற்றத்தை ஒளியின் செலுத்துகையில் ஏற்படுத்தி யிருந்தது. இது ஒளியானது அலை வடிவிலானது என்பதற்கு உறுதியான பரிசோதனை விளக்கமாகியது. இதற்கான விளக்கத்தினை அலைகளின் இயல்பில் இருந்து யங் கொடுத்தார்.

இரண்டு சிறிய சமாந்தர துளைகளும் அருகருகான இரு ஒளிமுதல்களாகத் தொழிற்பட்டன. இவற்றில் இருந்து ஒரே மாதிரியான இரு ஒளியலைகள் வருகின்றன. அவ்விரு ஒளியலைகளும் அலைகளின் மேற்பொருந்துகைத் தத்துவத்திற்கமைய, ஆக்கும் தலையீடுகளையும் அழிக்கும் தலையீடுகளையும் திரையில் உண்டாக்கின., ஆக்கும் தலையீடுகள் ஒளிர்வான பட்டைக-ளைக் கொடுத்தன. அழிக்கும் தலையீடுகள் ஒளிர்வை இல்லாது செய்தன. இந்த நிகழ்வுகள் மாறிமாறி நிகழ: திரையில் பட்டைகளாக வெளிச்சக் கோடுகளும் மாறி மாறித் தோன்றின. இதுவே திரையில் தோன்றிய பட்டைகளுக்கு 'யங்' கொடுத்த விளக்கமாகும்.

இந்த அற்புதமான பரிசோதனை ஒளி அலைவடிவில் செல்கின்றது என்பதனை நிரூபிக்க, நியூட்டனின் துணிக்கைக் கொள்கையானது கைவிடப்பட்டது. வேறுவழி யின்றி அதுசரி, அது என்ன மேற்பொருந் துகை, ஆக்கும், அழிக்கும் தலையீடுகள் என்கின்றீர்களா? அவற்றின் பெயர்களே விளக்கத்தினைக் கொடுத்திருக்கும். ஆனாலும் மெதுவாக நானும் அந்த விளக்கத்தினைத் தருகின்றேன்.

### ஒளியின் மேற்பொருந்துகையும் ஆக்கும், அழிக்கும் தலையீடுகளும்

முதலில் மேற்பொருந்துகை. பெயருக்கு ஏற்ப, இரண்டோ அல்லது அதற்கும் மேற்பட்ட அலைகளோ ஒன்றுடன் ஒன்று ஒரே நேரத்தில் சேர்வது. அலைகளின் சிறப்பியல்பு களில் மேற்பொருந்துகையும் ஒன்றாகும். அலைகள் அதிர்வுகளினால் உண்டாகிச் செல்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும். அவ்விதம் இரண்டோ அல்லது அதற்கும் மேற்பட்ட அலைகளோ ஒருபுள்ளியில் சந்திக்கும் போது எல்லா அதிர்வுகளினதும் மொத்த விளைவான அதிர்வை அப்புள்ளி காட்டும். இதனைத்தான் அலைகளின் மேற் பொருந்துகை என்கின்றார்கள். அவ்வளவுதான்.

இனி, இப்படியாக ஒரே மாதிரியான இரண்டு அலைகள் ஒருபுள்ளியில் சந்திக்கும்போது அதிர்வுகள் ஒரே பக்கமாக (திசையில்) இருப்பின் இரண்டு அதிர்வுகளும் சேர்ந்து ஒரு பெரிய அதிர்வைக் கொடுக்கும். அதனால் அவ்விடத்தில் பெரிய அலை ஒன்று இருப்பது போல இருக்கும். இதனையே ஆக்கும் தலையீடு என்கிறார்கள். 'யங்' கின் பரிசோதனையில், ஒளிர்வான பட்டை, ஆக்கும் தலையீடு ஆகும்.

மறுதலையாக, இரண்டு அலைகளினதும் அதிர்வுகள் எதிரெதிர் பக்கமாக (திசைக-ளில்) இருப்பின், என்ன நிகழும் எனப் பாருங்கள். அவையிரண்டும் ஒரேமாதிரியான அலைகள், அப்புள்ளி ஒரே நேரத்தில் எதிர் எதிர் பக்கமாக அதிர முற்படும். அதனால் அப்புள்ளியில் அதிர்வு இல்லாதது போல வந்துவிடும். ஆக, அப்புள்ளியில் அலைகள் ஒன்றை ஒன்று அழிப்பது போல இருக்க, அதனை அழிக்கும் தலையீடு என்பார்கள். 'யங்'கின் பரிசோதனையில் ஒவ்வொரு ஒளிர்வான பட்டையையும் அடுத்து இருக்கும் இருண்ட அல்லது ஒளிர்வில்லாத இடங்கள் அழிக்கும் தலையீட்டு விளைவுகளாகும்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 39ஆம் பக்கம்

இந்த ஆக்கும், அழிக்கும் தலையீடுகள் மாறி

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 89**

HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS



Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com

"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"
Buy. Sell. Invest



Celebration
CONDOMINIUMS AT BRIDLEWOOD MALL
With convenience of living steps to Bridlewood Mall, TTC at your door step to, Celebration is the place to be.

REGISTER TODAY FOR VIP PRICING AND MORE...

1 BED, 1+DEN
2 BEDS, 2+DEN
AND 3 BEDS

Starting from $185,900 with parking call us for more details.

MORE LISTING @WWW.SIVAHOMES.COM

1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3 Bus:(416)321-6969
*Independently Owned and Operated
*Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# ஓ.மு - ஓ.பி

வைகாசி முதல் வாரம் கனடிய மக்கள் தேர்தலை நோக்கிக் கொண்டிருந்தார்கள். அதிர்ச்சி அலைகள் ஒவ்வொரு நிமிடமும் மோதிக் கொண்டிருந்தன. வெள்ளிக்கிழமை இங்கிலாந்து இளவரசனின் திருமணம். திங்கள் அதிகாலை ஒசாமா பின் லாடன், ஒபாமாவின் படைகளால் கொல்லப்பட்டார் என்ற செய்தி வெளிவருகின்றது. அதே நாள் நள்ளிரவைத் தொடும் பொழுது தேசிய ஜனநாயகக் கட்சி கனடாவின் புதிய எதிர்க் கட்சியாக இடம் பிடிக்கின்றது. முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக முப்பதையே தொடாத ராதிகா சிற்சபைஈசன் தெரிவு செய்யப்படுகின்றார். கியுபெக் நீண்ட காலத்தின் பின் பிரிவினை வாதக் கட்சி 4 வீதமான இடங்களைப் பெற்று கடைசி நிலைக்கு தள்ளப்படுகின்றது. இடது சாரிக் கட்சியான புதிய ஜனநாயக் கட்சி 83 வீதமான இடங்களைப் பெறுகின்றது. இந்த மாற்றத்திற்கான காரணம் என்ன? உலக மாற்றங்களை கியுபெக் மக்கள் உள்வாங்கியதாலா? பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம். தேர்தல் அலைகள் சில நாட்களில் மறைந்து விட்டது. ஆனால் பின் லாடனின் மறைவு பல கேள்விகளை ஒவ்வொரு நாளும் எழுப்புகின்றது. இங்கு ஒசாமாவுக்கு முன்னும் பின்னும் உள்ள விடயங்களை விரிவாக பார்ப்பது நல்லது.

மத்திய கிழக்கில் ஒவ்வொரு நாளும் மக்கள் கிளர்ச்சிகள் வளர்ந்து வருகின்றன. எகிப்தில் மதப் பிரச்சினையை இராணுவமும் அமெரிக்காவும் தூண்டிவிட்டுள்ளது. ஆப்கானில் நேட்டோ படைகள் தோல்வியை நோக்கி நகருகின்றார்கள். பல அமெரிக்க ஊடகங்கள் கேள்வி எழுப்புகின்றன. லிப-ியாவில் எதிர்பார்த்ததைப் போல் நேட்டோவால் வெற்றி பெறமுடியவில்லை. ஈராக்கிலும் எதிர்ப்பலைகளை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றார்கள். அமெரிக்காவில் பொருளாதார பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றது. ஏதாவது செய்ய வேண்டும். செய்தார்கள். ஒசாமா பின் லாடன் கொல்லப்பட்டார். இவர் சில வருடங்களுக்கு முன் இறந்து விட்டதாக கூட செய்திகள் வந்தன. இன்றுவரை இவரைக் காட்டவில்லை. அவரது உடலும் கடலில் எறியப்பட்டு விட்டது. ஒசாமா இன்றைய 'முஸ்லீம் சகோதரத்துவம்'த்தின் ஆளுமை மிக்கவரா? ஜோன் மில்லர் முன்னாள் என்.பி.சி ஊடகவியலாளர் 'வயது முதிர்ந்த மாமா கதை கூறுவது போல் இவரது கதை உள்ளது' என்கின்றார். ("When he looked me in the eyes to answer my questions, he sounded like an old uncle telling a story." - John Miller, former ABC News reporter) இது அவரது ஆளுமையின்மைக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாமா? பாகிஸ்தானிய-ஆப்கானிய உளவுபிரிவினரின் கருத்துப்படி 2009ம் ஆண்டிலேயே இவர் இருக்கும் இடம் அமெரிக்காவிற்கு கூறப்பட்டது என்கின்றார்கள். அப்படியாயின் ஏன் இவ்வளவு காலம்? ஒசாமா சுட்டுக் கொல்லப்பட்ட முறை ஒன்றை தெளிவாக விளக்குகின்றது. ஒசாமா தரப்பில் இருந்து பெரிய எதிர்த் தாக்குதல் எதுவும் இடம் பெறவில்லை என்பது. இது தனது இறைமையையும் தலைமையையும் காத்துக் கொள்ள ஏற்படுத்தப்பட்ட ஒரு முயற்சியாகவே கருத வேண்டும். இலகுவான தாக்குதல், பெரிய பெயர். ஒரு தனிமன-தனைக் கொலை செய்வதன் மூலம் ஒரு மிகப் பெரிய முஸ்லீம் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த முடியுமா? முழுமையான SYS-TEM ஐ இல்லாமல் செய்யும் வரை இது சாத்தியமல்ல என பல அமெரிக்க ஊடகங்களே சுட்டிக் காட்டுகின்றன.



பங்குனி 10, 1957ல் ரியாத்தில் பிறந்தார். இவரது முழுப் பெயர் Osama bin Mohammed bin Awad bin Laden என்பதாகும். 1979ல் பல்கலைக் கழகத்தில் இருந்து பாகிஸ்தான் சென்று சோவியத் யூனியனை ஆப்கானில் இருந்து விரட்ட முயற்சிக்கும் படைகளுடன் இணைகின்றார். அங்கிருந்து இவரது அரசியல் வாழ்வு ஆரம்பமாகின்றது. இவருக்கான பயிற்சிகளை அளித்தவர்கள் அமெரிக்க சி.ஐ.ஏ யினர். 1985ல் றீகன் முஸ்லீம் தீவிரவாதிகளை வெள்ளை மாளிகையில் சந்திக்கின்றார். றீகன் நிர்வாகம் நிபந்தனையற்ற ஆதரவை முஸ்லீம் தீவிரவாதிகளுக்கு வழங்குகின்றது. தலிபான் என்பதன் அர்த்தம் 'மாணவர்கள்' ஆகும். இது முஸ்லீம் குர் ஆனை மையமாகவைத்த மதக் கல்விகற்கும் மாணவர்களுக்கும் பொருந்தும். அமெரிக்கா ஆப்கானில் மதக் கல்விக்கு நிதி உதவி-களை வழங்கியது. ஜிம்மி கார்ட்டரின் காலத்தில் 43 முஸ்லீம் நாடுகளைச் சேர்ந்த 40,000 பேருக்கு அமெரிக்கா பாகிஸ்தானின் (ISI) யின் உதவியுடன் பயிற்சி வழங்கியது. இந்த முஸ்லீம் தீவிரவாதிகளே ஆப்கானில் சோவியத்துக்கு எதிராக சண்டையிட்டவர்கள். சவூதி மதக் கல்விக்கு உதவியை வழங்கியது. ஒசாமாவின் குடும்பமே இந்த நிதிகளை பராமரித்தது. சோவியத் யூனியனை வெளியேற்றுவதற்காக முஸ்லீம் தீவிரவாதிகளை உருவாக்கியதே அமெரிக்கா தான். இதற்கு பாகிஸ்தானின் உளவுப் பிரிவு உதவிகள் செய்தது. ஒரு சிறு தலைமையகமே பாகிஸ்தானில் இயங்கியது.

செப்ரம்பர் 11 தாக்குதலை அல்-கைடா இன்றுவரை மறுத்து வருகின்றது. அதேசமயம் இத் தாக்குதல் முன்னாள் அமெரிக்க உதவி அதிபர் செய்னிக்கு முன் கூட்டியே தெரியும் என ஊடகங்கள் வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்தியுள்ளன. இத் தாக்குதல் அமெரிக்காவிற்கு ஆப்கான் மீதும், ஈராக் மீதும் ஆக்கிரமிக்க உதவி செய்தது. மத்திய கிழக்கு நாடுகளின் மீது இலகுவாக ஆதிக்கம் செலுத்த இது உதவி செய்தது. ஆயுத விற்பனையும் அதிகரித்தது.

ஆப்கான் போர் மூன்று பிரிவுகளாக நடை-பெற்றது. முதலாது பிரிவில் சோவியத் படை-களை ஆப்கானில் இருந்து வெளியேற்ற வேண்டும். இதற்கு அமெரிக்கா மேற்கூறப்பட்ட முறைகளை கையாண்டது. முஸ்லீம் தீவரவாதத்தை வளர்த்தது. 1989ல் சோவியத் வெளியேற்றத்தின் பின்னர் 2002 வரையிலான காலப்பகுதியில் பாகிஸ்தானின் உதவியுடன் ஆப்கானையும் மத்திய கிழக்கையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சி செய்தது. 1996ல் தலிபானின் கட்டுப்பாட்டுக்குள் ஆப்கான் வந்தது. அமெரிக்க படைகளுக்கு எதிராக அல்-கைடா தாக்குதல்களை நடத்தியது. இது தலிபானுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. செப்ரெம்பர் 11, 2001க்குப் பிறகு அமெரிக்கா தலிபான், அல்-கைடா இரண்டு அமைப்புக்களையும் அழிக்க முடிவு செய்தது.

புஷ் நிர்வாகத்தில் தலிபானுக்கு எதிராக உக்கிர தாக்குதல்களை தவிர்த்தது. அல்-கைடா அமைப்பை குழப்ப முற்பட்டது. மிக முக்கிய ஆப்கானில் நிர்வாகம் ஒன்றை உருவாக்கியது. இது முறையானதோ சீராக செயல்படுகின்றதோ என்பது அமெரிக்காவிற்கு முக்கியமல்ல ஒரு அரசு அடையாளத்திற்கு அமெரிக்காவிற்கு தேவை. புஷ் நிர்வாகம் இதனையே ஆப்கானில் செய்தது.

ஒபாமா நிர்வாகம் முஸ்லீம் தீவிரவாதிகளை ஆப்கானுக்குள் நுழையவிடாமல் தடுக்க முயற்சித்து வருகின்றது. ஆப்கானிலும், ஈராக்கிலும் படைகளின் எண்ணிக்கையை அதிகரித்து வெற்றியுடன் வெளியேறுவதையே ஒபாமா நிர்வாகம் விரும்புகின்றது. இதன் ஒரு செயல்பாடாகவே ஒசாமாவின் கொலை.

ஒசாமாவின் இறப்பில் யார் வெற்றி பெற்றார்கள், யார் தோல்வியடைந்தார்கள்?

மத்திய கிழக்கு மக்களுக்கு முன்னால் எகிப்திய முதல்வர் நாசா:. யாசீர் அரபாத் வரிசையில் சதாம் ஹெ செயினும் இடம் பெறுகின்றனர். அவ் வரிசையில் ஒசாமாவும் இடம் சதாம் போன்ற தோல்வியுற்ற தலைவர்களை கொன்றதன் மூலம் அவர்களை உதாரண புருஷர்களாக அமெரிக்கா மாற்றியுள்ளது. இது முஸ்லீம் தீவிரவாதம் மேலும் வளர உதவி செய்யும். ஈரான் மகிழ்ச்சியடையும். சியா முஸ்லீம்களுக்கு எதிரானவர் இறந்து விட்டார் என்பதனால். ஆனால் ஈரானின் முதல் எதிரி அமெரிக்காவின் புன்னகையை ஈரான் விரும்பாது.

ஒபாமா வுக்கு தேர்தல் வெற்றி. ஒபாமா ஆட்சிக்கு வந்த பின்னர் தன்னை ஒரு காந்தியாகவே காட்டிக் கொண்டார். அமெரிக்கர் ஒரு வெற்றி வீரரையே விரும்புகின்றார்கள். ஒசாமாவின் மரணம், ஒபாமாவிற்கு வெற்றிப் புன்னகையை கொடுத்துள்ளது. பயங்கரவாதம் என்ற சொல்லே அமெரிக்காவில் ஒற்றுமையையும் தேசப்பற்றையும் வளர்க்க உதவி செய்யும் ஒரு கருவியாகவுள்ளது. ஒசாமாவின் இறப்பு அமெரிக்காவின் மிகப் பெரிய வெற்றியாக கொண்டாடப்படுகின்றது.

மற்றொரு புறம் சவூதிக்கு தன் பேச்சைக் கேட்காதவர் என்ற விதத்தில் வெற்றி மத்திய கிழக்கு நாடுகளில் ஒசாமா ஒரு உதாரண புருஷர். குறிப்பாக ஹமாஸ் போன்ற அமைப்புக்களுக்கு இவர் இல்லாதது ஒரு அடையாளம் தோல்வியே.

பாகிஸ்தானுக்கு தோல்வி. ஒசாமா பின் லாடன் கொலை செய்யப்பட்ட போது பாகிஸ்தானுக்கு அறிவிக்கப்படவில்லை. ஒரு நாட்டின் இறைமையை அவமதிக்கும் செயல் இதுவென ஒசாமா ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இதற்கான காரணம் பாகிஸ்தானிய தளபதிகளே இன்று அமெரிக்காவிற்கு தலையிடி. பாகிஸ்தானிய பாதுகாப்பு அமைச்சரே இராணுவ தலைமையகத்திற்குள் செல்ல முடியாத நிலைமை அங்கு. ஒரு காலத்தில் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலை நாட்ட உதவி செய்த பாகிஸ்தான் இன்று அழிக்கப்பட வேண்டியவர்கள் உள்ள நாடுகளின் பட்டியலில் முக்கிய இடத்தில் உள்ளது. பாகிஸ்தானின் இராணுவமே இதற்கான பிரதான காரணம். பாகிஸ்தானில் அரசுக்கும், இராணுவத்திற்குமிடையில் ஒரு பனிப்போரே நிகழ்கின்றது. வெகு விரைவில் மீண்டும் ஒரு இராணுவ ஆட்சியை எதிர்பார்க்கலாம்.

**- ரதன் -**

அல் கைடாவில் இன்னமும் பல தீவிர தலைவர்கள் உயிருடன் உள்ளனர். இவர்கள் தான் கடந்த சில வருடங்களாக அமைப்பை வழி நடத்துபவர்கள். Ayman al-Zawahiri கண் வைத்தியர். மருத்துவத்தில் உயர் கல்வி கற்றவர். செப்ரம்பர் 11ன் சூத்திரதாரி. தற்காலிக தலைவர். மற்றையவர்கள். Abu Yahya al-Libi, Khalid al-Habib, Adnan Gulshair el Shukrijumah (15 வருடங்களுக்கு மேல் அமெரிக்காவில் வாழ்ந்த இளைஞர்) Atiyah Abd al-Rahman லிபியன், Saif al-Adel எகிப்தியர் Adam Gadahn, a US citizen, மற்றொரு அமெரிக்கன் Awlaki, Abou Mossab Abdelwadoud குண்டு தயாரிப்பு நிபுணர். இவர்களை விட பல ஆயிரக்கணக்கானோர் இவ் அமைப்பில் உள்ளனர். இவர்கள் உலகெங்கும் பரந்து உள்ளனர். இன்று அல் கைடாவின் நோக்கம் தாக்கம் ஒரு குண்டு ஒரு மனிதன் என்பது. இது மிகப் பயங்கரமானது. இதை உலகம் எதிர் கொள்ளுமா? தற்காலிக வெற்றிகளுக்காக செய்யப்பட்ட தனி மனித கொலை அல் கைடாவின் தீவிரத்தை அதிகரிக்கவே வழிவகுத்துள்ளது. Today al-Qaeda's philosophy is one man, one bomb.

இன்று முஸ்லீம் தீவிரவாதம் பெரிய

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

# சிறீ சத்யசாயி பாபா 21 ஆம் நூற்றாண்டின் ஆன்மீகத் தலைவர்

## மின்வலையில் வந்தவை - 15

சாயிபாபா என்ற பெயர் ஏறக்குறைய 150 நாடுகளிலுள்ள கிட்டத்தட்ட மூன்று மில்லியன் மக்கள் வீடுகளில் அடிக்கடி உச்சரிக்கப்படும் ஒரு பெயராகும். இந்துக்கள் மட்டுமன்றி பிற மதத்தவர்களும் போற்றும் மகானாக ஒரு இலட்சியவாதியாக, சமயவாதியாக, சமூகவாதியாகப் பல்வேறு பரிமாணங்களில் தனியொரு மனிதனாகப் பல செயற்கரிய செயல்களைச் செய்து மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார். இவரது பூர்வீக வரலாறு, செய்த பல்வேறு அற்புதங்கள், விசேட நிகழ்வுகள், விசேட சக்திகள் பற்றிய நூல்கள் ஏராளம், பல்வேறு நாட்டினரால் எழுதப்பட்டுள்ளன. இதைத்தவிர இவரோடு என்றும் விசுவாசமான அடியாராகத் தொண்டராகத் திரிந்த திரு. கஸ்தூரி என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய சுவாமியின் போதனைகள் யாவும், பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகெங்கும் வெளியிடப்பட்டுள்ளன. நவீன உலகில் ஏராளமான பக்தர்களைத் தனது இருப்பிடத்துக்கு ஈர்த்த பெருமை இவரையே சாரும்.

**- துறையூரான் -**

இவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த நாமெல்லாம் பெரும்பேறு பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை. இவர் ஒரு வரலாற்று நாயகன். இவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இவரால் ஆரம்பிக்கப்பட்ட பிரமிக்கத்தக்க பல்வேறு திட்டங்களான: நவீன வசதிகள் கொண்ட வைத்தியசாலை, பல்கலைக்கழகம், பல்வேறு நகரங்களிலுள்ள பாடசாலைகள், வழிபாட்டு நிலையங்கள், நீர் விநியோகத் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்கள் ஆகிய இன்னோரன்ன பலவும் இவரது புகழைப் பறைசாற்றும் வண்ணம் என்றும் நிலைத்திருக்குமென்பதில் ஐயமில்லை. குறிப்பாக ஏழைமக்களுக்கு இவர் ஆற்றிய பணி வியக்கத்தக்கது. இவ்வாறு தனது வாழ்நாள் முழுவதும் மக்களின் நலனுக்காகவும் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும், இரவு பகலென்று பாராது உழைத்த ஒரு அவதார புருஷர் பற்றி பல அவதூறுகளும் எழுப்பப்பட்டதில் ஆச்சரியமில்லை. 'பழுத்தமரம் கல்லெறி வாங்கும்' என்ற முதுமொழிக் கேற்பச் சமூக வாழ்வில் ஈடுபடுவோருக்கு இவ்வாறான கெட்ட பெயர் ஏற்படுவது இயற்கை. இவரைப் பற்றிக் குறை கூறியவர்கள் இவர்மீது ஏற்பட்ட பொறாமையினாலும் அபகீர்த்தி ஏற்படுத்த வேண்டுமென்ற ஆவலுடைய சில குழுக்களின் தூண்டுதலாலும் அவ்வாறு நடந்து கொண்டார்கள் என அறியப்படுகிறது.

எது எப்படி இருந்தாலும் ஒரு அரசாங்கமே செய்யமுடியாத பல செயற்கரிய செயல்களைப் பகவான் சத்யசாயிபாபா செய்தார் என்பது ஆச்சரியமானதே. இருந்த இடத்தில் இருந்து கொண்டே நிதி தாருங்கள் என்று கேட்காமலே, உலகின் பல நாடுகளிலிருந்து பணம் புட்டப்பர்த்தியில் வந்து குவிகின்றது என்றால் அது ஒரு வியப்பான விடயமே. சுவாமியைப்பற்றி பல்வேறு பத்திரிகைகளில் ஏராளமான தகவல்கள் ஏற்கெனவே வெளியாகி இருக்கும் நிலையில், மின்தபாலில் வந்த ஒரு கடிதம் பற்றி இங்கு வாசகர்களுக்கு விபரிக்க விரும்புகிறேன்.




சுவாமி இப் பூவுலகைவிட்டு நீங்கு முன்னர் மார்ச் 20ஆம் திகதியன்று தரிசனத்தின் முடிவில் அங்கு கூடியிருந்த பக்தர்களைப் பார்த்து இருகரம் கூப்பி வணங்கினார். வழக்கமாகப் பக்தர்களை அபயகரம் காட்டி ஆசி கூறிய அவர் அன்று வணக்கம் கூறி விடை பெற்றதைப் பலரும் விளங்காமல் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அவ்வாறான அப்படத்தை எடுத்த அவரின் மாணவரும் பிரசாந்தி நிலைய சாயி வானொலி நிலையத்தில் வேலை செய்பவரும், சுவாமியின் நிகழ்வுகளை வீடியோவிலும் பதிவு செய்பவரான அரவிந்து என்பவரின் விளக்கம் கீழே தரப்படுகிறது.

"கடந்த 27 ஆம் நாள் ஏப்ரல் மாதம் நடைபெற்ற மனதை உருக்கும் காட்சிகள் உலகில் ஒருபோதும் நடைபெறவில்லை. ஒரு அவதாரத்தின் மகாசமாதி அன்று நடைபெற்ற போது, மனித வரலாற்றில் இதுவரை இடம்பெறாத அளவு மக்கள் கண்ணீர் மல்க அக்காட்சிகளைக்கண்டனர். அத்தருணத்தில் அவற்றைப் பார்த்தவர்களுக்குத் தீய சக்திகளைக் கழுவிய ஒரு அனுபவம் ஏற்பட்டிருக்கும். அன்று சிந்தியவை அன்பினாலும், நன்றியுணர்வினாலும் தானாகவே சிந்தப்பட்ட தூய கண்ணீர்த்துளிகளாகும். மனிதர் யாவராலும் செய்த பாவங்களைக் கழுவுவதற்கு அத்துளிகள் போதுமானவை. பகவான் சாயி பாபாவின் மகாசமாதி பற்றி நிறையவே எழுதப் பட்டுள்ளன. இனிமேலும் எழுதப்படலாம். என்னுடைய எண்ணத்தையும் இங்கு உங்களோடு பகிர்ந்து கொள்ளலாமென நினைக்கிறேன்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் நிகழ்த்தப்பட்ட பிரார்த்தனைகள் பிரமிக்கத்தக்கவை. சாயியின் நாமம் பில்லியன் கணக்கான மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்துள்ளது. இப்பூமித்தாயின் மடியில், இதுவரைக்கும் காணாத அளவு பஜனைகள், பிரார்த்தனைகள், ஆன்மீக போதனைகள் இடம்பெற்றன. பௌதீக வாழ்வில் சிறப்பான மனிதரும், சிறப்பான இயந்திரங்களும், அவரமைத்த நோயகற்றும் ஆலயத்தில் இரவு பகலாக ஓய்வின்றிப் பணியாற்றின. அவரது பேராதரவுக்குப் பாத்திரமான மாணவர்கள் அருகே அமர்ந்திருந்து அவரது ஒவ்வொரு மூச்சையும் அவதானித்துக் கொண்டிருந்தனர். அவரது ஒவ்வொரு பக்தனும் எடுத்த சிரத்தையே ஒன்று சேர்த்தால் ஒரு கல்லையே உயிர்ப்பிக்கும் மாற்றலாய் மாறியிருக்கும். எனினும் பகவான் மகாசமாதி நிலையையே தெரிவு செய்தார்.

இதிலிருந்து கடவுளுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கோ, சொல்லுவதற்கோ நாம் பிரார்த்தனையைப் பயன்படுத்த முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். அது அவரோடு நாம் அமைதியாகத் தொடர்பு கொள்ளும் வழி. நாம் அவருக்குச் சொல்லும்போது அல்லது கேட்கும் போது அவரைக் காட்டிலும் கூடத் தெரிந்தவர் போன்று எமது மடமையை வெளிக்காட்டிக் கொள்கிறோம். இங்கே சுவாமி அடிக்கடி கூறிய இரு விவசாயிகளின் கதை ஞாபகத்துக்கு வருகிறது. ஒருவர் தமது பயிர்களுக்கு மழை வேண்டுமெனப் பிரார்த்தித்திருந்தார். மற்றவர் தனது மகளின் விவாகத்தினத்தன்று மழைபெய்யக் கூடாதெனப் பிரார்த்தித்தார். இதில் யாருடைய பிரார்த்தனையைக் கடவுள் நிறைவேற்றுவது? கூட அழுபவரைக் கேட்பதா? கூடப் பிரார்த்திப்பவரைக் கேட்பதா? வயதுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா அல்லது ஒருவருடைய அந்தஸ்துக்கும் அதிகாரத்துக்கும் முக்கியத்துவம் கொடுப்பதா?

உண்மையில் அவர் தன்னை முழுமனதுடன் உண்மையாக நேசிப்பவனுக்கே முக்கியத்துவம் கொடுப்பார்? அப்படியானவர் யார்? கடவுளின் விருப்புக்கு தன்னை அர்ப்பணித்தவரே அவர். கடவுளின் விருப்பத்துக்கு ஒருவர் அர்ப்பணித்தால் பிரார்த்தனை தேவையற்று விடுகிறது. கடவுளோடு என்றும் தொடர்புள்ள ஒருவரது பிரார்த்தனையை நிறைவேற்றியதாலேயே அவருக்கு அந்நிலை ஏற்பட்டது என்பதை நாம் உணர்ந்தால் எமது பிரார்த்தனையின் வரைவிலக்கணமும் மாறும். இது ஒரு வித்தியாசமான எண்ணம். எனது பிரார்த்தனை நிறைவேறியது என்றால் நான் கடவுளோடு தொடர்பு கொண்டுள்ளேன் என்று பொருள்படும். எனது பிரார்த்தனைகளுக்கும் பதில் கிடைக்க வில்லை என்றால் நான் இன்னும் கடவுளோடு தொடர்பு கொள்ளவில்லை என்பது விளங்கவேண்டும். எனவே நாம் மேலும் முயற்சிகள் செய்து அந்நிலையை அடையவேண்டும்.

எமக்கு சில உள்ளார்ந்த ஆசைகள் அனுபவவாயிலாக உணரப்படுகின்றன. இவ்வாசைகள் பின்னர் வெளிப்படுகின்றன. இவை நாம் கடவுளோடு ஆத்மார்த்மாகத் தொடர்புகொண்டிருப்பதனால் ஏற்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான ஆசைகள் வெளிப்படும்போது நான் அவரது தொடர்பினால் அவரது அனுபவக் கிளர்ச்சியைப் பெற்றிருக்கிறேன். அப்போது அவரைக் கண்டும் கேட்கும் அனுபவித்திருக்கிறேன். அவர் என்னோடு பேசியிருக்கிறார். அவரது திட்டத்தை நான் அறிவேன். ஏனெனில் அவரது மனக்கிளர்ச்சியை நான் உணர்கிறேன். நான் அவரோடு தொடர்பு கொண்டிருப்பதால் அவரது திட்டத்தை நான் அறிவேன் பகவானின் தொடர்பு கிடைத்தற்கரியது.

இதனால் எனது வாழ்க்கையில் சில சம்பவங்கள் மூலம் சுவாமி தனது மகாசமாதியைக் குறிப்பாற் காட்டியபோது நான் பெரிதும் ஆறுதலடைந்தேன். இவையாவும் அவரது மகாதிட்டத்தின் ஒரு பகுதி என்பதை உணரும் போது ஆனந்தமாயிருக்கிறது. சில மாதங்களுக்கு முன் சுவாமி கனவில் தோன்றி மிக விரைவில் எம்மையெல்லாம் விட்டு விலகப்போவதைக் காட்டியிருந்தார். நரைமயிர் உள்ள ஒருவர் கறுப்பு மை தீட்டுவதைப்போலவும் பற்களை இழந்தவர் பொய்ப்பற்களைப் போட்டுக்கொள்வதைப் போன்றுமிருந்தது. மார்ச் 20 ஆம்நாள் இது நிகழ்ந்தது. சுவாமிக்கு அப்போது சுகமில்லை. இச்சொல்லைப் பாவிக்கலாமா என்பது தெரியவில்லை. அவரது தரிசனங்கள் குறைவாகவும் இடைவெளியுடையனவாகவும் இருந்தன. எனினும் அன்று இருதடவை தரிசனம் கொடுத்தார். அன்று ஆசீர்வாதத்துக்காகக் காத்திருந்த மாணவர் யாவரையும் அழைத்து அரிசியால் ஆசீர்வதித்தார். (ஏறக்குறைய 40 மாணவர்) சிலருக்கு இனிப்புக் கொடுத்து யாவரையும் பார்த்துப் புன்னகை பூத்தார். பாலர் வகுப்புச் சிறுவர் சிறுமியரை அழைத்து ஆசீர்வதித்தார். அங்கு பஜனை பாடும் மூத்தவர், 'சுவாமி இன்று அதீத பரவசத்தில் இருப்பது போல் தெரிகிறது' என்றார். எங்கும் ஒரே ஆனந்தம். ஆராத்தி காணப்பித்தபோது அவர் ராகத்துக்கேற்ப கைகளைத் தட்டிக்கொண்டிருந்தார். இதைப் பார்த்து யாவரும் மனக்கிளர்ச்சியடைந்தனர்.

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

# முதுமையும்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

அடங்குவர். மூளையில் உள்ள திசுக்கள் அழிவதால் இது ஏற்படுகிறது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அமெரிக்க மக்கள் இந்நோயால் இறந்து போகின்றனர். இது தவிர மெனின்ஜிட்டிஸ் (Meningitis) Hiv and Aids நோயாளிகள், ஹன்ரிங்ரன் (Huntington Chorea ) பாக்கின்சன் (Parkinson Disease) போன்ற பல நோய்களால் மூளைச் செயலிழப்பு (Dementia) ஏற்பட வாய்ப்புண்டு.

இரண்டாவது மூளைக்கோளாறு மூளைச்செயலிழப்பு (Delirium) ஆகும். இதன் கருத்து வழமைக்கு மாறாக மூளை செயல்படுவதாகும். மனதினை ஒருமுகப்படுத்தமுடியாமை, அமைதி யின்மை, நித்திரையின்மை, பயங்கர கனவுகள் ஏற்படல், துண்டுதுண்டாக சிந்தித்தல், மாயக்காட்சிகள் ஏற்படல் என்பவை நிகழ்கின்றன. இவர்கள் தங்கள் உடைகளை கிழிப்பார்கள். அத்துடன் பதட்டம் அல்லது தவிப்பு, உளச்சோர்வு, கோபம் என்பவை ஏற்படும். சொற்கள் தடுமாறும். இதயத்துடிப்பு கூடும், இரத்த அழுத்தம் ஏற்படும். இவற்றிற்கெல்லாம் காரணம் அவர்கள் பாவித்த மருந்துகளின் பக்கவிளைவு ஆகும். நீரிழிவு, தைரோயிட், நரம்பு கோளாறுகள், உணவு ஒழுங்கீனம் என்பனவும் காரணிகளாக வாய்ப்புண்டு. மூளைக்கோளாறுகள் தவிர உளவியல்



ரீதியிலும் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. 10 வீதத்தினர் மிகவும் கடுமையான உளவியல் பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர். இதில் முதன்மை வகிப்பது உளச்சோர்வு (Depression) ஆகும். இதிலும் ஆண்களை விட பெண்களே இச்சோர்வுக்கு கூடுதலாக உட்படுகின்றனர். கவலை, வெறுமை யுணர்வு, துக்கம், எதிர்பார்ப்பின்மை, களைப்பு, நித்திரையின்மை போன்ற பல நிகழ்வுகள் ஏற்படலாம். அத்துடன் எடைக்குறைவு, பொதுவான உடலியக்கப் பாதிப்பு, தற்கொலையுணர்வு ஏற்பட வாய்ப்புண்டு. ஞாபக இழப்பு இறுதியில் ஏற்படலாம். தற்போது இளையோர்களுக்கு கூட இந்நோய் ஏற்படுகிறது.

இரண்டாவது உளவியல் பிரச்சினை பதட்டம் அல்லது தவிப்பு (Anxiety) ஆகும். உளச்சோர்வினைவிட பதட்டமுள்ளவர்களே அதிகம். கவலை, நோய் என்பவற்றால் பதட்ட உணர்வு ஏற்படுகிறது. நரம்பியல் ரீதியில் இப்பாதிப்பு நிகழ்கின்றது. இந்நோயுள்ளவர்கள் தம்மை சமாளிக்க முடியாமல் போதைவஸ்துக்கும் அடிமையாகின்றனர். தொடர்ச்சியாக கிலி, பயம், பீதி போன்ற தன்மைகள் ஏற்படலாம். பல்வேறு நிகழாத சம்பவங்கள் நிகழப்போவதாக பயப்படுவார்கள். தோல்வியான எதிர்காலத்தை எண்ணி, செத்துப்பிழைப்பவர்களாவே இவர்கள். இன்று பெரும்பான்மை மக்களிடையே பிடித்துள்ள நோய் பதட்டம் ஆகும்.

அடுத்துள்ள உளப்பிரச்சினை மருட்சிக் கோளாறு (Delusinal Disorder) ஆகும். இவ்வாறான நோய்க்கு முக்கிய காரணம் மூளைச்செயலிழப்பு ஆகும். உணர்வுகள் குன்றுதல், கேள்வியுணர்வு குன்றுதல் என்பன ஏற்படும். முற்றாக காது கேளாதவர்களாகவும் இருப்பார்கள். இதனால் சமூகத்துடன் ஒத்துப்போக மாட்டார்கள். சந்தேகம் இவர்களுக்கு அடிக்கடி ஏற்படும். சிலவேளைகளில் தங்கள் வாகன சாவியை எங்கே வைத்துள்ளேன்? என்று ஞாபகம் கொள்ள மாட்டார்கள். யாரோ ஒருவர் அதனை எடுத்து சென்றிருக்க வேண்டும் என்பார்கள். செவிப்புலனும், உடற்புலனும் சேர்ந்து பரிதாப நிலைக்கு கொண்டு செல்கின்றன.

அடுத்துள்ள உளமாயநோய் (Schizophrenia) முதியோரிடையே காணப்படும் மிக கொடிய நோயாகும். மனம் பிளவுபடுகின்ற சூழ்நிலை இங்குள்ளது. பொதுவான சீர்குலைவுகள் பலவாகும். அறிவு ஒழுங்கீனம் எண்ணத்தடங்கல், நேரற்ற சிந்தனை, ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு செல்லல், கவனமின்மை, மற்றவர் தொடர்பினை அறுத்தல், தனிமையை விரும்புதல் நிகழும். பொய்த் தோற்றங்களை கண்டுகொள்வர். தனக்குள் யாரோ கதைப்பதை உணர்வார்கள். தன்பாட்டில் சிரிப்பார்கள். தன்பாட்டில் கதைப்பார்கள். தனக்கெதிராக சதி செய்கின்றார்கள் என கோபம் கொள்வார் கள். கடவுள் குரல் கொடுக்கிறார், பிசாசு கதைக்கிறது, அயலவர் கதைக்கிறது என்றெல்லாம் சொல்வார்கள். இந்நோய்க்கு நீரிழிவு, பரம்பரை அலகுகள், சூழ்நிலைகள் காரணமாகலாம்.

நித்திரைக்கோளாறு (Sleep Disorders) முதியோர்களிடையே மிகப்பெரிய பிரச்சினையாகும். இரவில் நித்திரையின் போது நிகழும் நித்திரையின்மை (Insomnia) யும், பொருத்தமற்ற வேளையில் நித்திரையும் (Hypersomnia) ஏற்படும். சிலருக்கு நித்திரைப்பயம், நித்திரையில் நடத்தல் (Sleep walking), திடீர் நித்திரையிழப்பு (Sleep apnea) ஏற்படு கின்றன. பொதுவாக உளத்துடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளே இவையாகும். தற்கொலை (Suicide) உணர்வும் முதியோர்களது உளவியல் பாதிப்பு ஆகும். கடுமையான நோய், நம்பிக்கையின்மை, சமூகத்தில் தனிமை, அன்புள்ளோர் இழப்பு, நிதிநெருக்கடி, உளச்சோர்வு போன்ற காரணிகளால் இவ்வாறு நடந்து கொள்வர். பொதுவாக இளையோர்களை விட மூன்று மடங்கு இவர்களுக்கு இவ்வுணர்வுண்டு. பொதுவாக வெள்ளை இனத்தவர் ஏனையோர்களை விட கூடுதலாக தற்கொலை செய்கின்றனர். படுக்கையில் நோயாளியாகி விட்டால் ஒவ்வொரு நாளையும் கடத்த முடிவதில்லை. மருந்து செலவும் அதிகம். சொந்த வாழ்வினை முடிக்க துணிவர்.

முதுமையும் பாலியல் உணர்வும் (Sexuality and Aging) மிகவும் சிலருக்கு மனப்பிரச்சினையை தோற்றுவிக்கலாம். மற்றவர்கள் போல் முத்தமிட முடியவில்லை. உடலுறவு கொள்ள முடியவில்லை என எண்ணுவர். 15 வீதமானவர்கள் 65 வயதுக்கும் கூடினாலும் பாலியல் உணர்வு கொண்டுள்ளனர். சிலருக்கு அதுபற்றி கதைப்பதில் ஆசை ஏற்படும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இத்தகைய உணர்வில் வயதில் வேறுபாடுண்டு. பாலியல் உணர்வால் பாதிப்புற்ற பலர் உளவியல் ரீதியிலும் பாதிப்புறுவர்.

உடல் - உள பாதிப்புறுபவர்கள் மருத்துவர்களின் ஆலோசனை பெறுவது இன்றியமையாதது. உடல் மருத்துவர்கள் பொதுவான ஆய்வுகளிலும் விசேட மருத்துவர்கள் விசேட சிகிச்சை துறையிலும் ஈடுபடுவர். உளவியக்க சிகிச்சை (Psychodynamics therapies) இன்று பல வழிகளில் உதவுகின்றது. வயோதிபர் இல்லங்கள் மற்றும் உளமருந்து நிலையங்கள், உளமருத்துவ நிபுணர் நிலையங்கள், ஆலோசகர் மன்றங்கள் நிறையவே உருவாகி வருகின்றன. முதியோர்கள் இவற்றினை பயன்படுத்த முன்வரவேண்டும். அத்துடன் நண்பர்களுடன் உரையாடல், தியானம், யோக பயிற்சிசெய்தல், இசையை கேட்டல் என்பனவும் முக்கியமாகும். முதுமையிலும் இளமையாக வாழ்வதற்கு நிறையவே சந்தர்ப்பங்கள் உண்டு.

# ஓ.மு - ஓ.பி

36ஆம் பக்கத்தொடர்ச்சி

விருட்சமாக வளர்ந்து விட்டது. ஊழல் பெருச்சாளிகளையும் அமெரிக்க சார்பு தலைகளையும் உருட்டி முழுமையான முஸ்லீம் சமூகத்தை உருவாக்க ஒரு பகுதி முஸ்லீம் சமூகம் விரும்புகின்றது. ஒரு பெரிய இயக்கமே உருவாக்கப்பட்டு விட்டது. ஒசாமாவின் மரணம் கொழுந்து விட்டெரியும் தீ மேலும் பெருகவே உதவி செய்யும். ஓய்வாக இருந்ததென்று கருதப்படுபவரை கொன்று முஸ்லீம் தீவிரவாதத்தை வளர்க்க உதவிசெய்துள்ளது அமெரிக்கா.

ஒசாமாவின் பின் முஸ்லீம் தீவிரவாதம் வளரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

Attacks linked to al-Qaeda

• 1998 - 231 killed and 5,000 injured by bombings at US Embassies in Kenya and Tanzania
• 2000 - Suicide attack on the USS Cole in Yemen killed 17 sailors and injured 39
• 2001 - Hijacked planes flown into World Trade Center, Pentagon and into a field in Pennsylvania. Nearly 3,000 killed
• 2002 - Bali bombings. Two bombs exploded killing 202
• 2003 - Suicide bombings at housing compounds for foreigners in Saudi capital Riyadh killed 34
• 2004 - Madrid commuter train bombings. More than 200 killed and 1,500 wounded
• 2005 - London transport bombings. 52 killed and more than 700 injured

## *Attacks Attributed To Al-Qaeda: 1992-2008*

**Global reach**

Attacks attributed to al-Qaeda outside Afghanistan and Iraq, 1992 to 2008*

| Date | | Location | Description | Number killed† |
|---|---|---|---|---|
| 1992 | December | Aden, Yemen | Hotel bombing | 2 |
| 1993 | February | New York | World Trade Centre bombing | 6 |
| | October | Mogadishu, Somalia | Ambush of US forces | 18 |
| 1994 | June | Mashad, Iran | Shia shrine bombing | 27 |
| 1995 | November | Riyadh, Saudi Arabia | Truck bomb | 7 |
| 1998 | August | Kenya and Tanzania | US embassies bombed | 301 |
| 2000 | October | Aden, Yemen | *USS Cole* bombing | 17 |
| 2001 | September | New York, Virginia and Pennsylvania | 9/11 attacks | 3,000 approx. |
| 2002 | April | Djerba, Tunisia | Synagogue bombing | 21 |
| | May | Karachi, Pakistan | Hotel bombing | 10 |
| | June | Karachi, Pakistan | US consulate bombing | 11 |
| | October | Yemen coast | *Limburg* oil tanker bombing | 1 |
| | October | Bali, Indonesia | Nightclub bombings | 202 |
| | November | Mombasa, Kenya | Hotel bombing | 15 |
| 2003 | May | Riyadh, Saudi Arabia | Expatriate compound bombing | 35 |
| | May | Casablanca, Morocco | Multiple bombings | 45 |
| | August | Jakarta, Indonesia | Hotel bombing | 16 |
| | November | Riyadh, Saudi Arabia | Car bombs | 17 |
| | November | Istanbul, Turkey | Synagogues bombed | 57 |
| 2004 | February | Philippines | Ferry bombing | 116 |
| | March | Madrid, Spain | Train bombings | 191 |
| | April | Riyadh, Saudi Arabia | Government building bombing | 3 |
| | May | Yanbu, Saudi Arabia | Refinery attack | 5 |
| | May | Khobar, Saudi Arabia | Expatriate compound attack | 22 |
| | December | Jeddah, Saudi Arabia | US consulate attack | 5 |
| 2005 | July | London | Underground/bus bombings | 56 |
| | July | Sharm el-Sheikh, Egypt | Resort bombings | 88 |
| | November | Amman, Jordan | Hotel bombing | 63 |
| 2007 | April | Algiers, Algeria | Car bombs | 33 |
| 2008 | June | Islamabad, Pakistan | Danish embassy bombing | 6 |


Sources: Press reports; Congressional Research Service *Later information unavailable †Including perpetrators

# சிறீ சத்யசாயி பாபா...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

அப்போது இது நடந்தது. சமஸ்தாலோக பஜனை. காற்றை நிரப்பிய நேரம் சுவாமி தனது கைகளை உயர்த்தினார். அது வழக்கமான ஆசிவழங்கும் அபயகரமல்ல. அவர் இருகரங்கூப்பி வணங்கினார். அவர் ஒரு அழகான செய்தியை யாவருக்கும் தெரிவித்தார். 'யாவரிலும் உள்ள இறைவனை வணங்குங்கள்' அவ்வேளை வேதபாராயணமான "சகஸ்ர சீர்ஷ புருஷ" என்ற வாக்கியங்கள் என் இதயத்தில் ஒலித்தன. எமது பாரத பண்பாட்டில் ஒருவர் ஒரிடத்தை விட்டு நீங்கும் போது இவ்வாறு கைகூப்பி விடைபெறுவது வழக்கம்.

சுவாமி எவ்வாறு தனது மகாசமாதியைக் காட்டினார் என்பதை நான் உணர்ந்தபோது மயிர்க்கூச்செறிந்தது. அப்போது சுவாமியின் வாக்கு நினைவுக்கு வந்தது.



'மடையா நீ பார்த்தாய் எனினும் நீ பார்க்கவில்லை'. அன்றும் நான் வழக்கம்போல் படங்கள் எடுத்துக் கொண்டிருந்தேன். இப்போது அப்படங்களைப் பார்க்கும் போது ஆறுதலாகவும் ஆச்சரியமாகவும் உள்ளது. இவை சுவாமி தனது திட்டங்களை அறிந்திருந்தார் என்பதைக் காட்டின. அவர் சுகமாக இருந்த போது வைத்தியசாலைக்குச் செல்வதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே தனது தீர்மானத்தைக் காட்டியிருந்தார். அவர் தீர்மானத்தைக் காட்டியவேளை தனது எதிர்பார்ப்புக்களையும் காட்டியிருந்தார். அவர் எமது வாழ்க்கை தனது செய்திகளைப் பிரதிபலிப்பதாகவும் அவரது இறுதி ஆசீர்வாதம் எவ்வாறுதான் பிறரிலுள்ள கடவுளைக் கண்டது போல் நாம் யாவரும் அவரைக் கடவுளாகக் காண வேண்டுமெனக் கேட்டுக் கொள்வது போலிருந்தது. அவர் எம்மை வணங்கியது போன்று நாம் அவரை எப்போதும் வணங்க வேண்டும். அவர் செய்ததைப் போன்று நாம் யாவரையும் நேசித்துச் சேவை செய்ய வேண்டும்.

அன்று நான் பெற்ற அனுபவத்தையும், உள்ளுணர்வையும், ஆசீர்வாதத்தையும் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளும் வண்ணம் இப்படத்தைப் பிரசுரிக்கிறேன். நாம் யாவரும் அவர்காட்டிய தூய அன்பெனும் செய்தியை யாவருக்கும் செலுத்தி வாழ்வோமென நாம் சங்கற்பம் செய்வோமாக. எனது கண்களிலிருந்து கன்னம் வழியே கண்ணீர்த் துளி வழியும்போது எனது குருதியில் ஒரு தீர்மானம் ஓடுகிறது. அதுதான் 'அவரை நேசிப்பதுடன் எல்லோரிலும் அவரைக் காண்பது'."

# கருணாநிதி, ஜெயலலிதாவுக்குக் கொடுத்த பரிசு

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2011 முடிவுகள்

எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி

ஐ.பி.எல் 4-ஐக் காட்டிலும் 13-05-2011 அன்று காலை முதல் நள்ளிரவு வரை தொலைக்காட்சி ஊடகங்களில் காட்டப்பட்ட தமிழ்நாட்டு சட்டமன்றத் தேர்தல் 2011 முடிவுகள் அதிக பார்வையாளர்களைப் பெற்றிருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். காரணம், அரசியல் விளையாட்டுகள், கிரிக்கெட்டைக் காட்டிலும் சுவாரஸ்யமானவை. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தேர்தல் முடிவுகள் 'ஒரு பக்க விளையாட்டாகவே' முடிந்து விட்டது. செல்வி. ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணி 234 இடங்களில் 203 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. முக்கால்வாசிக்கும் அதிகமான இடங்களில் அதிமுக அணி அமோக வெற்றி அடைந்து விட்டது. தி.மு.கவுக்கும் அ.தி.மு.கவுக்கு மிடையே நடந்த இப்போட்டி, கனடா கிரிக்கெட் அணிக்கும் இன்றைய இந்திய கிரிக்கெட் அணிக்குமிடையே நிகழும் போட்டியைப் போலிருந்தது.

செல்வி ஜெயலலிதா இம்மாபெரும் வெற்றிக்கு யாருக்கு நன்றி கூற வேண்டும்? 'பண நாயகம், லஞ்ச ஊழல் ஆகியவற்றை முறியடித்த தமிழ் மக்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன்' என்று அவர் சொன்னாலும்,



அவர் முக்கியமாக திரு.கருணாநிதிக்கும் அவர் குடும்பத்தினர் அனைவருக்கும் தான் நன்றி கூறியிருக்க வேண்டும்.

கம்ப ராமாயணத்தில் (திரு.கருணாநிதி மன்னிப்பாராக!) ஒரு நிகழ்ச்சி வருகிறது. இந்திரசித்து நிகும்பலை யாகம் செய்யத் தொடங்குகிறான். அந்த யாகம் வெற்றிகரமாக முடிந்துவிட்டால், அவனை யாராலும் வெல்ல முடியாது. இது அறிந்து, வீடணன் இராமனுக்கு இச்செய்தியைச் சொல்ல, இலக்குவன், இந்திரசித்து இடம் நாடி, யாகத்தைக் கலைத்து விடுகிறான். பிறகு, இளவல், இந்திரசித்து தலையை இராமன-்டம் சமர்ப்பிக்க, இராமன் கூறுகின்றான்: "இவ்வெற்றிக்குக் காரணம், நீயோ அல்லது உன்னுடன் துணைக்கு நின்று போராடிய அநுமனோ அல்லது எந்த தெய்வமோ இல்லை. இது வீடணன் தந்த வெற்றி."

அதுபோல், தமிழ் நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளாகக் குடும்ப ஆட்சியும் அதனோடு இணைந்த வரலாறு காணாத லஞ்ச ஊழலும் நடைபெறாமலிருந்திருந்தால், செல்வி.ஜெயலலிதாவால் இது போன்ற ஒரு மாபெரும் வெற்றியை அடைந்திருக்க முடியுமா? இதற்காகவாவது அவர் திரு. கருணநிதிக்கும் அவர் குடும்பதினருக்கும் நன்றி கூற வேண்டும். எதற்குக் கருணாநிதி மன்னிப்பாராக என்று சொன்னேன் என்பது புரிகிறதா? ஒன்று, அவருக்குப் பிடிக்காத இராமாயணத்திலிருந்தும் மேற்கோள் காட்டியது. இரண்டு, அவரை வீடணனோடு இணைத்துப் பேசுவது.

செல்வி.ஜெயலலிதாவின் வெற்றியின் பிரும்மாண்டத்தைப் பார்க்கும்போது, தமிழ் மக்களின் கோபம்தான் விசுவரூபம் எடுத்தது தெரிகிறது. 1977இல், சரித்திரப் புகழ் பெற்ற 'எமெர்ஜென்ஸி'க்குப் பிறகு, இந்திராவின் மீது இந்திய மக்கள் தங்கள் சினத்தை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரிவித்தது போல தமிழ் மக்களின் கோபம் இத்தேர்தல் முடிவுகளில் வெளிப்படையாகத் தெரிகிறது. இப்பொழுது புரிகிறதா, ஜனநாயகம் சர்வாதிகாரத்தைக் காட்டிலும் எச்சூழ்நிலை யிலும் சிறந்ததென்று?

திரு.கருணாநிதி, தினம் ஒளிவு மறைவு இன்றி அந்தரங்க 'டைரி' எழுதும் பழக்கம் உடையவராக இருந்தால், அவர் 13-05-2011 அன்று இரவு இவ்வாறுதான் எழுதியிருப்பார்: 'இத்தேர்தல் முடிவுகள் என்னை வேதனைக்கு உள்ளாக்கியிருக்கும் என்று பலர் தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் எனக்கு மகிழ்ச்சிதான். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு எனக்குப் பிறகு முதலமைச்சர் யார், அழகிரி யா, ஸ்டாலினா என்ற கேள்வி எழுவதற்கு இடமேயில்லை!'

# தோமஸ் யங்கின்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

மாறி வருவதால்தான் 'யங்'கின் பரிசோதனையில் பல ஒளிர்வான பட்டைகள் மாறிமாறித் தோன்றின. இதனை அடிப்படையாகக் கொண்டே, அதாவது ஒளியானது அலைகளுக்குரிய சிறப்பான இயல்பான ஆக்கும், அழிக்கும் தலையீட்டு விளைவுகளைக் காட்டுகின்றது என்பதை பரிசோதனை மூலமாகக் காட்டி, 'யங்' ஒளியானது அலை வடிவினது என உறுதிப்படுத்தினார். அத்துடன் அவ்வொ-ளியலையின் அலைநீளத்தினையும் 'யங்' கணித்துப் பெற்றார். ஒளியலையின் அலைநீளம் மில்லியனில் ஒரு பகுதி மீற்றர் என 'யங்'கின் கணிப்புகள் கூறின.

ஆக, இருநூறு ஆண்டு ஆட்சியில் இருந்த நியூட்டனின் துணிக்கைக் கருதுகோள் யங்கின் இருதுளைப் பரிசோதனையின் பயனாக முடிவுக்கு வர, ஐகனின் ஒளியின் அலைக் கருதுகோள் நல்ல நிருபனத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவை இப்படியிருக்க, இதே காலப்பகுதியில்தான் இன்று மிகவும் பிரபலமானதும் பெரிய அளவிற் பாவனையில் இருப்பவையுமான மின்காந்தவலைகள் இனம் காணப்பட்டன. அத்துடன் அது ஒளியின் அலைக் கொள்கைக்கும் வலுச் சேர்த்தது. அதனை இனிப் பார்ப்போம்.

அடுத்த தடவையில் மிகுதியைத் தொடருவோம்.



நகைச்சுவைத் தொடர் 223

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்




கைக்கு வர முன்னே நெய்க்கு விலைபேசேல் என்று சிறுவயதில் எப்பவோ படித்தது உலகருக்கு ஞாபகம் வந்தது தேர்தல் என்னது அல்ரா சவுண்ட் இல்லாத காலத்தில் குழந்தை பெறுவது போல பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா அல்லது இரட்டைக் குழந்தையா என்று ஒருவருக்கும் தெரியாது அதுபோலத்தான் கனேடிய இந்திய தேர்தல் முடிவுகள் மனிதன் போடும் மனக்கணக்கு வேறு கடவுள் போடும் கணக்கு வேறு அதிமுக வின் வெற்றி பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது




உலகரும் முருகேசரும் பத்திரிகைகள் வாசிப்பதும் ரி.வி. ரேடியோக்களைக்கேட்டு காரசாரமாக உலக அரசியல் காரசாரமாக வாதிடுவதுண்டு. ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் தங்கள் பாட்டில கருத்துக்கணிப்புக்களைச் சொல்லிக் கொண்டேயிருந்தனர்



முருகேசர் சொன்னார் உலகு பணம் பத்தும் செய்யுமென்பார்கள் பணம் கொடுத்து வாக்கு பெற நினைத்தவர்களை தேர்தல் ஆணையம் பின்லாடனை அமெரிக்க உளவுத்துறை தொடர்ந்ததுபோல கண்காணித்தால் பணமின்றி ஒன்றும் செய்யமுடியவில்லை தோல்வியென்பதை விட படுதோல்வி.



இங்கே நடந்தது அடுத்து தொலைக்காட்சித் தொடரில் வருவது

இங்கே நடந்தது என்ன? இனித்தான் பலவித செய்திகள் வரும் என சொல்லி முடித்தார் முருகேசர்

'ஒரு வார்த்தை பேச ஒருவருடம் காத்திருந்தேன்' பாடல் வானொலியில் யாரோ விரும்பிக்கேட்ட பாடலாக ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. ஒரு வார்த்தை பேச ஒருவருடம் ஆனா பின்லாடனைப்பிடிக்க 10 வருசமாச்சு அன்னம்மாக்கா என்று சொல்லிச்சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

உலகரின் மனம் வரப்போகும் கோவில் கொடியேற்றம், தேர் திருவிழாக்களைக் கணக்குப்பார்த்துக்கொண்டிருந்தது…ஆனால் பல முகங்களைக்காண முடியாதென்று அவரது




மனம் கூறியது. பழைய முகங்களில் மறந்தது, பல மறைந்தது, சில அதுமட்டுமல்லாமல்.. உலகநாடுகளில் எந்தெந்த மூலை முடுக்கெல்லாம் உறவினர்கள் இருக்கின்றனரோ பேஸ் புக்கில் புது உறவாக்கி அந்தந்த நாடுகளுக்கு பறக்கத் தொடங்கிவிட்டனர்..

முகம்தெரியாதவர்களையெல்லாம் தேடிப்பிடித்து புது உறவாக்கும் பேஸ் புக்கால் பல உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றன.. இளம்கன்றுகள் பயமறியாதென்பதுபோல. தேவையற்ற தொடர்புகளையேற்படுத்தி வாழ்க்கையைச் சிதைப்பவர்கள் பலர். சில நாடுகளில் பேஸ்புக்கையே தடை செய்துள்ளனர்.




உலக மக்களுக்குப் பிரச்சினை வந்தால் ஐ.நா. சபையிடம் முறையிடுவார்கள். அந்த ஐ.நா. சபைக்கே அகிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தினால் அவர்கள் யாரிடம் போவார்கள்?
இலங்கைப் பிரச்சினை ஒருபுறம்.



உலகரின் விரல் ரேகைகள் அழியுமளவிற்கு சனல்களை மாற்றிமாற்றி உலகச் செய்திகளைப்பார்த்துக்கொண்டிருந்தார்.

மே மாதம் சாதாரண மாதமல்ல.
எகிப்தில் நடந்தது சரியா தவறா?
கடாபிக்கு நடத்திய தாக்குதலில் அவரது மகனும் பேரனும் இறந்தது சரியா தவறா?
பின்லாடன் சரணடைய வந்தாரா ஏன் கைதுசெய்யாமல்
சுட்டனர் என தனித்தனியாக அவரது மனைவிமார் புலம்பல்
அரபு நாடுகள் முழுவதும் ஆர்ப்பாட்டமும் அமெரிக்க எதிர்ப்பலைகள்



ஆசையே துன்பத்திற்குக்காரணம் என்று சொன்ன புத்தர் பிறந்தது, ஞானம் பெற்றது...




எமது சொந்தமண்ணிலேயே மணிக்கூடு சுற்றி வந்து 24 மணித்தியாலம் காட்டுமுன் எண்ணிலடங்காத்தமிழர்கள் எண்ணற்ற தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டு 24 மாதங்களாகிறது.



உலகையே ஆண்ட விக்ரோறியா மகாராணி பிறந்ததினம்
இளவரசர் வில்லியம் திருமணம்
எல்லாம் மாற்றி மாற்றிப் பாத்துக்கொண்டிருந்தா




செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் மனதுக்குள் புகைந்து கொண்டிருந்தது. உலகர் மாறி மாறி உலகச்செய்திகள் பார்ப்பதால் அழுகைவரும் நாடகங்கள் பார்க்க முடியவில்லையே என்பதால் வந்த அழுகையையும் அடக்கிக்கொண்டிருந்தனர்.







